மலர் 4. ரிஜிஸ்டர் நெ. M. 3157.

# சிவ பக்தன்.

மாதவெளியீடு

## பவ—வருஷம் கார்த்திகைத்—திங்கள்

தியான சுலோஹம்.

அத்யமே சபலம் ஜன்ம அத்யமே சபலம் தப :
அத்யமே சபலம்க்ஞானம் சம்போத்வத் பாததர்சனத்.




பத்திராதிபர்:

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.

# வேண்டுகோள்.

ஆஸ்திக சிகாமணிகளான சிவபக்தர்களாயுள்ள பிரதியொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது மானிடர்களின் முதற் கடமையும், முக்கியகடமை (பிரதான முறைமை) யாகும். ஆகையாலிதைக்கண்ணுறும் அன்பர்கள் ஒவ்வொருவரும் வருட சந்தா ரூ. 1—8—0 மணியார்டர் செய்து சந்தாதாரராகச்சேர வேணுமாய் அன்புடன் விண்ணப்பம் செய்துக்கொள்ளுகிறேன்.

பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதால் அதிக சிலவும், வீண் சிரமமுமேற்படுகிறபடியால்அன்பர்கள் வருடசந்தா ரூ 1-8-0 முன்னதாகவே மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது. ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிகைக்கு சிலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த(உட்)கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் படித்தால் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும். (மிருதியாக விளங்கும்)

## சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்தியா, பர்மா, சிலோன், முதலான உள்நாடுகளுக்கு | ரூ. | 1—8—0 |
| " " | பிணங்கு, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, முதலான வெளி நாடுகட்கு | ரூ. | 2—8—0 |
| தனிப் பிரதி | ... ... ... | 1-க்கு | 0—2—0 |
| ,, | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது | | 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும்

பத்திரிகையை வி. பி. போஸ்டில் அனுப்புவதில்லை. ஆகையால் சந்தா தொகையை மணியார்டர் செய்தனுப்பவேண்டியது.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ. | 5—0—0 |
| அரைப்பக்கத்திற்கு | ரூ. | 3—0—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ. | 1-12—0 |

நீடித்த விளம்பரத்திற்கு எழுதி தெரிந்துக்கொள்ளவும்.

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.



ஆசிரியர்:—

**வை. செ. குருசாமி ஐயர்,**

வைத்தியம், குகை, சேலம்.

சுலோஹம்

*ஆர்த்ராருத்ரோ மிருகவ்யாத : இல்வலச்ச ; ரேஸ்சிர :*
*அத்யாபிதி வதுருஸ்யம்தெ மிருகசீர்ஷெ மிருகஸ்சிர :*

அப்பரமேஸ்வரன் (15) வது கிராதலீலையில் அப்பிரமன் அஞ்ஞானியாகி காமவிகாரத்தினுல் தன்மகளைச் சேரவேண்டுமென்றுக் கேட்க அவள் இவன் கைக்குக்கிடைக்காமல் பெண் மான் உருவெடுத்து ஓடிப்போனுள், இப்பிரம்மன் ஆண்மானின் உருவெடுத்துத் தூரத்திக் கொண்டுபோக, அவள் சிவனிடத்தில் முறையிட அக்ஷணமே கிராத ருத்திரன் அந்த ஆண்மானி தலையை வெட்டி ஆகாயத்தில் விசிரினுர், இது தற்காலமும் பிரத்யக்ஷமாக ஜனங்களுக்குக் காணுமென்று ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, ஆகையாலந்தப் பிரம்மன் பசு வென்பதே சித்தாந்தம், இப்படிப்பட்ட பிரம்மாவே • பசுவான பிறகு இவராலுற்பத்தி செய்யப்பட்டவர்களெல்லோரும் பசு வென்பதற்குச் சந்தேஹமில்லை. இப்படிப்பட்ட பிரம்ம சிருஷ்டியில் பிறந்தவர்களெல்லோரும் பசுவென்பதே சித்தாந்தம். இன்னுமிந்த பசுக்களான தேவ தானவ மானவ ரெல்லோரும் நித்தியசம்சாரிகளென்பதற்குப் பிரமாணம்.

சுலோஹம்

*சம்சார துக்க காந்தாரெ நிமஜ்ஙஸ் சாமஹாதபே*
*சக்ர வத்ப்ர மதே தேவி லிங்கார்ச்சன விவர்ஜ்ஜித :* (1)

ஆலிங்கிகளான பவிகள் சிவலிங்க பூஜகரல்லாத காரணம் இச்சமுசாரதுக்கமென்னும் மஹாரண்பத்துள் தாபத்திரயமென்னும் மஹா வெய்யலில் முழுகி குயவன் சக்கரத்தைப்போல அநேக ஜனனமரணங்களில் சுழலு கிறுர்களென்று பரமேஸ்வரன் சிவ கீதையில் சொல்லியிருக்கும் காரணமிவர்கள் நித்தியசம்சாரிகளென்பதே சித்தாந்தம், இன்னும்

## (13) வது, 3 மதங்கள்

அதோ சிருஷ்டிஜரான மனிதர்களுக்குள் பிராம்ணன் முதல் மிலேச்சன் கடையான மனிதர்களுக்குள் மூன்று மதங்களாயிருக்கும், அவையெது எது வென்றுல் (1) துவைத மதமென்றும், (2) அத்துவைத மதமென்னும் 3, வசிஷ்டாத் வைதமென்னும், மூன்று விதமாயிருககும் இன்னுமிந்த அத்வைதமென்றுலிரண்டு, அந்த இரண்டு என்னவென்றுல் ஜீவாத்மா, பரமாத்மா, வென்றிரண்டு இவை யிரண்டென்பதற்கும் பிரமாணம்

துவைத மதம் சுருதி (1)

*பிம்ப பிரதி பிம்ப யோரீவ ஜீவ பரமேஸ்வரயோ பேத :*

இன்னுமிச்சீவேஸ்வரருக்கு லக்ஷண மென்ன வென்றால் அந்த ஈஸ்வரனுக்குப் பஞ்ச லக்ஷணங்களுண்டு, அவையாவன (1) சத்து (2) சித்து (3) ஆனந்தம் (4) நித்தியம் (5) பரிபூர்ணம் என்பவைகளே பஞ்சலக்ஷணங்கள், இன்னும் சீவனுக்குப் பஞ்ச லக்ஷணங்களிருக்கும், அவையாவன, (1) அசத்ரூபம் (2) அஞ்ஞானம் (3) துக்கம், (4) அநித்தியம், (5) கண்டிதம் அல்லது அபூரணம் என்னுமிவ்வைந்து லக்ஷணங்களுள்ளவனே ஜீவன், இப்படியான காரணம் இச் சீவனுக்கும் பரமனுக்கும் ஏகத்வம் பொருந்தாதென்று சொல்லுவர், இதற்குப் பிரமாணம்

### உத்தர மீமாம்சை சுலோஹம்

கர்மிணாந்து தூமாதி மார்க்கேன பிதுருலோக கதனும்
உபபோகேன கர்மக்ஷயேசதி பூர்வக்ருத சுகிருத
துஷ்க்ருதானு சாரேண ப்ரஹ்மாதி ஸ்தாவரந் தேஷு
புனரோத் பத்தி :

என்றுச் சொல்லியிருப்பதால் இச் சீவனுக்கு பிறந்திறந் துழலுவதே யல்லாது ஸ்திரத்வம் இல்லையான காரணம், இச்சீவன் வேறு ஈஸ்வரன் வேறென்பதே சித்தாந்தம், இதற்கின்னொரு பிரமாணம்

### சுருதி சுலோஹம்

மனோ புத்தி சமன் விதம் ஆபஞ்சீக்ருத புதேத்தம்
சூட்மாங்கம் போகசாதன மிதி தச்ச பரலோக யாத்ரா
நிர்வா : கம்மோக்ஷ பரியந்த ஸ்தாயத்வாத்

இதின் அர்த்த மென்ன வென்றால் ஸ்தூலமான பூதங்கள் ஐந்தும் விட்டு சூட்மமான பஞ்ச கர்மேந்திரியங்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்சவாயுக்கள், மனம், புத்தி, இந்த (17) தத்துவங்களினால் கூடின சூட்ம சரீரியான ஜீவனே யோக்கியனாகி, சுகதுக்கங்களைக் குறித்து நிலையில்லாது இந்த லோகம், பரலோகங்களுக்குத் திரிந்துக்கொண்டிருப்பவனான காரணம் இச்சீவனுக்குத்வைத னென்பதே சித்தாந்தமென்று துவைத சித்தாந்தத்தில் சொல்லும், இதற்கின்னொரு பிரமாணம்

### சிவகீதை சுலோஹம்

தேவதிர்யங் மனுஷ்யாதி நாநாயோனி விபேதத :
பாப புண்ய கிரமேணைவ பிரமம்திஹி சரீரிண :

இதின் அர்த்தமாவது தேவ, மனுஷ்ய, மிருக, பக்ஷி, கிருமி, கீட, பதங்க, கடையான நாநாயோனிகளின் வழியாக திரிந்துக்கொண்டிருப்பார்களென்று சிவகீதை சொல்லியிருக்கிறது, இப்படியிந்த துவைதரான ஜீவர்கள் என்றைக்கும் இஹ பர.

சுவர்க்க, நரக, சுக, துக்க, புண்ணிய, பாப, ஜனன, மரணங்களில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்களல்லாமல் இச்சீவனுக்கு பரமேஸ்வரனுல் ஏகத்வம் கிடையாதென்பதே துவைத சித்தாந்தம்

## அத்வைத மத நிர்ணயம் (2)

அத்வைத மதஸ்தரான வேதாந்திகளெல்லாம் நாமே பிரம்மமல்லாது வேறே யொருவன் பிரஹ்மனும் வேறு ஒரு ஜீவனும் இல்லையென்றும், ஜீவன் வேறு பிரம்மம் வேறென்பது, துவைத பாவ மென்றும், நம்ம அத்வைத மதத்தில் என்றைக்குமில்லையென்றுச் சொல்வார்கள் சுருதி, (ஏகவோ நத்விதீய:) ஒருவனல்லாது இருவரில்லை, என்னும் சுருதி வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு தானே பிரஹ்மனென்று தன்வாயால் தானே சொல்லிக்கொள்வது, அசம்பவதோஷமாகும். அதெப்படியென்றுல், சுருதி, (கோரே கச பத்ய மசம் பவ:) அசம்பவ, மென்றுல் என்றைக்கும் பிறக்காதது பிறந்ததென்பதே அசம்பாவிதம், அது எப்படியென்றுல் பசுவிற்கு ஒரே குளம்பு என்று சொல்வதே அசம்பவ தோஷமாகும். இது எப்படியோ அப்படி நான் ஜீவனல்ல பிரஹ்மனென்னும் சொல்லானது ஆகாசத்தில் புஷ்பம் இருக்கிறதென்னும் சொல்லெப்படியோ அப்படி அத்தியந்தபாவமல்லாது நிஜமல்ல, இப்படியல்லாது ஒரே வஸ்து நிஜமானுல் இச்செகத்து சந்திரன் சூர்யன் கிரக தாரகாதிகள் எங்கிருக்கின்றன. தேவதானவரென்பவரெல்லாம் எங்கிருந்து வந்தார்கள், இப்படி ஒருவனே என்னும் வேதாந்த சாஸ்திரத்தை, வேதநாத்யசமுனி, ஒருவனே சொல்லியிருக்கிறுனல்லாது பின்யாரும் சொல்லவில்லை என்பதற்குப்பிரமாணம், என்னவென்றுல் கணுதகௌதமரென்னும் பிரபலருஷி(7)பதார்த்தங்கள் நித்தியமெனச் சொல்லியிருக்கிறுர், அவையெவை யென்றுல் (1)திரவ்யம்(2)குணம், (3) கர்மம் (4)சாமான்யம் (5) விசேஷம் (6) சமவாயம், (7) அபாவம் இவ்வேழுபதார்த்தங்களுக்கு நித்தியத்துவம் சொல்லியிருப்பதால் ஒருவர் வார்த்தை நிஜமல்ல இருவர் வார்த்தையே நிஜமென்று தர்ம சாஸ்திரங்கள் சொல்லியிருக்கிறது.

### சுலோஹம்

ஏகசாக்ஷிண கர்த்வ்யம் கர்த்வ்யம் பஹூ சாக்ஷிணம்

என்று சொல்லப்பட்டிருப்பதால், ஒருவர் வார்த்தை நிஜமல்ல, இதற்கு மற்றொரு சாக்ஷியம், ஒருவனைவிட இருவர்லேசு, பண்டிகையைவிட கல்யாணம் லேசென்று சர்வக்யனென்னும் கவி சொல்லியிருக்கும் காரணம், இன்னும் "ஜகன் மித்யம், ப்ரஹ்ம சத்ய" னென்னும் வார்த்தை என்றைக்கும் நிஜமல்ல இதற்கின்னெரு சாக்ஷியம்,

ஸ்காந்த புராணம்

ஜகத் சர்வம் மிதம் விப்ரா சுஸ்திதீ பவதித்ருவம்

இச்செகத் தென்றைக்கும் ஸ்திரமாயிராதென்று சூத முனிவர் ஸ்காந்த புராணம் சங்கர சம்ஹிதையில் சௌனகாதி ரிஷிகளுக்குச் சொல்லியிருக்கிறார். இதற்கின்னொரு பிரமாணம்,

சுலோஹம்

சாஸ்த்ரந்து த்விவிதம் ப்ரோக்தம் வைதிகம் லௌகிகம் சேதி
வைதிகம் ஈஸ்வரோக்தத்வாத் சர்வமேவ பிரமாணம்
லௌகிகம் த்வாப் ரோக்த ப்ரமாணம், அன்யதப் பிரமாணம்

எப்படியென்றால் ஈஸ்வரன் சொன்ன வேதாகமங்களெல்லாம் பிரமாணம், இன்னுமிருக்கப்பட்ட விஷ்ணு பிரம்மாதி ரிஷிகள் சொல்லியிருக்கும் சாஸ்திரங்களில் சிலது பிரமாணமும் சிலது அப்பிரமாணமுமாம், அது எப்படியென்றால் இவ்வுலகத்தில் தன்தன் சிநேகிதன் வார்த்தையே பிரமாணமும் அன்னியர் வார்த்தைகள், பிரமாண மல்ல வென்பதே சித்தாந்தம், இன்னும் முதல் அச் சிருஷ்டி பிரம்மா நானேபிரம்ம மென்று தன் தலையைச் சேதித்துக் கொண்டான். மற்றுமப்பிரம்மன் மானச புத்திரரான ஜனத்குமாராதிகள் "யதுருஷ்டம் தன்னஷ்ட" மென்னும் வாக்கியத்தைக்கேட்டு சாகாரமான பரமேஸ்வரனை விட்டு நிராகாரத்தையே நம்பி ஒண்டிகளானார்களென்பதற்கு பிரமாணம்

ஏகோத்தர சதஸ்தலே

ஆகாரவ னம்பெலெயோகி நிராகாரவ நம்பலாகது
ஆகாரவ நம்பத ஜசுதனு நிராகாரவ நம்பி வம்டியாத

இதல்லாது மறுபடி தக்ஷபிரம்மனென்னும் பக்ஷதக்கன் தானே பிரம்ம மென்றவிடத்தில் தன் தலைபோய் ஆட்டின் தலை வந்ததென்று ஸ்காந்த புராணம் தக்ஷகாண்டத்தில் சொல்லியிருக்கிறது, மற்றும் வேதவியாசர் சிவனைவிட விஷ்ணுவே பரப்பிரம்மமென்று தன்இரண்டு தோளையும் போக்கிக் கொண்டார். பிறகு விஷ்ணுவைவிட சிவனே அதிகமென்று பனிரண்டுதோள்களைப் பெற்றார் என்று சகல புராண சாஸ்திரங்களிலும் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பின்னுமிந்த உலகத்தில், யாராவது சிவ நிந்தை செய்தால் அவர்கதி இப்படியாகுமென்று இவ்வுலகத்தாருக்குத் தெரிவதர்க்காக அவ் வியாசமுனி வாங்கிக்கொண்ட (12) தோளில் ஒரு தோளை சுவர்க்க லோகத்திற்கனுப்பினார், மற்றொரு தோளை இந்த மத்திய லோகத்திலுள்ள லிங்கதாரிகள் தங்கள் நந்தித்வஜத்திற்கு கட்டிக்கொண்டு ஸ்மரிக்க வேண்டுமென்று வேதவியாசர் பிரதிக்ஞைபூர்வகமாக பரமேஸ்

வரரை வேண்டிக்கொண்டா ரென்று பவிஷ்யோத்தர புராணம், நைமிஷீயசாண்டில்யம், சர்வாதம் (6) வது அத்தியாயத்தில் ஸ்பஸ்டமாகச் சொல்லியிருக்கிறது, எப்படியென்றால்

பவிஷ்யோத்தர புராண சுலோஹம்.

தேஹீமெ நாதமௌ பாஹூ கல்பசாகாச மௌசிவ
நந்தீசோத் பாடித புஜௌ த்வஜே தேவ சகா 'சக (1)
போத்ரீம் தௌ ஷ்ட்ரம் புரா விஷ்ணோ: கங்காளம் ருகசர்மச
நாரசிம் ஹாஜினம் மாத்சியம் வாலம் கௌர்மாங்கிகம் விதெ: (2)
த்ருத்வாசி சர்வதே தத்வத் பத்வா பாஹூத்வ ஜீததா
திவிபூம் யாதிதம் தேவா கணபாகில யம்துமெள: (3)
ததாபுரஸ்தி திதாத்நோவான் பபாஷே கணபுங்கவான்
யூயமேகம் திவிபூஜாம் பூம்யாமேக மனுஷ்யச (4)
இதம் வரம் மமவிபோ தேஹீதி ப்ருவதோ முனெ:
ஸ்வர்ணதாடச மௌபாஹூ நாதனெ சங்கரோஹ்யதாத் (5)

இப்படியான காரணம் அத்வைத மதம் கண்டனமாயிற்று.

விசிஷ்டாத் வைதமதம் (3)

விசிஷ்டாத்வைதர் விவரம் எப்படியென்றால் ஒருவனே இருவர் அவ்விருவரும் ஒருவனே என்றிப்படிச்சொல்வதே விசிஷ்டாத் வைத மதம். இன்னும் ஒருவனே இருவரென்பது எப்படியென்றால் அந்த ஒருவனை பரமாத்மனே ஜீவனென்றும், பரமனென்றும், கர்த்த னெனறும், பிருத்ய னென்றும், தேவனென்றும் பக்தனென்றும், குரு வென்றும், சிஷ்ய னென்னும், இப்படி இரண்டு ரூபமானவன் ஒருவனேயல்லாது வேறேயில்லையென்று தெரிவதே விசிஷ்டாத்வைதம், இன்னு மிவர்கள் நடவடிக்கை எப்படி யென்றால் இவர் குருக்களானவர் சிஷ்யர்களுடைய ஊர்களுக்குப் போனால் அவர் சிஷ்யரானவர்களெல்லோரும் ஸ்நானஞ் செய்து சுசிர்ப்பூதராகித் தாங்களெல்லோருங்கூடி ஒரே கூட்டமாக அக் குருவின் சமீபம் போய் நமஸ்காரம் செய்யவும் அக்குரு இவர்கள் நமஸ்காரத்திற்கு பிரதி நமஸ்காரம் செய்வார், பின்பு எல்லோரும் எழுந்து சாரி சரி (வரிசை வரிசை) யாக உட்கார்ந்து பிறகு அக் குருவின் பாதத்தையும் சிஷ்யர் பாதங்களையும் பூசித்து அப்பாதங்களின் அபிஷேக ஜலத்தை ஒரே பாத்திரத்தில் நிறைத்துப் பின்பு அப்பாத்திர ஜலத்தை மஹாதீர்த்தமென்று அக்குருவும் சிஷ்யர்கள் சஹிதமாக ஸ்வீகாரம் செய்வார்கள், ஆனதால் இவர்களுக்குவிசிஷ்டாத்வைதரென்னும், பெயருண்டாயிருக்கிறது இன்னு மிவர்கள் யாரென்றால் வைஷ்ணவருக்குள் விஷ்ணு சம்பந்திகளும் ஊர்த்வ திரிபுண்ட்ரதாரிகளுமான ராமாநுஜ ரென்னுமொரு ஜாதி அச்சோள தேசத்திலிருக்கிறது,

(14)-வது ஊர்த்வ சிருஷ்டிஜர் (1)

இன்னும் ஊர்த்வ சிருஷ்டிஜரும் பதிகளும், நித்திய முக்தரும், அதிவர்ணாஸ்ரமிகளும் சிவாத்வைதரும் நிராபாரி வீர சைவரும் லிங்காங்கிகளுமான பஞ்ச மதஸ்தரின் நிர்ணயம்

வீரசைவ சப்தத்திற் கர்த்தம் (2)

*விசப்தே ஸோச்தெ வித்யா சிவ ஜீவைக்ய போதிகா*
*தஸ்யாம் ரமம் தெயே வீரா : வீரசைவ மிதிஸ் மிருதம்* (1)

*வேதாந்த ஜன்யக் ஞானம் வித்வேதி பிர கீர்த்தி த:*
*'தஸ்யாம் ரமந்தயே வீரா : வீரசைவ மிதிஸ் மிருதம்* (2)

*விசப்தோத்ர விகல்ப்பாதோ ரசப்தோ ரஹிதார்த்த த:*
*விகல்ப ரஹிதம் சைவம் வீரசைவ மிதிஸ் மிருதம* (3)

*சிவேன சஹரசம் பந்தம் சைவ மித்யுச்யதே புதை :*
*உபயோஸ் சம்புட பாவாத் வீரசைவ மிதிஸ் மிருதம்* )4)

வீ என்றால் சிவஜீவர் ஐக்யத்தையும் விகத்வத்தையும் போதிக்கும் வித்தையாகும், இன்னும் வீர யென்றால், விகல்ப ரஹிதமான க்ஞானம், இன்னும் வீ என்றால் வேதாந்த ஜன்னியக் ஞானம், இப்படிப்பட்ட ஞானத்தில் ரமிக்தவரே வீரசைவர்களா வார்கள்' இன்னும் கேவல சிவனிடத்தில் கூடினவரே சைவர்கள் என்றறியவும். இன்னும் சிவனும் வீரேஸ்வரனும் இருவராலுங் கூடியுள்ளதே வீரசைவமதம், இன்னுமிப்படிப்பட்ட வீரசைவ மென்பவர் (லிங்காங்கி) களே இந்த துவைதாத்வைத விசிஷ்டாத் வைதர் அல்லது சிவாத்வைத ரென்றறியவும், இதற்கு சுருதி பிரமாணம்,

சாம வேதம்

*ருத்ரோ பூத்வாய ஜேருத்திரம் நாருத்ரோ ருத்ர மர்ச்சயேத்*

இன்னும் ருத்திரனைப் பூசிப்பவன் முன்பு தானே ருத்திரனாகி அந்த ருத்திரனைப் பூசிக்கவேண்டுமேல்லாது தான் ருத்திரனாகாமல் அந்த ருத்திரனைப் பூசிக்கலாகாதென்று சாமவேத வாக்கியம் சொல்லியிருப்பதாலும், இன்னும்

சுருதி சுலோஹம்

*லிங்கம் பூத்வாய ஜேல்லிங்கம் நாலிங்கம் லிங்கமர்ச்சயேத்*

இன்னும் சுலோஹம்

*சிவேபூத்வாய ஜேஸ்டைவம் நாசிவோ சிவமர்ச்சயேத்*

மற்றும் சுலோஹம்

*யஜுர்வேத சதார்த்தாஷ்டே அஷ்டமாது வாகே*
*ஓம் நம : சிவாயச சிவதராயச*

பின்னும் சுலோஹம்

நிரயம் பகம் யஜாமஹே சுகம்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருக மிவபந்தனான் மிருத்யோர் மக்ஷீயமாம் ருதாத்

மற்று மின்னொரு சுருதி வாக்யம்

ருதம் சத்யம் பரப்பிரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபாயவை நம:

இப்படியாக வேதங்கள் சொல்லியிருக்கும் காரணம் வீரசைவ (லிங்காயுத)ர் இஷ்ட லிங்கத்தைத் தங்கள் ஹஸ்தத்திலேயே வைத்து பூஜிக்கவேண்டு மென்பதற்கு பிரமாணம்

ருக்வேத சுலோஹம்

அயம்மெ அஸ்த்தோ பகவான் அயம்மே பகவத்தர:
அயம்மெ விஸ்வ பேஷஜ்னே அயம்மே வாவிமர்ஷண: (1)
அபம் மாதா அயம் பிதா அயம் ஜீவாது ராகமத்
இதம் தவப்ரசரணம் சுபந்தோயேஹீ நிரேஹி (2)

இப்படியாக ருக்வேதம் சொல்லியிருப்பதால் இந்த லிங்காங்கிகள் தங்கள் வாமகரத்தி (இடக்கையி)லேயே ஸ்ரீருத்ர பஞ்ச பிரஹ்ம புருஷ சூக்தாதி மந்திரங்களினால் பூஜிக்கவேண்டு மென்பதற்குப் பிரமாணம்

கருட புராணம் உபரிபாக சுலோஹம (3)

வம்சாவளி பிரயாதானாம் லிங்கதாரண சாலினாம்
க்ஞானினாம் சிவபக்தானாம் சூத்ரத்வம் நைவவித்யதெ (1)
நமகேச மகேபஞ்ச பிரஹ்ம மந்த்ரேச வைதிகெ
தேஷாப்யதி காரோஸ்தி சிவதீக்ஷா ப்ரபாவத: (2)

இந்த லிங்காங்கிகள் ஸ்திதி கதியெப்படியென்றால் இவர்களுக்கு குருவினால் உற்பத்தியும், லிங்கத்தினால் ஸ்திதியும், ஜங்கமத்தில் ஐக்யமும், உள்ளவர்களான காரணம் இவர்கள் ஆசாரம் எப்படியென்றால் இவர்களுக்கு அஷ்டாவர்ணமே அங்கமாகி அஷ்டா வர்ண மென்றால் (1) விபூதி,(2)ருத்திராக்ஷம், (3)பஞ்சாக்ஷரம், (4) குரு (5) லிங்கம் (6) ஜங்கமம் (7) பாதோதகம், (8) பிரசாதம் இவைகளே அஷ்டாவர்ணங்கள்" இவைகளே அங்கமாகி உபசாரமே பிராணமாகி லிங்க ஜங்கம பூசையல்லாது இன்னொரு விரதம் நேமம் இல்லையாதலால் லிங்க போகோப போகிகளாயிருப்பதே இவர்கள் ஆசாரம், என்பதற்குப் பிரமாணம்

பக்தியாதிக்ய சுலோஹம்

லிங்காதஸ்ய சுரார்ச் சனாதி விமுகோ லிங்கப் ரசாதோப்ரபு:
லிங்கா லிங்கித விக்ரஹோ விஜயதெ ஸ்ரீவீர மாஹேஸ்வரா:

## லிங்க போகோப போகங்கள் (4)

லிங்கபோகோப போகங்கள் எதுவென்றால் முதல் தங்கள் இஷ்ட லிங்கத்திற்கு சமர்ப்பித்து பின்பு தாங்கள் ஸ்வீகரிப்பதே லிங்க போகோப போகம். இன்னும் இந்த லிங்காங்கிகள் சர்வேந்திரியங்களிலும் லிங்கங்களே நிலைத்திருக்கும் காரணம் லிங்க அவதாரமென்றே அறிய வேண்டியது, எல்லா விஷயங்களும் லிங்கார்ப்பித மென்றே அறிய வேண்டியது. மற்றும் விஷயங்களெது வென்றால் வஸ்திரம், ஆபரணம், ஆஹாரம், நித்திரை, ஸ்த்ரீசங்கம் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தங்களென்பதே விஷயங்கள், இதற்குப் பிரமாணம்

### சங்கர சம்ஹிதை சுலோஹம்

இந்த்ரியா தாகுதம் கிஞ்சித் யத்சுகம் தச்டி வார்ப்பிதம்
தத்ப்ர சாதந்து போக்தவ்யம் சுதிந்ரிய முகேனச (1)
யேனகந்தான் ரசான் ரூபான் சப்தான் ஸ்பர்சான் ரதிக்ரியா:
ஏதேனைவ விஜானாதி கிமத்ரபரி சேஸ்பதே (2)
ஏவம் லிங்கார்ப் பிதம் சர்வம் இதியோ வேத்தி தத்வத:
சோஸ்நுதே சகலான் காமன் நிபஸ்யாத் ப்ரஹ்மணா சஹா (3)
ஏததர்ஷண சத்பாவ க்ஞான வேதாந்த வாக்யஜம்
குரோபதேச தத்சாத்யம் நான்யதா சாஸ்த்ர கோபபி: (4)

இப்படியான காரணம் சகலேந்திரிய விஷயங்களெல்லாம் லிங்கார்ப் பிதங்களென்று சங்கர சம்ஹிதையில் உபரிபாகத்தில் வீரமாஹேஸ்வரர் தர்ம நிர்ணயாத்யாயத்தில் சொல்லியிருக்கிறது இன்னு மிதற்குப் பிரமாணம்

### வேதாந்த சுலோஹம்

சயேவ மாயாபரி மோஹிதாத்ம சரீரசம்வஸ்த்தாயக ரோதிசர்வம்
ஸ்த்ரீயன்னபானாதிவிசித்ரபோகை:சயேவஜாக்ராக்சரித்ருப்திமேதி

அந்த பரப்பிரமம் தானே மாயாமோஹிதாத்மகனாகி இந்த சரீரத்தி லிருந்து கரணேந்திரிய விஷயமான காரியங்களைச் செய்வான், மற்றும் ஸ்த்ரீயர் அன்னபானாதிகள் முதலான அநேக விசித்ரபோக ரூபங்களாகி அப்பரமேஸ்வரனே ஜாக்ராவஸ்தைதெசையினால் பரித்ருப்தியை யடைவா னென்று கைவல்லியோப நிஷத்து சொல்லும் இதற்கின்னொரு பிறமாணம்,

### சர்வ காலிகோப நிஷத்து சுலோஹம்

ஜாக்ர ஸ்வப்ன சுசுப்த்யாதி ப்ரபஞ்சம் யத்ப்ர காசதெ
தத்ப்ரஹ்மா மிதிவிஞ்ஞாத்வா சர்வபந்தை : ப்ரமுச்யதெ

என்று சொல்லும், இதற்கின்னொரு பிரமாணம்

பிருஹ தாரண் யோப நிஷத் சுலோஹம்

ததாச போக்தாச போக்யர் ச யேதத்ரிவிதம் பரப்பிரம்ஹ மேதத்

என்று சொல்லும், மற்றொரு பிரமாணம்.

வேத சுலோஹம்

ததா போக் தாஸ் வயம் சிவ.

என்றிப்படி வேதங்கள் சொல்லியிருப்பதால், சகலேந்திரிய விஷயங்களெல்லாம், லிங்கார்ப்பித மென்பதே சித்தாந்தம், இன்னும் பிரஹ்ம வென்னும் சப்தம் லிங்கத்துக்கு இருப்பதாலிந்த லிங்கத்திற்கும் அந்த பிரஹ்மத்திற்கும் அபேத மென்றே தெரிய வேண்டியது, இதற்குப் பிரமாணம்.

சுலோஹம்

ப்ரஹ்மேதி லிங்க மாக்யாதம், பிரஹ்மண : பதிரீஸ்வர :

இன்னும் ஸ்காந்த சுலோஹம்

ப்ரஹ்மண : பதிரீ சோவை ப்ரஹ்மைத லிங்க முச்யதெ,
பவித்ரம் தத்தி விக்யாதம் தத்ப்ரபுர் விஸ்ய தேஸ்வயம் (1)

மற்றும், பஞ்சப்பிரஹ்ம மந்திர, சுலோஹம்

ப்ரஹ்மாதி பதிர் பிரஹ்மா ணோதி பதிர் பிரஹ்மா
சிவோமே ஹஸ்த்து சதாசிவோ தேவதா,

என்றிப்படிச் சொல்லி யிருப்பதா லிந்த லிங்கத்திற்கு பிரஹ்ம வென்னும் சப்தம் பிரசித்தமாயிருக்கும், இன்னும்.

சிவாத்வைத நிர்ணம், (5)

வேத சுலோஹம் "த்பக்தோஹிம மாதிக : ,,

என்றால் என்னைவிட என்பக்தனே சிரேஷ்டனென்று வேதங்களில் சொல்லியிருக்கிறது, இன்னு மிதற்கு

வீராகம சுலோஹம்

லிங்காங்கீச மமப்ராணோ, லிங்காங்கி மமரக்ஷத :
லிங்காங்கீ மமகர்த்தாச லிங்காங்கீச மமப்ரபு :

என்று வீராகமத்தில் சொல்லியிருப்பதால் இப்படிப் பட்ட லிங்காங்கியே என் பிராணன். என் ரக்ஷகன், எனக்குக்கர்த்தன், எனக்குமேலானவன், இவனேயல்லாமல் மற்றொருவருமில்லை என்று வேதாகமங்களில் சொல்லக் காரணமென்ன வென்றால் அந்த பரசிவன் அநேக பிரம்மாண்டங்களையும் தானே தாங்கிக் கொண்டிருப்பவனல்லாது தன்னைத்தாங்கிக்கொண்டிருக்கும்சமர்த்தர் ஒருவரு மில்லாதகாரணம் இப்பக்தன் தன்னை லிங்காகாரமாகச்செய்து கரதலாமலகதோபாதியினால் (உள்ளங்கை நெல்லிக்கனிபோல)தன்கண்ட(கழு)த்தில் பாரமில்லாது நிராபாரமாகி ரித

துக்கொண்டிப்பவருஞனகாரணம் என்பக்தனே என்னைவிட சிரேஷ்டனென்று சொல்லியிருக்கிறார், மற்றொருபக்கத்தில் சொன்னதாவது "ஏகஏனவோத்விதீய:, என்றிப்படி சொல்லியிருப்பதால் பரஸ்பரம் விரோதங்காணும், இன்னொரு பக்கத்தில், என்ன சொல்லுகிறதென்றால்

### ஏகோத்தர சதஸ்தலே சுலோஹம்

*ஸ்வசக்தி க்ஷோபமாத்ரேண த்விவிதம் ஸ்தலமுத்பவம்*
*அங்கஸ்தலந்து ப்ரதமம் த்விதீயம் லிங்க நௌஜங்கம்,*

முதலில் தன்னுடைய சிற்சக்தியினாலிரண்டு ஸ்தலங்கள் பிறந்தன, அவையாவன, அங்கஸ்தல மென்றும், லிங்கஸ்தல மென்றும் இரண்டு, இன்னும் அங்கஸ்தலமே அநாதி, லிங்கஸ்தலமே ஆதி, இன்னும் அங்கமென்றால் பக்தன், லிங்கமென்றால் சிவன், இன்னும் பக்தனே அநாதி, சிவனே ஆதி, இதற்கின்னொரு பிரமாணம்

### பசவேஸ்வரர் வசனம்

*அய்யா நாநு எங்தெந்திகூ ஹளெயநு நீநு எங்தெந்திகூ*
*எளெயனெய்யா கூடல ஜங்கம தேவ*

என்று பசவேஸ்வரர் தன்வசனத்தில் சொல்லியிருப்பதால் தேவ பக்தரிடத்து, வித்தியாசங்காணும். அவரிடத்திலுள்ள உயர்வு தாழ்வுகளை விட்டால் இருவரும் சமானமாகுவர், இருவரும் சமானமான பின்பு ஏகத்வமுண்டாகும், அந்த ஏகத்வத்தினால் சிவாத்வைத மென்பது சித்தமாயிருக்கும், இன்னுமிப்படிப்பட்ட சிவாத்வைதரான லிங்கதாரிகளே இவ்வுலகத்திலிருக்கும் சமஸ்த வர்ணாஸ்ரமங்களுக்கும், மற்றும் துவைதத்வைத விஸிஷ்டாத்வைத மென்னும் மூன்று மதங்களுக்கும், மீரினவர்களான காரணம இவர்கள் அதிவர்ணாஸ்ரமிகளென்றும், சிவாத்வைதரென்றும், ஊர்த்வசிருஷ்டிஜ ரென்றும், நித்தியமுக்த ரென்றும், வைகருத ரென்றும், மேலானவர்களென்று சொல்லப்படுமிந்த லிங்கதாரிகளே சர்வோத்தமர்களென்றும், சர்வாதிக்யர்களென்றும்' சர்வோத்கிருஷ்டர்களென்றும், சகலவேத வேதாந்த சிவாகம, ஸ்மிருதி- புராண இதிகாச, கீதா, சாஸ்த்ரபுராதன சூக்தங்களிலும் பிரசித்தமாயிருக்கும், இன்னும் அதோ சிருஷ்டிஜரான ஆலிங்கிகளுக்கு வேதாகம புராணங்களின் பூர்வ பாகத்தில் சொல்லப்பட்ட சோடசகர்மம், ஷட்கர்மம், பஞ்ச சூதகங்களிவைகள் வீரசைவ (லிங்காயுத) ரான நான்கு வர்ணத்திற்குள்ளிருக்குயே யல்லாது, இந்த அதிவர்ணாஸ்ரமிகளான சிவாத் வைதருக்கு இல்லையென்று அதேவேதாகம புராணங்களின் உத்தர பாகங்களில் சொல்லி யிருக்கிறது.

வீரசைவரில் (3) விபாகங்கள் (6)

இன்னுமிவ் வீரசைவ (லிங்காயுத) ரில் மூனறு விதமுண்டு அவையாவன சாமான்யர், விசேஷர், நிராபாரிகள், என்று மூவிதம் அதெப்படியென்ருல் இந்த லிங்கதாரிகளான பிராம்ஹ்ணாதி சூத்திரன் கடையான நான்கு வருணத்தவரே, விசேஷவீரசைவரென்றும் இன்னும் லிங்கதாரிகளும், அதிவர்ணாஸ்ரமிகளுமான பஞ்ச மதஸ்தர்களே நிராபார வீரசைவரென்றும் இன்னுமிந்த நிராபாரி வீரசைவர்களுக்குள். (1) சாமானியர், (2) விசேஷர், (3) நிராபாரிகளென்று மூன்று விதமுண்டு, இதின் விவரம் வீரசைவோத்கர்ஷெயென்னும் கிரந்தத்திலும், மற்றும் ஜங்கமாதிக்ய மென்னும் கிரந்தத்திலுமசொல்லியிருக்கிறது. இன்னும்நிராபாரமென்னுமொன்று இப்பஞ்சமதத்திற்குச் சேர்ந்திருக்கப்பட்டதி நிமித்தம் இவ்வதிவர்ணாஸ்ரமிகளுக்கு சோடசாதி கருமங்கள் இல்லையென்று உத்தர வேதாகமங்களில் சொல்லப்பட்டது. இதற்குப் பிரமாணம்.

உத்தர வாதுளாகம சுலோஹம்

நிவர்த்திர் கர்ம பாரஸ்ய நிராபார யிதி ஸ்மிருத:
சிவாத்வைத சமாயுக்தோ சர்வகர்ம விவர்ஜ்ஜித:

என்ரு விவர்களுக்கு யாதொரு கர்ம பாரமுமில்லை யாதலால் நிராபரரிகளென்ற பெயருண்டாயிற்று. யிதற்கின்னும்

விருத்தம்

ப்ரஹ்மாண்ட பாண்டோ தரமத்யகானி
உத்சர்க்க ஹோமக் கிரியா பூர்வகானி
உபார்ஜ்ஜி தான்யானி, சுரார்ச்சனானி
மஹேஸ்வ ராஸ்த் திது தஹந்தி பார்வதி

இவ்வுலகத்திலிருக்கும்நேமம், நித்யம்,பலி, தர்ப்பணம், ஹோமம், ஹவ்யம், கவ்யம், முதலான சகல கர்மங்களேயும் இவ்வீரமாஹேஸ்வரர்கள் சுடுவார்களென்றுச் சிவன் பார்வதிக்குச் ·சொல்லியிருக்கிருர், இன்னும். சுலோஹம்.

வீரமாஹேஸ்வரா சர்வேத்வம் சீகுர் வந்திசர்வத
பௌராணிகானி ஸ்மார்த்தானி வைதிகா நிக்ரியான்யபி (3)

இன்னும் வேதாகம புராணங்களின் பூர்வ பாகத்தில் சொல்லப்பட்டதும் மற்றும சிலது கர்மங்களும் இவ்வீரமாஹேஸ்வரர் நாசம் செய்வாரென்று பரமேஸ்வரனே சொல்லி யிருக்கிருர். இன்னும் சுலோஹம்

வீரமாஹேஸ்வரா தன்யம் பவித்ரம் நாஸ்தி பார்வதி
இத்பாஹூ பிரமதாஸ்சர்வெ ரேணுகாத்ய புராதனு: (4)

இன்னும் ரேணுகாதிபிரதமர்களும், மற்றும் புராதனர்களும் இவ்வீரமாஹேஸ்வரர்களே பரமபவித்திர ரென்றுச் சொல்லியிருப்பதாக பரமேஸ்வரன் பார்வதிக்குச் சொன்ஞர். இன்னும்

வீரமாஹேஸ்வரர் யாரென்றால் நிராபாரிகளான அபாதி, அல்லது அசாதி, அல்லது அநாதி, ஜங்கமர், இன்னுமிந்த ஜங்கமபூசையே மோக்ஷகாரணமென்று, வேதாகமபுராணங்களின் உத்தரபாகங்களில் சொல்லியிருக்கிறது, இன்னுமிந்த வேதாதி சகல சாஸ்திரங்களிலும் பூர்வார்த்தமென்றும். உத்தரார்த்தமென்றும் யிரண்டு பாகங்களாவதற்குக்காரணமென்னவென்றால் மற்றஆலிங்கிகளான பிராக்ருத பூர்வஜருக்கு ஜனனாதிமரணாந்தமான ஹிம்சாதி சகல கர்மங்களும் போதிப்பதின் காரணம் இவர்கள் நிசையினால் பூர்வார்த்தமென்றும் துர்ப்பலமென்று மிரண்டுபெயருண்டாயிற்று, இன்னும் உத்தர மதஸ்தரும், பிரபலரும், வைக்ருதருமான லிங்கதாரிகள் மதோர்ப்பத்தியும் இவர்கள் ஜனனாதி மோக்ஷாந்தமான ஆஹிம்சாதி சிவைக்யஞான கிரியைகளையும் போதிப்பதின் காரணம் இந்த வேதாதிசகல சாஸ்திரங்களுக்கும், உத்தரார்த்தமென்றும், பிரபலமென்றும்பிரண்டுபெயருண்டாயிற்று. இன்னுமிந்தலிங்காங்கிகள் துவைதாத்வைதாதி சகலகர்மங்களையும், விட்டுவிட்டு லிங்க ஜங்கமத்தையே பூசிக்கவேண்டுமென்று வேதாதி சகல சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. சுலோஹம்

கோடிலிங்கார்ச்சனாத் புண்யம் த்ருடபக்தஸ்ச பக்திக:
தஸ்மாத்க்கோடி குணம் ஸ்ரேஷ்டம் ஜங்கமானாஞ்ச பூஜனம் (1)
ஸ்தாவராணும் சஹஸ்ரேப்யோ ஜங்கமம் து விஸிஷ்யதே
தஸ்மாத்கோடி குணம் ஸ்ரேஷ்டம் ஜங்கமானாஞ்ச பூஜனம் (2)

இன்னுமொருகோடி லிங்கபூஜையைவிட ஒருவன் ஜங்கம பூஜையே அதிகமென்று அந்தவேதாகமங்கள் சொல்லியிருப்பதால் இப்படிப்பட்ட ஜங்கமர்களுக்கு பக்தர்களானவர்கள் நிர்வஞ்சனையினால் தாமுடைய சமஸ்த விஷயங்களும், தன்சரீரத்தையும் அர்த்த பிராணாபிமானங்களையும், அவனுக்குச் சமர்ப்பித்து அவர் தீர்த்தப் பிரசாதத்தை ஸ்வீகரித்தவர்களுக்கு நிஜமோக்ஷமாகுமென்று சகல வேதாகமங்களிலும் சொல்லியிருக்கிறது, இன்னும்

சூட்மாகம சப்தம படல சுலோஹம்

ஆத்மானம் வசுதான்வாபி பார்யாம பிதனாதிப:
யஸ்வகீய மபிப்ரீத்யா தத்குர்யாஜ் ஜங்கமார்ப்பணம் (1)
அநுபூதம் துதை: பச்சாதாதா யஸ்வய மாத்மனா
குர்யாத் பிரசாத புத்யாயஸ்ச விசேஷ யிதிஸ் மிருத: (2)

தன்னையும் தன்சதி புத்திரரையும் அர்த்த பிராணாபிமானங்களையும் எப்பக்தன் ஜங்கமத்திற்குச் சமர்ப்பித்துத் தான் அச்சங்கம பிரசாதமென்னும் புத்தியினால் ஸ்வீகரிக்கும் பக்தனே விசேஷமானவன், இன்னும்

சங்கர சம்ஹிதை சுலோஹம்

ஆத்மனோ யதபிஷ்டந்து தேனத்ரவ்யேண பூஜயத்
பூஜயே தாதரேணைவ வத்சலிங்காங்க சங்கினம்

என்று பரமேஸ்வரன் ஷண்முகனுக்கு சங்கரசம்ஹிதை யில் சொல்லியிருக்கிறார், இன்னுமிப்படியே மக்கெமாயிதேவர் சிவாதசதகத்தில் சொல்லியிருக்கிறார். இன்னுமிப்படியே கூடல ஜங்கமேஸ்வரன் பசவேஸ்வரனுக்குச்சொன்னாரென்று விருஷபேந் திரவிஜயத்தில் சொல்லியிருக்கிறது, இன்னும்

வீராகம சுலோகம்

க்ஷீயம்கெ சர்வ கர்மாணி தபோயக்ஞ ஜபாதய:
நக்ஷீயம் தெவராரோஹெ வீரவக்த்ர ஹூதம்ஹவி: (1)
விப்ராணாம் வேதவிதுஷாம் கோடிசம்போஜ்ய யத்பலம்
பிக்ஷமாத்ர ப்ரதானேன தத்பலம் சிவயோகினா: (6)
அன்னம் வாஜல மாத்ரம்வா யத்தத்தம் லிங்கதாரிணெ
ததன்னமேரு சத்ருசம் தஜ்வலம் சாகரூபமம் (7)
வீரமாஹேஸ்வராணும் சக்ராச மேக பலம்ப்ரியெ
துலாமாரோப்ய சர்வாணி ப்ரஹ்மாண்டா நிபரான்யபி
துவிதம்ன சமர்த்தோஹம் பவாமிஸ் ருணுபார்வதி (8)
க்ஷீரகும்ப சஹஸ்ராணி க்ருத கும்ப கத்ரெரபி
சிவயோகி பிக்ஷமாத்ரேண கோடியக்ஞ பலம் பவேத் (9)

என்று பரமேஸ்வரன் சொல்லியிருப்பதி நிமித்தம் இப் படிப்பட்ட ஜங்க மார்ச்சகருக்கு நிஜமோக்ஷமாகுமென்று வேதங் கள் சொல்லியிருக்கிறது.

(15) தேஹ நாசகாலம், வேத சுலோகம்

ஆப்னோத்யப மாப்னோதி இமமாப் நோதி
ஜோதிஸ்மதோ லோகம் ஜய்தி

இதினர்த்தமாவது இன்னுமிந்த லிங்காங்கிளானவர் தங்கள் தேஹநாசகாலத்தில் தங்கள் சரீரத்தை விட்டு சந்திர, சூர்ய அக்கினி மண்டலங்களைப் பேதித்துக்கொண்டு சுவர்க்கம், பிரஹ்ம விஷ்ணு, ஈஸ்வர, சதாசிவாதி லோகங்களைத் தாண்டி (36) தத்து களையும் மீறினதான சித்ப்ரஹ்மாண்ட மென்னும் ஜோதிர்மய சாம்பவ லோகமென்பதொரு பரசிவலோகமிருக்கும். அவ்வுலகத் தைஇவர்களேயடைவார்களென்று வேதங்கள்(அயமாப்நோதி)என் று சொல்லியிருக்கிறது, இன்னுமந்த ஜோதிர்மய மென்னும நித்தி யமான பரசிவன் லோகமே பிரளயாதீதமானது, நித்தியமானது, இந்த (36) தத்துவங்களையும் மீரி வேரே தானென்றே ஜோதிர்மய மாயிருப்பதென்று, வேதவேதாந் தங்களே சொல்லி யிருக்கிறது இன்னுமந்த உலகம் யாருக்குச்சாத்திய மென்றால் இவ்வுலகத்திலு ள்ள லிங்காங்கிளும் சிவாத்வைதரும் சிவாநு பாவிகளும் ஷட்ஸ் தலபிரம்மக்ஞானிகளுமான பக்தமாஹேஸ்வரருக்கு சாத்தியமென்று அஷ்டபிரமாணங்களினால் வீரசைவ (லிங்காயுத) சித்தாந்தத்தில் சொல்லியிருக்கிறது.

இன்னுமிந்த லிங்கதாரிகளல்லாதவர்களுக்கும் முன்னே சொன்ன வேதாந்தசித்தாந்திகளான துவைதாத்வைத விஸிஷ்டாத்வைதர்கள் முதலான பவிகளுக்கும் இந்தமோக்ஷ உலகம் சாத்தியமில்லை யென்று சிவன் ஸ்திரச்சித்தமாகச் சொல்லி இருக்கிறூர். இன்னும் மாசிதேவ மஞோ விலாச சுலோஹம்.

சிவதர்மாஸ் ரிதாஸ் யாந்தாஸ் சிவாசார பராயணு:
ஏவஹம்தி சதாலிங்கம் தேயாம்தி பரமம்பதம்
அன்யதான ஹிமாம்பிராப்தும் சக்யம் தேவி யதாஸ்ருதி (1)

கிரியாசார சுலோஹம்

சர்வக்ஞா சர்வ வேதேஷு சர்வக்ஞஸ்த்து சிவாகமெ
லிங்கதாரணஹீனஸ்யா ஸ்வானவன் மன்ய தேமயா (1)

என்றால் எவனுனலும் சரி, எல்லா வேதாகமங்களிலும் சர்வக்ஞ நானாலும் அவன் லிங்கத்தைத்தரிக்காமலிருந்தால் அவனை யொன்றே என்னு லறிவேனென்றும், இன்னும்

சுலோஹம்

நலிங்கதாரிணும் பும்சாம் ஸ்வப்ன மோக்ஷேணை ஜாயதெ
லிங்கம் விநான சாயோஜ்யப சத்பம் சத்யம் வதாம் யஹம் (3)

இன்னுமிந்த லிங்கதாரியல்லாதவனுக்கு சுவர்பனத்திலாவனும் மோக்ஷமில்லையென்றும், இன்னும் சாயுஜ்யபதவியில்லையென்றும், பரமேஸ்வரன் க்விருக்தியினுல் வீரலிங்கோப நிஷத்தில் சொல்லியிருக்கிறூர், இன்னும்,

மற்றேரு சுலோஹம்

வைகர்ய வததோ ப்ரஹ்மா நமா யாஸ்யானி வர்த்ததெ
நாநுபூதிர்ன ஜானந்தோ நமுக்திர்வாத மாத்ரத: (4)
யோகாத்சம் ஜாயதெ க்ஞானம் க்ஞானுத் வைதவாசனு
தயாமுக்தி பதம்தேவி பவத்யேவ நசம்சய: (5)

இன்னும் வேதாந்திகளென்கிற, வாகாத்வைதர்களுக்கு மாயாநிவிர்த்தியாகிறதில்லை க்ஞானேதய மாவதில்லை, ஆனந்தம் தோற்றப்படுவதில்லை. இன்னும முக்தியென்றென்றைக்குமில்லை, இன்னும் முக்தியாக வேண்டுமானல் அஷ்டாங்க யோகாப்யாசம் செய்தால் பிறகு ஞானேதயமாகும், பின்பு அத்வைதத்திலிச்சை யுண்டாகும், அதன் பிறகு அவனுக்குப் பரமேஸ்வரன் நிரதிகரணமென்னும் நிராலம்ப(ஆதாரம வேண்டாத)தீக்ஷை செய்தப்பின்பு அவனை இம்மோக்ஷ உலகத்திற்கனுப்புவேனென்று சிவன் பார்வதிக்குச்சொன்னூரென்று சிவகீதையில் சொல்லியிருக்கிறது,

இன்னுமிந்த லிங்கதாரிகள் ஆலிங்கிகள் உபயபக்ஷத்திலும் அநேக சாஸ்த்திரதிருஷ்டாந்தப்பிரமாணங்களுண்டு. இதை விரிக்கிற்பெருகுமென்று இதுவரை சுருக்கிச் சொல்லப்பட்டது.

இஃது வீரசைவ (லிங்காயுத)மதாசார சங்க்ரஹ சுருக்கம் முற்றும்.

# மோக்ஷ சாதனம்.

---o---

*சிவக்ரியா சிவதப : சிவமந்திர ஜபஸ்சதா*
*சிவக்ஞானம் சிவதியான முத்தரோத்தர மப்யசேத்*

சிவலிங்கக்கிரியைகளும், சிவலிங்க தபஸ்சும் சிவமந்திர ஜபமும், சிவக்ஞானமும், சிவதியானமும், ஆகஇவைகளை அப்பியாசம்செய்துக்கொண்டே பிராணனுள்ளவரையில் சிவ சிந்தனையிலேயேகாலங்கழிக்கவேண்டுமென ஆகமங்கள்சொல்வதினால் வீரசைவ (லிங்காயுத) மதா வலம்பிகள் சிவார்ச்சனாதி கருமங்களினாலேயே முக்திபைச்சாதிக்கவேண்டியிருக்கிறது. வேதங்களில் பதிதர்மங்களென்றும் பசு தர்மங்களென்றும், இரண்டு விதமான தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, பூருவகாண்டத்தில் சொல்லப்பட்ட ஜோதிஷ்டோமாதி கருமங்களே பசுகருமங்களெனப்படும், உத்தர காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் சிவலிங்கதாரணம், சிவலிங்கார்ச்சனை, சிவலிங்க தியானாதி கருமங்களே பதி கருமங்களெனப்படும். பசுகர்மங்களின் அநுஷ்டானத்தினால் அநித்தியங்களான சுவர்க்காதி பலன்கள்சித்திக்கும், பதிகர்மங்களின் அநுஷ்டானத்தினால் நித்தியமான கைவல்ய பதவிசித்திக்கும், க்ஞானகாண்டோக்தங்களான வீரசைவதர்மங்கள் பதிதர்மங்கள் இவை ப்ரஹ்ம வித்தைக்குஉபயோகங்களாகுமேயல்லாமல்சுவர்க்காதி அநித்தியபலன்களையுண்டாகும் ஜோதிஷ்டோமாதி(பசு)தர்மங்கள் உபயோகங்களாவதில்லை பசு தர்மங்களை யநுசரிப்பதினால் "நாஸ்திக்ருத: க்ருதேன" என்னும் மாதிரியாக புண்ணியமுண்டானாலும் முக்தியுண்டாவதில்லை, பதிதர்மங்களையநுசரிப்பதினால் "அமிர்தஸ்ய தேவதாரணேபூயாசம்" என்னும் வாக்கியத்தின் படியாக புண்ணியம் பிராப்தமாவது மல்லாமல் சம்சார பந்தங்களுங்கூட சம்பூர்ணமாக நஷ்டமாகும். சுவர்க்காதி பலன்களையுண்டாக்கும் பசு கர்மங்களும் மற்றும் முக்திபலன்களையுண்டாக்கும் பதிகர்மங்களும் ஒரேவேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன,யாருக்கு யெப்பலனில் அபேக்ஷையிருக்கிறதோ அப்பலன்களுக்குச் சாதகமான அக்காரியங்களைச் செய்வது உலகத்தில் பிறதி யொருவனுடைய காரியமாயிருக்கும் தானியம் விளைவிக்கவேண்டு மென்பவன், விவசாயம் செய்வான். பதவிகளை படையவேண்டுமென்பவன் வித்யாப்யாசம் செய்வான். தனம் சம்பாதிக்கவேண்டுமென்பவன்வியாபாரம்செய்வான்,இவைகளைப் போலவே சுவர்க்காதி உலகங்களை யடைய வேண்டு மென்பவன் ஜோதிஷ்டோமாதி கர்மங்களையநுஷ்டிப்பான். கேவலம் முக்திசௌக்யத்தையடைய விருப்புகிறவன் சிவலிங்கார்ச்சனை சிவதியானம், சிவக்ஞானம், சிவஜபம் முதலான தர்மங்களை யநுசரிப்

பான்இப்படிப்பட்ட சுவர்க்காதி சாதனங்களான கர்மங்கள் வேதங்களின் பூர்வபாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, முக்திசாதனமான சிவலிங்கார்ச்சனுதி கருமங்கள் உத்திரபாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளில் பூர்வகாண்டத்தை யநுசரிப்பவர்களே பசு தர்மிகளாவார்கள். இன்னும் பசு தர்மத்தை யநுசரித்தவர்களே பிரவிர்த்தியுடைவர்களென்றும், பதிதர்மாவலம்பிகளே நிவிர்த்தர்களென்றும் சொல்லிக்கொள்ளப்படுவார்கள்,

இவ்வுலகில் புண்ணிய கருமங்களைச்செய்து புண்ணியத்தைச் சம்பாதித்து வுத்தம உலகங்களையடைந்து அப்புண்ணியம் நசிக்கும் (முடியும்) வரையிலவ்விடம் சவுக்கியத்தை யநுபவித்துப் பிறகு பழயபடியாக பசு (ஜீவ) பாவத்துடன் ஜன்மங்களையடையும் வரைக்கும் பிரவிர்த்தரெனப் பெயர், இப்படிப்பட்ட பிரவிர்த்தர்கள்

பிரவர்த்தர்கள்,, "பிரவிர்த்தானும் பீடபூஜா"

பூஜாம்தே ஸ்தாபயோல் லிங்கம் புடசுத்தேவ் ருதக்ருஹே

என்று நீலகண்ட சிவாசார்யருடைய காரிகையில் சொல்லப்பட்டமாதிரி சிவலிங்கத்தை ஹஸ்தத்தில் வைத்துக்கொண்டு பூஜிக்காமல் பீடத்தின் பேரில் வைத்துக்கொண்டு பூஜிப்பவர்கள் பிரவர்த்தர்களாவார்கள்

நிவிர்த்தர்கள். நிவிர்த்தானும் பரம் சூட்மம் லிங்கமேவ விசிஷ்யதே
பூஜாம் கிருத்வாத தல்லிங்கம் சிரசா தாரயேத்சதா

என்கிறமாதிரியாக சிவலிங்கத்தை யெப்போதும் தேஹத்தில் தரித்துக்கொண்டும், அதைத் தங்கள் கரபீடத்தில் வைத்து அர்ச்சித்துக் கொண்டு தம்மிடத்திலுள்ள பசு(சீவ) தர்மங்களைக் களைந்து மறுபடியும் திரும்பாமல் பதி (சிவ) தர்மத்தை யடைவார்கள்

வீரசை வோக்த தர்மாஸ்து ப்ரஹ்மவித்யோப யோகிந:
நைவஸ்சு: பசுதர் மாஸ்தே ஸ்ருதா: காமபல பிரதா

என நீலகண்ட சிவாசாரியர்காரிகையில் சொல்லியிருப்பதைப் போல வீரசைவ (லிங்காயுத) ர்கள் வேதங்களுக்குள் ஞானகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் நிவிர்த்தி(பதி) தர்மத்தை ஆசரிக்கவேண்டுமேயல்லாமல் கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரவிர்த்தி (பசு) தர்மங்களை யநுசரிக்கலாகாது, வேதத்திலுள்ள சமஸ்த கர்மங்களும் ஒருவனுல் அநுஷ்டிக்க சாத்யமில்லை, வேதோக்தங்களான அத்தருமங்களுள் எந்தெந்தமதத்திற்கு எந்தெந்த தருமங்கள் சாதனங்களாயிருக்கின்றனவோ அப்படிப்பட்ட தருமங்களை மாத்திரம் அந்தந்த மதஸ்தன் தப்பாம

லநுஷ்டித்த அம்மதத்தின் நியேயத்தை (அநுஷ்டானத்தைச்) சாதித்து வேதகர்த்தனை பரமேஸ்வரனை சந்துஷ்டியாக்குகிறான், ஒவ்வொரு மதத்தின் தருமங்களும் ஒவ்வொரு மாதிரியாக யிருக்கிறது. இச் சகல தருமங்களையும் வேதம் சொல்லப்படுவதாலத் தருமங்ளெல்லாவற்றையும் ஒருவன் அநுசரிக்கவேண்டியதில்லை, மானிடவர்க்கத்திற்கு அவசியமான தர்மங்களை யெல்லாம் வேதங்கள் சாமானியமாகப் போதித்திருந்தாலும் ஒருவரிருவர் ஆசார்ய பகவத்பாதர்கள் அவ்வேதங்களை யெல்லாம் பரிசீலனை செய்து தமக்கனு கூலங்களான ஒவ்வொரு பிரதான தர்மங்களை யநுஷ்டித்து சித்தியை யடைந்து உலோகோத்தாரத்திற்காகத் தாமநுசரித்த எந்தெந்த தர்மங்களைக் கிரந்தங்களின் மூலமாக எழுதிவைத்திருக்கிறார்களோ, அப்படிப்பட்ட வேத தருமங்களையநுசரிப்பதினால் வேதோக்தமான தருமங்கலெல்லாவற்றையும்ஆசரி(அனுஷ்டி)த்த மாதிரியேயாகும், இப்படிக்கல்லாமல் வேதங்களில் சொன்ன யெல்லாதருமங்களையு மநுஷ்டித்துவைதிகனெனப்படுகிறே னென்றெண்ணினால், நியமமாக ஒருஉத்தியோகத்தைப் பார்க்காமல் பிரபஞ்சத்திலுள்ள யெல்லா வுத்தியோகங்களையும்நானொருவனேகுத்தகைபிடிக்கிறேனெனப்புரப்பட்டவன் மாதிரியாக கேலிக்காரனாகி ஒன்றிலும் கதியில்லாமல் திரிச்சங்குவைப் போலாவானென்பதில் சந்தேஹமில்லை.

யாவதாம் சமநுஷ்டானம் சப்தசாகர சேஷணம்.

வேதத்தில் சொல்லியுள்ள யெல்லாத்தர்மங்களையும், அனுஷ்டிப்பேனென்று சொல்லிக் கொள்பவனெவனோ அவன், நானொருவனே எழு சமுத்திரங்களையும், வற்றச்செய்வேனென்று சொல்லிக்கொள்பவனுக்குச் சமானனாவானென்றும், இன்னும் நீலகண்ட சிவாசார்யருங்கூட வேதத்திலுள்ள யெல்லாத் தர்மங்களையும், அனுசரிக்கவேண்டியதில்லை யென்னும் அர்த்தத்தைஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார் சதுர்வித புருஷார்த்தங்களுள் கடைசியானதும், மோக்ஷரூபமானதுமான புருஷார்த்தமே சிரேஷ்டமென்றும் வேதாவலம்பிகளான சமஸ்த கிரந்தங்களும் சொல்கின்றன. இப்படிப்பட்ட பரம புருஷார்த்தம் சித்திக்கவேண்டுமானால் வேதத்தின் உத்திர காண்டத்தில் சொன்ன லிங்கதாரணம், லிங்கார்ச்சனம், லிங்க தியானம், லிங்க ஞானம், லிங்க தபசு முதலான பதி தர்மங்கள் வேண்டுவனவாகும். இத்தருமங்கள் அஞ்ஞானாவஸ்தை (தெய்வ அறிவில்லாத வேதனை) யினால் பசுவென்னப் பட்டுள்ள ஜீவரின் அஞ்ஞானங்களெல்லா வற்றையும், பரிஹரித்து. (குணமாக்கி)

மானவஸ்சிவயோகேன சிவோபவதி நிஸ்சய:

கிருமியானது பிரமரத்தின் (குளவியின்) சிந்தனையினால் தன்னுடைய கீட (புழுவின்) பாவனையை நீக்கிக்கொண்டு பிரமராகாரத்தைய(வண்டின் வடிவம்) டைவதுபோல சிவார்ச்சனை ரூபமான சிவயோகத்தினால் சிவனேயாவான். அப்படிப்பட்ட முக்தாத்தும (பக்குவ) னானவன் பிரமராகார (வண்டின் வடிவத்தை) யடைந்த புழுவானது மறுபடியும், முன்னைய புழுவின் பாவனைக்கு வராத வாறுபோலப் பின்னும் ஜீவபாவத்தை யெப்போது மடைவதில்லை. இதுவே பதிதர்மாசரணையின் பலனாயிருக்கிறது. ஜோதிஷ்டோமாதி(பசு)தர்மங்களை யனுசரிப்பதினால் சுவர்க்காதி சித்திகளுண்டானாலும்,ஜீவ பாவமாத்திரம நீங்காதிருப்பதினால் புண்ணிய பலனிருக்கும் வரைக்கும் சுகாநு பவமடைந்து புண்ணியம் தீர்ந்த உடனேயே மறுபடியும், சம்சார மென்னும் சுழலும் சக்கிரத்தை யடையவேண்டிவரும். இதுவே பசு தர்மாசாரணையின் பலனாயிருக்கிறது. இது அத்தியந்தநிவர்த்தியை(மிருதியான ஒழிப்பை) யுண்டாக்காதிருப்பதினா லிப்படிப்பட்ட தர்மங்கள் பசு (ஜீவ) தர்மங்களென்றும், பிரவிர்த்தி (முயற்சி)தர்மங்களென்றும், சொல்லிக் கொள்ளப் படுகிறது. லிங்கார்ச்சனாதி தருமங்கள் ஜீவபாவத்தை அத்தி யந்தமாகப் போக்கும். சாமார்த்கியமுள்ளவைகளானதால் பதி தர்மங்களெனப்படுகிறது. "வீரசைவ தர்மாஸ்து,, என்னும் பிரமாணத்தின்படி வேதத்தின் உத்திரபாகத்தில் சொன்ன முக்தி சாதகமான சிவலிங்கார்ச்சனாதி பதி தர்மங்களை யனுசரித்து ஜீவ பாவத்தைப் பரிஹரித்துக் கொண்டு சிவஸ்வ ரூபத்தை யடைவதே பதிதர்மாசரணையுள்ள வீரசைவ மதத்தின் மேலான விஷயமென இம்மதத்தை ஸ்தாபித்த சிவபஞ்ச முகோத்பவர்களான ஸ்ரீரேணுகாதி பஞ்சாசார்யர்களின் கட்டளையாயிருப்பதினால் சரம சரீர (கடைசி தேஹ) மெனச் சொல்லிக கொள்ளப்படும். வீரசைவ மதஸ்தன் சுர்க்வகாதி யநித்திய பல விரதங்களான பசு தர்மங்களை யனுசரிக்காமல், "அசுப் தேரா மிருதே: காலம் நயேத்வை சிவ சிந்தயா.

என்னும் வாக்கியாநுசாரமாக சிவலிங்கதாரணம், சிவார்ச்சனம், சிவலிங்கதியானம், சிவலிங்கப் பிரசாத ஸ்வீகாரணம் முதலான பதி தர்மங்களை யனுசரித்து முக்தி யடைவீர்களெனக் கோருகிறேன்.

24—3—30 பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு.

# ஹிந்து தர்ம, வியாபகம்.

சநாதனமான நமது ஹிந்து தர்மமானது கேவலம் ஹிந்துஸ்தானத்தி (இந்தியாவி)ல் மாத்திரம் வியாபித்திருப்பதல்லாமல் மற்றெல்லாத்தேசங்களிலும் வியாபித்திருந்ததென அநேக ஆதாரங்களால் சொல்லவேண்டியதாகிறது. பூர்வகாலத்தில் ஹிந்துதர்மத்தைபோலவ்வளவுவியாபகமுள்ள தருமப் பிரபஞ்சத்தில்மற்றொன்றில்லையெனச் சொன்னால் அதிசயமாகமாட்டாது, யூரோப், ஆப்பிரிகா, அமெரிகா முதலான தேசங்களில் சிவன்பார்வதி முதலான ஹிந்து தேவதைகளின் விக்கிரகங்களிப்போதும் உருவழியாமல் பிரகாசித்துக் கொண்டிருப்பதே இதற்கு பலமான சாக்ஷியாயிருக்கிறது. இப்பொழுது பிரஞ்சு ராஜ்யத்திர்குச்சேர்ந்த காம்போடியா தேசத்தில் மூன்று சம்ஸ்கிருத சிலாசாசனங்கள் கிடைத்திருக்கின்றன. இச்சாசனங்கள் காம்போடியா தேசத்தின் சியாங்ராப் ஜில்லாவில் பாத்சூர் என்னும் பெயரால் பிரசித்தமாயுள்ள கோபுரங்களின் கீழ்பாகத்திலுள்ள ஆறு தூண்களின் மீது செதுக்கப்பட்டிருக்கிறது. இச்சம்ஸ்கிருத சாசனங்கள் இந்திர, ராம, பாகவத, சிவாச்யுத, என்பவரால் உண்டாக்கப்பட்டதென அச்சாசனங்களினால் தெரிய வருகிறது.

அச்சாசனத்தில் சகாப்தம் 866-ல், காம்போடியா தேசத்தையாசாண்ட ராஜேந்திர வர்மனென்னும் மஹாராஜனின் பிரதாபங்கள் வருணிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது சாசனத்தில் 24 சுலோஹங்களும், இரண்டாவது சாசனத்தில் 40 சுலோகங்களும், மூன்றாவது சாசனத்தில் 47, சுலோகங்களும் பதிக்கப்பட்டிருக்கின்றன. இச்சுலோகங்களிலுள்ள சமஸ்கிருத சொர்ச்சாதுர்யங்களை எவ்வளவு சொன்னாலும் தீராது ஆனாலும் வாசகர்கள் தெரிந்துக் கொள்வதற்காகச் சில சுலோகங்களைக கீழே சொல்லப்பட்டிருக்கிறது.

சுலோஹம்

ஆசீத் சம்ஸ்த புவனாகர ரத்னசார
தாராஸ் புரத்கிரண ரஞ்சித பாதபீட:
சோமான்வ யோரிரச மங்கலபூதர: ஸ்ரீ
ராஜேந்திர வர்ம நிருபதிர் விததாம் கதீப்ய: (4)

யஸ்யாம் கிரியுக்ம கமலம் கமலா விலீடம்
சிம்ஹாசனோ ஜ்வலித ரத்னகராம் புரூடம்
புரோஜ் ரும்பிதம் பிரணதபூபதி மௌளிமாலா
மாணிக்ய கோடி கிரணாபின வாருணேன (5)

இம்மாதிரியாக ராஜேந்திரவர்ம மஹாராஜனுடைய வர்ணனைகள் சில சுலோஹங்களில் காணப்படுவதல்லாமல் இப்போது" அங்கோர்தோம்" என்னும் பெயரால் பிரசித்தமாயிருக்கும் யசோதபுரியை இம்மஹாராஜன் அபிவிருத்தி செய்த விஷயமும் அங்கு சமுத்திரத்தைப் போலுள்ள ஏரியின் (குளத்தின்) சமிபத்தில் சிவலிங்கமும், பார்வதிதேவி முதலான தேவதைகளின் விக்கிரகங்களைத் தாபித்துள்ள விஷயமும் பதி(செது)க்கப்பட்டிருக்கின்றன.

சுலோஹம்

ஸ்ரீமத்யசோத புரீம் சிரகால சூன்யாம்
பார்வத் சுவர்ண கிருஹரத்ன விமான ரம்யாம்
பூயோதிகாம் புவிம ஹேந்திர கிருஹோப மாம்யோ
யோத்யாபுரீ மிவகுசோபி நவாம் சகார (143)

ஸ்ரீமத் யசோதர தடாக யோகிமத்யே
மேரோ : சமான சிகரே ஸ்வகிருதே மஹாத்ரௌ
பிராசாத சௌத கிருஹரத்ன சிதே விரிம்சி
தேவீச சார்ஜ்ஜா சிவலிங்க மதிஷ்டி பத்ய : (14)

இச்சுலோஹங்களைப் பரிசோதித்தால் இம்மஹாராஜனிடமுள்ள அசாதாரண(ஒருவருமடையக் கூடாத) தெய்வபக்தியானது தெரிய வருகிறது, இத்தேசத்தை யரசாண்டுக் கொண்டிருந்த மஹாராஜனே இம்மாதிரியான தெய்வ பக்தனயிருந்தானென்றால் அத்தேசத்தில் வாசமாயிருந்த பிரஜைகள் ஹிந்து தேவதைகளின் விஷயங்களி லெவ்வளவு பக்திபுள்ள வர்களா யிருந்திருக்கலாமென்பதைச் சொல்லவேண்டியதில்லை,

கிரிஸ்து சகாப்தம் 5-வது நூற்றாண்டில் யாத்ரீகனக சீனதேசத்திலிருந்து பரதகண்டத்திற்கு வந்திருந்த, பாஹியன். என்னும் யாத்ரீகனும் மற்றும் 7-வது நூற்றாண்டில் சீனதேசத்திலிருந்து பரதகண்டத்திற்கு யாத்ரீகனக விஜயம் செய்திருந்த, இட்சிங் ., என்னும் யாத்ரீகனுங்கூட காம்போடியாதேசத்தில் ஹிந்து ஜனங்கள் விசேஷமாக வாசம் செய்துக் கொண்டிருந்த விஷயங்களை அவரவர்கள் கிரந்தங்களில் வெகு மனோகரமாக வர்ணித்திருக்கிறார்கள்,

இக்காம்போடியா தேசத்தில் வாசம் செய்த ஹிந்து ஜனங்கள் கருநாடகம் அல்லது ஆந்திர தேசத்தவர்களெனச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, ஏனென்றா லக்காலத்தி லிவ்விரண்டு தேசங்களில் மாத்திரம் பிரசார (அநுபவ)த்தி லிருந்த சாலியவாஹன சகாப்தத்தின்பெயரை யவர்கள் செதுக்கியிருக்கிறார்கள். அக்காலத்திலிச்சகாப்தத்தின் பெயர்வேறு எத்தேசங்களிலும் பிரசாரத்திலிருந்த

தில்லே, இதுவே இவ்விஷயத்தில் பலமான சாக்ஷியாயிருக்கிறது, மற்றும் அத்தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சிவலிங்காதி தேவதாமூர்த்திகளும், கருநாடக தேசத்தின் மூர்த்திகளைப்போல வே யிருக்கிறது,

இன்னுமிரண்டாவது சாசனத்தில் ராஜேந்திரவர்ம மஹாராஜா னுடைய விஷயங்களும், அவர் மந்திரியான "கவீந்திராரி மதன" னென்னும் பௌத்த மதஸ்தனுடைய விஷயங்களும் சொல்லப்பட்டிருப்பது மல்லாமல் இப்பௌத்த மத மந்திரியுங்கூட தேவி, புத்த, முதலான விக்கிரகங்களை ஸ்தாபித்தானென்றும்பின்னல் கட்டுவிக்கப்பட்ட யசோத புரி ஏரியில் (குளத்தில்) வேதவேத்தியர்களான விப்ரர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் ஸ்நாநம் செய்யக்கூடாதென்றும் மற்று மிதில் யானைகள் பிரவேசிக்கக் கூடாதென்றும் பிரவேசித்தால் தயாள குணமுள்ளவர்களதை நிவாரணம் செய்ய வேண்டு மெனவும் இப்படிப்பட்டவைகள் முதலான விஷயங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன,

சுலோஹம்.

மஹத்யாம் விதிகாதா யாம் பரிகாயாம் சுயாம்பசி
விப்ராத்ருதே வேதவித: ஸ்நாதவ்யம் நாத்ர கிருச்சன (38)

தாடாகேஸ்மின் தடாரு ஹைஸ்தருபி: சீதலாம்பசி
கஜாநாம் மஜ்ஜனம் மாபூத்ஸ்யாச்சேத்வார்யம் தயாலுபி: (39)

இத்தியாதி விஷயங்களை யாலோசித்துப்பார்த்தால் நம் ஹிந்து மதத்தவர்களான அரசர்கள் பூர்வகாலத்தில் தங்கள் புஜபல பராக்கிரமத்தினல் அநேகதேசங்களைச்ஜெயித்து அவ்வவ்விடங்களில் நம து சநாதன தர்மதத்துவங்களைபிரசாரம்செய்து உலகைக்கய மான்யர்களாக விளக்கினர்களென்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது, இம்மாதிரி சர்வதோ முகமாக சமஸ்த தேசங்களிலும் தன்னுடைய பவுத்திரமான துவஜத்தை(கொடியை)ஸ்தாபித்த சநாதன ஹிந்து தர்மத்தின் ஸ்திதியானது காலமஹிமையினு லிப்போது க்ஷீணவஸ்தை கு வந்திருப்பதைப் பார்த்தால் பரம துக்க முண்டாகிறது, தயாகனன ஸ்ரீபரமேஸ்வரன் ஹிந்துதர்மத்தின் உத்தாரத்தின் விஷயத்தில் பூரண கிருபா கடாக்ஷம்வைத்து பூருவத்தைப் போலவே இத்தருமமானது ஜெகதலத்தி லெங்கும் பிரகாசிக்கும்படி அநுக்கிரகிக்க வேண்டுமென அந்த ஸ்ரீ ஜகன் நியாமனைப் பிரார்த்திக் கிறேன்.

22—2—32 பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

ஸ்ரீ பஞ்சாசார்ய: பிரசீதம்து.

# வீரசைவ (லிங்காயுத) பஞ்ச பீடங்கள்.

## சுப்ர போதாகம சுலோகம்.

தஸ்மாத் பஞ்ச விதாசார்யா: பஞ்சபீடாதி தேவதா:
பஞ்ச சிம்மாசனுதீசா ஜகத்குரு தமாஸ் சதே

வீரசைவ (லிங்காயுத) மதம் வைதிகமும், அநாதியுமானது, என்பதற்கு இம்மதத்தை உலகத்தில், ஸ்தாபித்த பூர்வாசார்யர்களின் சரித்திரங்களே பிரமாணங்களாயிருக்கின்றன. வீரசைவாகமங்களின் பிரகாரம், இதற்கு, ஆசார்யர்கள், ஐவரானதிலே இவர்களுக்குப் பஞ்சாசார்யர்களென்றும், இவர்கள் ஸ்தாபித்த குரு பீடங்களுக்குப் பஞ்சாசார்யர் பீடங்களென்றும். அல்லது, பஞ்ச சிம்ஹாசனங்களென்றும், சாஸ்திரங்களிலும். உலகத்திலும், பிரசித்தமாயிருக்கிறது. இந்த ஆசார்யர்களின் காலம், அத்யந்த புராதீனமானதாயிருக்கிறது. இவர்கள் நான்கு யுகங்களிலும், வேறு வேறு நாமங்களினுல் அவதரித்து, வீரசைவ சித்தாந்தத்தை ஸ்தாபித்தார்கள். இவ்விஷயம், சிவாகமங்களில், இம்மாதிரியாகச் சொல்லியிருக்கிறது.

## சுப்ர பேதாகமம்.

ஏகாக்ஷரோத், வியக்ஷரஸ்ச த்ரய்யக்ஷரஸ், சதுரக்ஷர:
பஞ்சாக்ஷர: க்ருதேயுகே பஞ்ச நாமானி பார்வதி
ஏகவத்ரோத் விவக்ரஸ்ச த்ரிவக் த்ரஸ், சதுராநந:
பஞ்சவக்த்ரஸ்ஸ த்ரேதாயாம் பஞ்சநாமானி பார்வதி
ரேணுகோதாரு கச்சைவ கண்டாகர்ணச்ச தேநுக:
விஸ்வகர்ணேதி நாமாணி த்வாபரே மேனகாத்மஜே
ரேவணு மருளச்சைவ ஏகோராம:, பண்டித ஏவச
விஸ்வாராத்யேதி நாமானி கலௌ பர்வத நந்தினீ

## ஸ்வயம்பு வாகமம்

ஸ்ரீமத் ரேவண சித்தஸ்ய கொல்லிபாகி புரோத்கமெ
சோமேச லிங்காஜ் ஜனன மாவஹாசம் கதலீபுரே
தத்வன்மருள சித்தஸ்ய வடக்ஷேத்ரே மஹத்தரே
சித்தேச லிங்காஜ் ஜனனம் ஸ்தான முஜ்ஜயினீபுரே
திராக்ஷா ராமாக்ய சுக்ஷேத்ரே ராமநாதாக்ய லிங்கத:
ஏகோராமஸ்ய ஜனனமா வாசஸ்து ஹிமாலயே
காஸ்யாம் விஸ்வேஸ்வரே லிங்கே விஸ்வாராத்ய சம்பவ:
ஸ்தானம் ஸ்ரீகாசி காக்ஷேத்ரே ஸ்ருணுபார்வதி சாதரம்
க்ருதாத்யுக சதுஸ்கேதே பஞ்சாராத்யா, யதாவிதி
மமலிங்க முகோத்பூதா லோகவிஸ்ருத கீர்த்தய:

ஸ்ரீமத் பஞ்சாசார்யர்கள், கிருதாயுகத்தில் ஏகாக்ஷர சிவாசார்யர் த்வியக்ஷர சிவாசார்யர், திரியக்ஷர சிவாசார்யர், சதுர

க்ஷர சிவாசார்யர், பஞ்சாக்ஷர சிவாசார்யர், என்னும், பெயர்களைத் தரித்து அவதரித்தார்கள்,திரேதாயுகத்தில் ஏகவக்த்ர சிவாசார்யர் த்விவக்த்ர சிவாசார்யர், திரிவக்த்ர சிவாசார்யர்,சதுர்வக்த்ர சிவாசார்யர், பஞ்சவக்த்ர சிவாசார்ய ரென்னும் பெயர்களைத் தரித்துக் கொண்டு அவதரித்தார்கள். துவாபரயுகத்தில் ரேணுக (ரேவண) சிவாசார்யர், கண்டாகர்ண சிவாசார்யர், தேநுகர்ண சிவாசார்யர் விஸ்வகர்ண சிவாசார்யர், என்னும்,பெயர்களைத் தரித்துக்கொண்டு அவதரித்தார்கள். கலியுகத்தில் ரேவணசித்த சிவாசார்யர், மருளசித்த சிவாசார்யர், ஏகோராம சிவாசார்யர், பண்டிதாராத்ய சிவாசார்யர், விஸ்வாராத்ய சிவாசார்யர், என்னும் பெயர்களைத்தரித்து கொண்டு அவதரித்தார்கள்,இந்நான்கு யுகங்களிலும் சொல்லிபாகி சோமநாதம், வடவிருக்ஷம் சித்தேஸ்வரம், கேதாரக்ஷேத்திர ராமநாதம், ஸ்ரீசைல மல்லிகார்ஜ்ஜுனம், காசி, விஸ்வநாதம், இந்தலிங்கங்களில் இவர்கள் அவதரித்தார்கள். ஆகையால் இம்மதத்தின் பரிபாலனைக்காக ரம்பாபுரி, உஜ்ஜயனி, ஹிமாலயம், ஸ்ரீசைலம், காசி க்ஷேத்திரங்களில் தர்ம பீடங்களை ஸ்தாபித்தார்கள். இம்மாதிரி யான பிரமாணங்கள் சுப்ரபேதாகமம், சுயம்புவாகமம், முதலான ஆகமங்களில் கிடைப்பதினால் ஆசார்யர்களின் காலம் ஆகமங்களின் காலத்திற்கு முந்தினதாயிருக்கவேண்டியது. இப்படியே இவர்கள் பூலோகத்தில் ஸ்தாபித்தமதத்தின் காலமாவதும் அதி புராதனமேயாயிற்று

இவ்வகை அநேக வைதிக ஆதாரங்களுமல்லாது இன்னும் சரித்திரம் இதிஹாசம் முதலான ஆதாரங்களனேகமாகக் கிடைக்கின்றன. இச்சரித்திரங்களின் ஆதாரங்களெல்லாம் எழுதுவதென்றால் இதே ஒரு பிரத்யேக கிரந்தத்தின் விஷயமாகும், ஆகையால் இப்போது அந்தந்த பீடத்தின் சம்மந்தமான சில விஷயங்களை மாத்திரம் கீழே சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ஜகத் குரு ரேணுகா சார்யாய நம:

(1) ஸ்ரீ ரம்பாபுரி சமஸ்தானம்,

இச் சிம்ஹாசனம் மைசூர் தேசத்தின் கடூர் ஜில்லா நரசிம்மராஜபுரம் தாலூக்கா ரம்பாபுரி (பாளெ ஹொன்னூர்)என்னுமிடத்தில் இருக்கிறது. இம்மடத்தின் ஆதிகுருகள் வீரசைவ மதஸ்தாபனாசார்யர்களில் அத்யந்த பிரசித்தரான ஸ்ரீஜகத் குரு ரேணுக சிவாசார்யர் கொல்லிபாகி ஸ்ரீசோமேஸ்வர லிங்கத்தி லவதரித்து மலயாத்ரியத்தின் மத்தியில் தம் தர்ம பீடத்தை ஸ்தாபித்தார்கள். இவர் உலகப்பிரசித்தரான அகஸ்தியமஹரிஷிக்கு ஷட்ஸ்தல மார்க்கத்தை உபதேசித்து அவருக்கு சிவலிங்கதாரணம் செய்தாரென்பதற்கு வேண்டிய காரணங்களிருக்கின்றன. இன்னும் இவர் கிழக்கு சமுத்திரத்திலுள்ள ராமேஸ்வரத்தில் சில கால

மிருந்துப் பிறகு சோளதேசத்தின் ராஜதானியானகாஞ்சீபுரத்திற்கு வந்து அநேக மஹத்வங்களைக் காட்டி சிவதர்மத்தைத் திடம் செய்தார். பிறகு இலங்கைக்குப்போய்லங்காதிபதியானவிபீஷணன் பிரார்த்தனுனு சாரமாக ஏககாலத்திலேயே (3) கோடி உருவமெடுத்து (3) கோடி லிங்கரூபத்தை ஸ்தாபனம்செய்து அவன் சங்கற்பத்தைப் பூர்த்தி செய்தார். இம்மாதிரியாக அனந்த லீலைகளைக் காட்டி பம்பா க்ஷேத்ரம், ஸ்ரீசைலம், காசி, ஹிமாலயம், முதலான க்ஷேத்திரங்களை தம்ம தர்சனத்தினுல் புனிதம் செய்துப் பிறகு கடைசியாகத் தம் மஹிமா பிரபாவத்தினுல் ருத்திர முனீஸ்வர ரென்னும் தேஜோமய குருமூர்த்தியை காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் முன்னுல் பூமியைப் பார்சித்துப் பூ(பூமி) கர்ப்பத்திலிருந்தவதாரம் செய்வித்து தம்ம அதிகாரத்தை அவருக்கு ஒப்பித்து பிறகு தாம் அவதரித்த கொல்லிபாகி சோமநாத லிங்கத்தில் ஐக்யமானுர். இவ் விஷயம் அநேக கிரந்தங்களில்ச்சொல்லியிருக்கிறது. இந்த ருத்திர முனீஸ்வரருக்கு அநந்தரம் (பிறகு) முக்தி முனீஸ்வர சிவாசார்யர் முதலான (108) பேர் ஸ்வாமிகளாயிருந்திருக்கிருர்கள். ஸ்ரீரேணுக சிவாசார்யர் பிரம்மசூஸ்திரங்கட்கும் சிவசூத்திரங்கட்கும் பாஷியங்களை எழுதியிருக்கும் விஷயம் அநேக கிரந்தங்களினுல் தெரிய வருகிறது இப்பீடத்தில் அத்யந்த புராதனமான (4) சிலாசாசனங்களிருந்து அதிலொருசாசனம் ஸ்ரீராமர் காலத்திலிருக்கலாமென்று அதிலுள்ள சில சின்னங்களினுல் தெரியவருகிறது. இப்படியாக சுமார் (1200) வருஷங்கட்கு முந்திய ஒரு தாம்பிரசாசனத்தை மைசூர் கவர்மெண்ட் ஓரியண்டல் லைபெரி ஆர்ச்சலாஜிகல் டிபார்ட்மெண்டார் சோதனை நிமித்தமாக மடத்திலிருந்து வாங்கி வைத்திருக்கிருர்கள். சாசனம் தமிழ்பாஷையிலிருக்கிறது. இதன் விஷயமான விவரங்கள் மைசூர் சர்க்கார் அவர்களே பிரசித்தப்படுத்தி இருக்கிருர்கள்.

(2) இப்பீடம் அத்யந்த கோரஆரண்யத்திலிருக்கிறது. இப்பீடமிருக்கும் ஸ்தானத்திற்கு இப்போதும் மலயபர்வதமென்னும் பெயர் பிரசித்தமாயிருக்கிறது, இப்பீடத்தின் சமீபத்திலேயே அகஸ்திய மஹரிஷிகளின் ஆசிரமம் இருக்கிறது.

(3) இப்பீடாதீஸ்வரரான ஸ்ரீரேணுகரினுல் பிரசித்தரான ஸ்ரீசங்கராசார்யருக்கு சந்திர மௌளீஸ்வர லிங்கம் பிராப்தமாயிற்றென்னும் விஷயம் அநேக ஆதாரங்களிருந்தும் இவ்விஷயத்தையே காட்டும் லிங்கப்பிரதான ரூபமான ஒரு சிலா சித்திரமும் கூட தற்போது மடத்தில் இருக்கிறது.

(4) இப்பீடம் பூர்வத்தில் இப்போதுள்ள ஸ்தானத்திலிருக்காமல் வேறே ஸ்தானத்திலிருந்தது கெழதிப அரசர்களிலொருவனுன பூதி பசவப்ப நாயகனென்பவன் காரணுந்தத்தினுல்

அதைச் சுட்டுப்போட்டான். குருபீடத்தின் மீதுத்ரோஹம்செய்த தற்காக இவனுக்கு அநேக தொந்தரைகள் பிராப்தமாயிற்று, பிறகு அவன் பக்ஷாத்தாபமடைந்து பிறகு குரு சன்னிதி யடைந்து அவர் அநுக்கிரகமடைந்து சுகியாகி இப்போதுள்ள பீடத்தைத் தானே கட்டிக்கொடுத்திருக்கிறான், இவ்விஷயம் சமஸ்தானத்தில் அநேக ஆதாரங்களிருக்கிறது.

(5) இப்பீடத்தின் அதிகாரிகளில் எவ்வளவோ பேர் மஹா தபசிகளாகப்போயிருக்கிறார்கள். இப்பீடத்தின் யோக்கிய தையையும் மஹத்வத்தையும் தெரிந்து மைசூர் கவர்மெண்டார் கௌரவாஸ் பதங்களான அநேக விருதுகளும் பாஸ்போர்ட்டுகளை யும் இப்பீடத்திற்கு அளித்திருக்கிறார்கள்.

ஸ்ரீஜகத் குரு தாருகா சார்யாய நம:

(2) ஸ்ரீமத் உஜ்ஜயனி சிம்ஹாசனம்

இச் சிம்ஹாசனத்தின் பூர்வ பீடம் பல்லாரி ஜில்லா கோட்டூர் தாலூக்காவில் உள்ளது. இக்குரு பீடத்தை விக்யாத ரான ஸ்ரீதாருகாசார்யர் ஸ்தாபித்தார். இந்த குரு பீடம் அத்யந்த புராதனமானது. இப்போதுள்ள மடம் கிருஸ்து சகாப்தம் (2)வது வருஷத்தில் ஒரு பாண்டிய அரசனால் கட்டப்பட்ட தென்பதற்கு ஒரு சிலாசாசனம் அகப்பட்டிருக்கிறது. இதன் பிறகு சிலாசாசனங் கள் தாம்பிர சாசனங்கள் கூட அநேகமாயிருக்கின்றன. இப்பீடத் தின் மஹத்வமும் மற்றும் புராதனமான வகை பாண்டிய அரச னின் சிலாசாசனமும் பீடத்தின் கட்டிடங்களும் சாக்ஷிகளாயிருக் கின்றது.

ஸ்ரீ ஜகத் குரு ஏகோராமா ராத்யாய நம:

(3) ஸ்ரீ கேதார சிம்ஹாசனம்

ஹிமோத் பர்வதத்தில் கேதாரமென்னு மிடத்தில் இப் பிரசித்தமான பீட மிருக்கிறது. இப்பீடம் அத்யந்த மஹத்வ மானது மற்றும் புராதனமானது என்பதற்கு அநேக ஆதாரங்களி ருக்கின்றன துவாபர யுகத்திலிருந்து உலகப்பிரசித்தனான வியாச மஹரிஷி இப்பீட ஸ்தாபகரான கண்டாகர்ண சிவாசார்யரால் சிவ சித்தாந்த உபதேசமடைந்து முக்தனானன். இதைவியாச மஹரிஷி யே தன்னால் சொல்லப்பட்ட ஸ்காந்தப் புராணாந்தர்க்கத காசி காண்டத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார், இப்பீடம் பாண்டவர் காலத்திலிருந்த தென்பதற்கு அதே ஸ்காந்தப் புரா ணம் கேதார காண்டத்தில் சொல்லியிருக்கிறது. ஆனதினால்இப் பீடம் வியாச மஹரிஷி காலத்தில் (என்றால் துவாபர யுகத்தில்) இருந்ததென்பது ஷ்பஸ்டமாகிறது.

(2) தற்காலம் இப்பீடத்தில் (300)-க்கு மேல் சுவாமிக ளின் பட்டாவளி கிடைக்கின்றது. ஒவ்வொரு சுவாமிகளின் ஜீவன்

கள் குறைந்தது சராசரி(20)வருஷங்களென்று வைத்துக் கொண்டாலும் பீடம் ஸ்தாபனமாகி சுமார்(6)ஆயிர வருடங்களாயிருக்க வேண்டுமென்றுத் தெரிய வருகிறது. ஈதல்லாது இப்பீடத்தின் புராதனமான வகை தேவநாகர பாஷையில் எழுதிய அநேக சிலா சாசனங்களும் தாம்பிர சாசனங்களும் இருக்கின்றன. ஸ்ரீகரபாஷ்யம் எழுதினஸ்ரீபதி பண்டிதன் இப்பீடத்திற்குச்சிஷ்யனுயிருந்தானென்று அவன் எழுதின பாஷ்யத்தினுலேயே தெரிகிறது. கலியுக ஆதியில் இப்பீடத்தில் அவதரித்த ஏகோராம சிவாசார்யர் பிரம்ம சூத்திரங்களின்மேல் அதிகரணபாஷ்ய மென்னும் பெயரினுல் சக்தி விசிஷ்டாத் வைதபோதகமான ஒரு பாஷ்யம் எழுதியிருப்பது ஸ்ரீகர பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(3) இப்பீடத்திற்கு ஹிமாலயத்து டிஹரி ராஜ்யத்து, மஹாராஜர் முக்கிய சிஷ்யனுயிருந்தது மல்லாமல் உதயபுர ஜம்பு (காஷ்மீர்) முதலான(11)பேர் அரசர்கள் பிரதி வருஷமும் காணிக்கையைக் கொடுக்கின்ருர்கள். தற்போது (12) வருஷங்கட்கு முன் இப்பீடத்திற்கு(976)கிராமங்கள் ஜமீனுகயிருந்தது. அதன் பிறகு (835) கிராமங்கள் கைதப்பிப்போய் தற்கால(141)கிராமங்கள் மாத்திரம் இப்பீடத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கின்றது. இப்பீடத்தின் மஹாசுவாமிகள் டிஹரி ராஜ்யத்தில் பிராம்ஹுதி நான்கு வருணத்தாருக்கும் பஹிஷ்காராதி தண்டனம் கண்டனம் பிராயச்சித்தங்களும் நடத்துகிருர்கள். உலகப்பிரசித்தமான துவாதச ஜோதிர் லிங்கங்களிலொன்றுன கேதாரேஸ்வர தேவாலயம் இப்பீடத்தின் ஆதிபத்யத்திற் குட்பட்டிருக்கின்றது. பிரிட்டிஷ் கவர்மெண்டார் முதலாக இப்பீடத்திற்கு அதிக கௌரவத்தைக் கொடுக்கின்ருர்கள். ஹிந்துஸ்தானத்தி லெல்லாம் இவர்கட்கு வேண்டிய அளவு கத்தி, கடாரி, துப்பாக்கி, ரிவால்வர், முதலானவைகளை உபயோகிக்கலாமென்று வைஸ்யருய் அவர்கள் உத்திரவு எழுதி அனுப்பியிருக்கிருர்கள். இதல்லாது பிரிட்டிஷ்ராஜ்யங்களிலெல்லாம் அட்டபல்லக்கு (குருக்கு பல்லக்கு) முதலான (72) பிருதுகளும் உபயோகிக்கும் பாஸ்போர்ட் உத்திரவும் உண்டு.

(4) இப்பிராந்தியத்தின் சில ஸ்மார்த்த ஜனங்கள் இப்பீடத்தைத் தங்கள் சுவாதீனப் படுத்திக்கொள்ள வேண்டு மென்னும் துராலோசனையினுல் இப்பீடம் வீரசைவர்களது அல்லவென்றும் சங்கராசார்யரினுல் ஸ்தாபிக்கப்பட்ட தென்றும் வியாஜ்யம் செய்தார்கள். இவ் வழக்கு வெகு காலமாக நடந்து கடைசியில் அலஹாபாத் கோர்ட்டில் இப்பீடம் சங்கராசார்யருக்கு முன் எவ்வளவோ வருடங்களாக புராதீனமாக யிருந்ததென்றும் இது ஜங்கமர்களுக்குச் சேர்ந்த தென்றும் தீர்மானித்திருக்கிருர்கள். இது வீரசைவ மதத்தின் புராதனத்திற்கு அத்யந்த மஹத்வமான ஆதாரமாயிருக்கிறது.

ஸ்ரீஜகத் குரு பண்டிதாராத்யாய நம:

## (4) ஸ்ரீசைல சிம்ஹாசனம்.

இப்பீடம் கர்நூல் ஜில்லா நந்திகோடகூர் தாலூகாவின் வாய்வு மூலையில் பயங்கரமான ஆரண்ய மத்தியிலுள்ள சாலாமலி பர்வதத்தின் சார்பில் இருக்கிறது. நாகலூடி கிராமத்திற்கும் மல்லிகார்ஜ்ஜுன தேவாலய மிருக்கும் பர்வதத்தின் சிகரத்திற்கும் 25-மைல் காட்டு வழி யிருக்கிறது. நாகலூடி சுற்றிலும் மற்றும் பர்வதத்தின் சார்பிலும் அநேகாநேக, மண்டபங்கள மஹா கோபுரங்கள் பாழ்கோயில் கட்டிடங்கள் சுவர்கள் காணப்படுவதினால் பூர்வத்தில் அங்கொரு வைபவமான நகரமிருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

(2) கலியுகத்தின் ஆதியில் இக்குரு பீடத்தை ஸ்ரீஜகத்குரு பண்டிதாராத்யர் ஸ்ரீசைல க்ஷேத்திரத்திலிதை ஸ்தாபனம் செய்தார், இந்த ஆசார்யர் அவதரித்த மல்லிகார்ஜ்ஜுன லிங்கத்தின் தேவாலயம அநாதி காலத்திலிருந்து இவர்கள் சுவாதீனத்திலேயே இருந்தது. எக்காரணத்தினாலேயோ தற்போது (50—60) வருடங்களுக்கு முன்னால் ஸ்மார்த்தமதீய புஷ்பகிரி மடத்தவரின் சுவாதீனத்திற்குச் சேர்ந்திருக்கிறது, தற்போது இதன் வியாஜ்யம் கர்நூல் கோர்ட்டில் நடக்கிறது.

(3) உலகப்பிரசித்தனான சானந்தமஹரிஷி இப்பீடத்தின் சிஷ்யனாகியிருந்தான். இவ்விஷயம் வியாசோக்த ஸ்காந்தபுராணாந்தர்க்கத ஸ்ரீசைல காண்டத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது இப்பீட ஸ்தாபகரான ஜகத்குரு பண்டிதாராத்யர் பிரம்ம சூஸ்திரங்களின் மீதும் பாஷ்யம் எழுதியிருக்கிறாரென்பது பசவ பண்டிதாராத்யரினால் எழுதப்பட்ட உபநிஷத் பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக இப்பீடத்தின் பரம்பரையவர்கள், மஹா நாராயணோபநிஷத்து, ஆனந்தவல்லி, பிருகுவல்லி புருஷசூக்தம் முதலானவைகளுக்கு உத்தமமான பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். இக்கிரந்தங்கள் தற்போது (60) வருடங்கட்கு முன்னே ஆந்திர எழுத்துக்களில் சமஸ்கிருதபாஷையில் மதாாசில் அச்சிடப்பட்டிருக்கிறது. இப்பீடத்தின் புராதன விஷயம் ஸ்ரீசைலம், காவலி சித்தாபுரம், முதலான ஸ்தானங்களில் சிலாசாசனங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இத்தேவாலயத்திலுள்ள ஸ்ரீமல்லிகார்ஜ்ஜுன சுவாமி பூஜை மாமூல்படிக்கு வீரசைவ அர்ச்சகரும் பிரம ராம்பாளின் பூஜை மாத்திரம் பிராம்மண அர்ச்சகராலும் நடைபெற வேண்டியதெனவும் தீர்மானமாகி நடைபெற்று வருகிறது. மற்றும் 5—பேர், டிரஷ்டிகளின் மேற்பார்வையில் இக்கோவில் காரியங்கள் கட்ட

டம் ரிபேர் முதலானவை நடைபெறவேண்டு மெனவும் ரிசீவரை யும் ஏற்ப்படுத்தியிருக்கிறார்கள்' இன்னும் ஜில்லாகோர்ட்டில் வியாஜ்ஜியம் நடைபெற்று வருகிறதென தெரியவருகிறது.

ஆசிரியர்.

ஸ்ரீஜகத் குரு விஸ்வாராத்யாய நம:

## (5) ஸ்ரீகாசி சிம்ஹாசனம்

ஸ்ரீகாசி க்ஷேத்திரத்திலுள்ள ஜகத்குரு விஸ்வராத்தியர் தர்ம பீடம் ஜங்கமவாடி மட மென்னும் பெயரினல் பிரசித்தமா யிருக்கிறது இப்பீடத்தின் ஸ்தாபகரான விஸ்வராத்தியர் அவதா ரத்திற்கு காரண பூதமான ஸ்ரீவிச்வநாத லிங்கத்தேவாலயம் முத லாக ஆரம்பத்தில் இவர் சுவாதீனத்திலிருந்தது, ஔரங்கஜேப் காலத்தில் புராதன விஸ்வநாதர் கோவில் நஷ்டமானதே இது இவர் கைதப்பிப் போனதற்குக் காரணமாயிற்று, தற்போதுள்ள விஸ்வநாதர் கோவில் இந்தூர் சமஸ்தானத்தின் மஹாராணி அஹல்யா பாயினால் நூதனமாகக் கட்டப்பட்டு ஸ்மார்த்தர் வசத் திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) இப்பீடம் புராதனமான தென்பதற்குஅநேக தான சாசனங்கள் கிடைக்கின்றன. விக்ரம சகாப்தம் (131) கார்த்திகை சுத்த தேவஸ்தான ஏகாதசி நாள் மஹாராஜனான ஜயநந்த னென் னும் நரேசன் ஜங்கமபுர மென்னும் கிராமத்தை இப்பீடத்தின் கோவுகளின் பரிபாலனைக்காக தானம் குடுத்திருக்கும் சாசனம் தற்போதும் மடத்திலிருக்கிறது, இன்னும் இத்தானசாசனம் குடுத்து நாளது வரை சுமார் (1360)வருடங்களாகின்றன

(3) இப்பீடத்தின் கிளைமடம் ஒன்று நேபாளத்தின் பாககாம் என்னும் கிராமத்தில் இப்போது மிருக்கிறது,இம்மடத் தில் விக்ரம சகாப்தம்(692)கிருஸ்து சகாப்தம்(639)-வது வருடத் திய ஜேஸ்ட சுத்த அஷ்டமியில் எழுதப்பட்ட தேவநாகரலிபி (பாஷை)யில் ஒரு சம்ஸ்கிருத சாசனமிருக்கிறது.'இச்சிலாசா சனத்தில் கங்காதேவி என்னும் சம்சாரத்தினலும் திரைலோக மல்லன்,திருபுவனமல்லன், என்றிருவர் குமாரர்களுடனும் கூடின விச்வமல்ல நிருபதி என்னும் நேபாளத்தின் மஹா ராஜன் தான் முதலில் சிவபக்தனயிருந்து ஏதோ காரணத்தினல் சிவபக்தியி லிருந்து தூர விலகினே னென்றும் ஸ்ரீமல்லிகார்ஜ்ஜுன சுவாமிக ளென்பவர் நேபாளத்திற்கு வந்துத் தன்னை மறுபடியும் சிவபக்த னகச் செய்தாரென்றும் சொல்லிக்கொண்டிருக்கிறன்.இப்படியே தன்வம்சத்து மூலபுருஷனை ஜயருத்ரமல்லதேவ னென்பவன் சிவபக்தனயிருந்து இம்மடத்தின் விநியோகத்திற்காக அநேக பூஸ்திதிகளைத் தானம் கொடுத்திருக்கிற னென்றும் மறுபடியும் தான் கூட இவ்வளவு ஜமீன்களையும் மடத்தின் விநியோகத்திற்

காக அற்பிக்கின்றேனென்றும் எழுதியிருக்கும் இச்சிலாசாசனம் எழுதிக்கொடுத்தது நாளது வரை (1300) வருடங்களாகின்றன. இச்சாசனம் எழுதிக்கொடுத்த விஸ்வமல்ல நிருபதியின் காலமே இவ்வளவு புராதீனமாயிருக்கும் போது அவனின் மூலபுருஷனை ஜயருத்திரமல்ல தேவனின் காலம் அதைவிட அதிக புராதனமாகவே இருக்கவேண்டியதும். தவிர தற்போது நேபாளத்திலிருக்கும் ஜங்கமவாடி மடம் அத்தியந்த வைபவஸ்திதியிலிருக்கிறது.

(4) காசியிலுள்ள இத்தர்ம பீடத்திற்கு அநேக இந்து அரசர்கள் தானசாசனங்கள் கொடுத்திருப்பதல்லாது மொகலாய சக்ரவர்த்திகளான பாபர் அக்பர், உமாயூன், ஜஹங்கீர், ஔரங்கஜேப் முதலானவர்கள் கூட அநேக தானசாசனங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள், இவை அரபி பாஷெயில் எழுதப்பட்டிருக்கிறது. இம்மொகல் சக்ரவர்த்திகளின் (15—20) தானசாசனங்கள் தற்போது மடத்திலிருக்கின்றன ஹிந்து தர்மத்தின் பரம வைரியாயிருந்த ஔரங்கஜேப் இப்பீடத்தை நாசம் செய்யும் உத்தேசத்துடன் படைஎடுத்துக் கொண்டு வந்தபோது ஸ்ரீஜகத் குரு மல்லிகார்ஜ்ஜுன சுவாமிகளென்பவர் விசேஷமான மஹிமைகளைக் காட்டினதால் ஔரங்கஜேப் கர்வமடங்கித் தனக்குண்டானஎல்லா பிராயச்சித்தங்களையும் செய்துக் கொண்டு ஒரு தானசாசனமும் எழுதிக்கொடுத்திருக்கிறான். அதிலுள்ளவிஷயங்கள் இப்பீடத்தின் கௌரவத்திற்கு அத்யந்த மஹத்வமுடையதாயிருக்கின்றது.

(5) இப்பீடத்திலுள்ள குரு பீடத்திற்கு ஜோடித்திருக்கும் சிலையானது (4) ஆயிர வருடங்கட்கு முன்னிட்டதென்றும், பிரிட்டிஷ் சிற்பசாஸ்த்திரிகள் சோதித்து நிர்ணயித்திருக்கிறார்கள் இப்பீடத்திற்கு (26) கிராமங்கள் ஜமீனாகயிருப்பதல்லாது காசி க்ஷேத்திரத்தில் (300) வீடுகளினால் கூடின மானச சரோவரமும் இன்னும் (900) வீடுகளினால் கூடின ஜங்கமவாடியும் கூட இதன் ஆதீனத்திலிருக்கின்றன.

(6) இப்பீடத்திலிப்போதுள்ள மஹா சுவாமிகளின் குருக்களான ஸ்ரீஜகத் குரு ராஜேஸ்வர சிவாசார்ய மஹா சுவாமிகள்பரம தபோநிதியாயிருந்ததினால் அக்காலத்திய பாரதீய முகண்டர்கள் ஹிந்துஸ்தானத்தின் யோகி மண்டலத்தில் இவருக்கு அக்ரஸ்தானம் கொடுத்து இவர் பாவ (உருவ) சித்திரத்தை யோகி மண்டலத்தின் முதலாவது ஸ்தானத்தில் சேர்த்திருக்கிறார்கள், ஈதல்லாதின்னும் (1911)-ம் வருஷத்தில் ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு பட்டாபிஷேகமாகும் சமயத்தில் ஹிந்துஸ்தானத்தில் பிரசித்த க்ஷேத்திர மென்றுள்ள காசி க்ஷேத்திரத்தில் ஒரு மஹநீயரின் உச்சவமாக வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் நிச்சயித்த பிரகாரம் காசி க்ஷேத்திரத்தில் அத்தியந்த பிரசித்தமா

யுள்ள இப்பீடத்தின் மஹா சுவாமிகளின் உற்சவத்தைக் கவர்ன்மெண்டார் அநேக வைபவங்களுடன் நிறைவேற்றினார்கள். இவ் விஷயங்கள் வீரசைவருக்கு கவுரவாஸ்பதமானதாயிருக்கிறது.

காஸ்யாம் விஸ்தரிதம் யேன வீரசைவ, மதம்பரம்
தயாளு: சிவயோகீச, சோபம் ராஜேஸ்வரோயமி:

## பஞ்ச பீடாதிபதிகள்.

### (1) ஸ்ரீ (108) ஜகத் குரு, வீர சிம்ஹாசனாதீஸ்வர சிவாநந்த ராஜேந்திர சிவாசார்ய மஹா சுவாமிகள் ரம்பாபுரி சம்ஸ்தானம்

ஸ்ரீ ரம்பாபுரி சமஸ்தானத்தில் தற்காலம் சில வருடங்களாக பீடாதிபதிகளில்லாமலிருந்து சுமார் 9-வருடங்களின் முன்னாக இச்சிம்ஹாசனத்திற்கு குருக்களைத் தேர்ந்தெடுக்கும் யோசனை நடந்தது. இதற்கு வேறு வேறு தேசங்களிலுள்ள அநேக வித்வான்கள் அபேக்ஷகர்களாயிருந்தார்கள். இந்த அபேக்ஷகர்களில் பீடாரோகணத்திற்கு யோக்கியரும் தக்ஷகருமாயிருக்கத்தக்கவரை விசாரிப்பதற்காக மைசூர் கவர்ன்மெண்டாரால்ஒரு சபை நியமிக்கப்பட்டிருந்தது, அச் சபையின் சம்மதத்தின்படி மஹா சுவாமிகள் தற்காலம் 9-வருடங்கட்கு முன் பீடாரோஹணம் செய்தார். மஹா சுவாமிகளின் வயது சுமார் 35. சின்ன வயதானாலும் கனமான பண்டிதராயிருக்கிறார். கல்கத்தாநகரத்தின் கவர்ன்மென்ட் சம்ஸ்கிருதகாலேஜில் வியாகரண தீர்த பரீக்ஷையில் தேரினவராயிருப்பதல்லாது கன்னடம், சமஸ்கிருதம், ஆந்திரம் ஹிந்தி மராட்டி, இப்பாஷைகளை நன்றாய்த் தெரிந்தவராயிருக்கிறார். தயாள குணமும், சாந்தஸ்வ பாவமும் உள்ளவர், மற்றும் சமாஜோத்தார விஷயத்தில் வெகு ஆவலுள்ளவர், இதற்குள்ளாக மைசூரில் ஒரு பெரிய சம்ஸ்கிருதகாலேஜ் ஸ்தாபிக்கும் உத்தேசமுடையவராயிருக்கிறார். இம்மஹாநுபாவரால் வீரசைவ சமாஜத்திற்கு இன்னுமநேக தர்ம கார்யங்களாகத்தக்க திருக்கின்றன

வீரசைவ மதாசார்யோ, வீரசிம்ஹாசனாதிபதி:
பஞ்சாக்ஷர மந்த்ர நிஷ்டோ பஞ்சாக்ஷர ஜகத்குரு:

மைசூர் ஸ்ரீமன் மஹாராஜரவர்கள் 1931-வது வருடத்தில் ஸ்ரீகைலாசபர்வதத்திலுள்ள மானச சரோவரத்தின் யாத்திரையை முடித்துக்கொண்டு ராஜதானிக்கு விஜயம்செய்து தசரா உத்ஸவம் பூர்த்தியானவுடனே ரம்பாபுரி ஜகத் குருக்களவர்கள் மடாலயத்திலிருப்பது தெரிந்து அம்மடாலயத்திற்கு மஹா ராஜரவர்கள் விஜயம்செய்து சில தினங்களங்கு தாமதித்திருந்தார். பிறகு 4-10-34-லில் ரம்பாபுரி ஜகத் குருக்களை தம்ம அரண்மனைக்கு

ராஜோபசாரங்களுடன் அழைத்து பூஜாதிகளை நிறைவேற்றி தீர்த்தப் பிரசாதங்களை யுவராஜா சஹிதமாக ஸ்வீகரித்து ஸ்ரீஜகத்குரு சுவாமிகளின் குருக்கு சுவர்ண ரஜத பல்லக்கு மஹோற்சவத்தையும், சிறப்பாக நடத்திவைத்தார்.

மைசூர் ராஜதானிக்குச் சேர்ந்த குப்பியில் 19-8-31-ல் நடைபெற்ற ஸ்ரீ ரம்பாபுரி ஸ்ரீஜகத்குரு மஹா சுவாமிகளின் தசரா மஹோற்சவத்தின் போது சுவாமிகளின் சந்நிதானத்தில் பக்தர்கள் அர்ப்பணம் செய்வித்த தங்க சாமான்களின் விபரம்.

1 மகா-ா-ஸ்ரீ குப்பி, புதுப்பேட்டை, அம்பலி, பரப்பரும் தம்பி உச்சப்பரும்கூட 3-சேர், தங்கத் தட்டு, 1-ஒப்புவித்தார்கள்,

2 ,, குப்பி, நிட்சாலெ, சன்னப்பர் குமாரர், புட்டப்ப 2-சேர் தங்க,கமண்டலம் 1 வாக்தானம் செய்தார்.

3 ,, கட்டி, சன்னபசப்ப, 1-சேர், தங்க சாமரம், 1 ஒப்புவித்தார்.

4 ,, சினிவார்·ருத்திரப்ப, 1-சேர் தங்க சாமரம், ஒன்று ஒப்புவித்தார்

5 ,, சிவராத்திரியப்ப, 1-சேர், தங்க லோடா, வாக்தானம் செய்தார்.

6 ,, பெட்டதபுரம், சுப்பராயப்ப, 1-சேர், தங்க வீரேஸ், வர பிரதிமை 1-வாக்தானம் செய்தார்.

7 ,, சினிவார்,ருத்திரப்ப குடும்பம், ஸ்ரீமதி, பத்திரம்மாள் அரைசேர் தங்க பாணி பட்டலு, 1-ஒப்புவித்தார்.

8 ,, மைசூர், குருமல்லப்பரின் மருமகள், ஸ்ரீமதி, சன்னம்மாள், 5-தோலா தங்கபஞ்சாரதி, 1-ஒப்புவித்தார்.

9 ,, பெட்டதபுரம், சன்னப்பருடைய குடும்பம், ஸ்ரீமதி, கௌரம்மாள், ஒரு தோலா தங்க சந்தனக் கிண்ணம், 1-ஒப்புவித்தார்.

10 ,, பெட்டதபுரம், சந்திரப்பருடைய குடும்பம், ஸ்ரீமதி, சிவம்மாள், 2-தோலா தங்கஅக்ஷதை கிண்ணம், 1 ஒப்புவித்தார்.

11 ,, சிவராத்ரி, பத்ரம்மாள், 3-தோலா தங்க நாகாபரணம், (சிவனணி) 1-ஒப்புவித்தார்.

12 ,, கட்டி,சன்னப்பரின் குடும்பம், ஸ்ரீமதி, சன்னம்மாள், 6-தோலா, தங்க, மங்களாரதி தட்டம், ஒன்று ஒப்புவித்தார்.

13 ,, ஜி. முருகப்பரின் குடும்பம் ஸ்ரீமதி அக்கையம்மாள் 4-தோலா தங்க பஞ்சாரதி, ஜதை ஒன்று ஒப்புவித்தார்

14 மகா-ரா-ரா-ஸ்ரீ ஒன்னுடிகெ, கங்கப்பரின் குடும்பம், ஸ்ரீமதி, சன்ன பசம்மாள், 3-தோலா, தங்க உருத்திராணி, ஒன்று ஒப்புவித்தார்.

15 ,, ஜி.பி. பசப்பரின் குமாரர், சன்னபசப்ப, அரை சேர் தங்க கலச சொம்பு, 1-வாக்தானம் செய்தார்.

16 ,, குப்பி, ஷாப்பு கடை, உச்சப்பா, அரை சேர், தங்க தாராபாத்திரம், ஒன்று வாக்தானம் செய்தார்.

17 ,, ஜி. பி. பசப்ப, ஒரு ஜதை வெள்ளி ஆவிகை, ஒப்புவித்தார்.

தற்போது நெல்யாளம் (நீலகிரி) சமஸ்தானத்து ராணி பேரம் மணியவர்கள் ரம்பாபுரி ஸ்ரீ ஜகத் குருக்களை தம்ம பங்களாவிற்கழைத்து பாத பூஜைசெய்வித்து சோடச மஹாதானங்களிலொன்றான கஜ (யானை) தானம் செய்தது தெரிந்து மகிழ் வெய்துகிறோம்.

தற்காலம் மஹா சுவாமிகளவர்கள் மைசூர் ராஜதானியில் சஞ்சாரம் செய்து வருகிறார். ஆசிரியர்

---

ஸ்ரீ ஜகத் குரு தாருகா சார்யாய நம :

## (2) ஸ்ரீ (108) ஜகத் குரு சத்தர்ம சிம்ஹாசனாதீஸ்வர சித்த லிங்க சிவாசார்ய மஹா சுவாமிகள்

## உஜ்ஜயனி சமஸ்தானம்

சித்திரக் கல்துர்க்கம் ஜில்லா பங்காரநாயகன ஹள்ளி என்னுமூரில் இவர் ஜெனனஸ்தலம், இவர் பட்டத்திற்கு வந்து சுமார் (31) வருடங்களாகின்றன. இவர் பரம தபசிகள், இவர் பீடாரோஹணம் செய்த நாள் முதற் கொண்டு உஜ்ஜயனி பீடம் தேசத்தில் அதிக பிரசித்திக்கு வந்தது. இவர் பஞ்ச பீடங்களின் உன்னதத்தின் வகை அதிக சிரமமடைந்திருக்கிறார். இவர் ஆசீர்வாதத்தின் பலத்தினால் தனம் (நிதி) சேகரிக்கப்பட்டு மதராஸ் வீரசைவ வித்யாவர்த்தக சங்கம் பல்லாரியில் ஸ்தாபிக்கப்பட்டது. சம்ஸ்கிருத வித்யார்த்திகளுக்காக (50) ஆயிரம் ரூபாய்கள் நிதி சேகரித்து ஸ்ரீஜகத் குரு தாருகாசார்ய பாடசாலையைக் கோட்டூரில் ஸ்தாபித்திருக்கிறார். மைசூரில் ஸ்தாபிக்கவேண்டுமென்றுள்ள வீரசைவ சம்ஸ்கிருத காலேஜுக்காக ரம்பாபுரி பீடத்தின் அதிகாரசமயத்தில் (11) ஆயிரம் ரூபாய்கள் வாக்குதானம் செய்தது அதில் அவகாசமாகாது, அப்பொழுதே பிரதானம் செய்திருக்கிறார். இம்மஹனீயரின் பிரபாவத்தினால் இன்னும் அனேக காரியங்கள் நிறைவேற வேண்டியிருக்கின்றன.

ஸ்ரீமத் கேதார நாதாய நம:

(3) ஸ்ரீ (108) ஜகத் குரு வைராக்ய சிம்ஹாசனுதீஸ்வர
ஸ்ரீ நீலகண்ட லிங்க சிவாசார்ய மஹா சுவாமிகள்

## ஹிமோத் கேதார சிம்ஹாசனம்

இம்மஹா சுவாமிகளின் பூர்வாஸ்ரமம் தார்வாட பிராந்தியத்தில் "கல்லேதேவ" என்னும் கிராமத்தில் ஜனித்தவர். தற்காலம் மஹா சுவாமியவர்களின் வயது சுமார் (41) கன்னடம் சம்ஸ்கிருதம்இங்கிலீஷ், மராடி, ஹிந்தி,பஹடி இந்தஎல்லாபாஷைகளும் நன்ருகத் தெரியவல்லவராயிருக்கிருர், யோகசாஸ்திரத்தின் ரஹஸ்யத்தை நன்ருகத்தெரிந்தவர். இம்மஹா சுவாமிகள் பீடாரோஹணம் செய்து சுமார் 13-வருடங்களாயிற்று. தத்பூர்வமடம் அத்யந்த ஹீனஸ்திதியிலிருந்து இச் சமஸ்தானத்திற்கு 75-ஆயிர ரூபாய்கள் கடனுயிருந்தது, அதை இவர் தீர்த்து மறுபடி லக்ஷக்கணக்கான ரூபாய்களின் நிதியைச்சேகரம் செய்து பகலிரவும் வித்யோன்னதத்திற்காக பிரயத்தினப்படுகிருர். இச்சுவாமிகள் பல்லாரி, புதுப்பேட்டை, நந்தியால, சிரிகேரி, முதலான ஸ்தானங்களில், மாஹேஸ்வரப் பையன்களின் வித்தியார்ஜ்ஜனைக்காக சம்ஸ்கிருத பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கிருர். மதராஸ், தெஹலி, பிரயாகை, கல்கத்தா காசி, லாஹுர், முதலான ஸ்தானங்களில் ஆரம்ப ஆங்கில, சம்ஸ்கிருத, வித்யாப்யாசம் செய்யும் வித்தியார்த்திகளுக்கு உபகாரச்சம்பளமும் கொடுக்கிருர். மற்றும் தம்பீடத்திலொரு ஆங்கிலேய பாடசாலையும், ஒரு ஹிந்தி பாடசாலையும், ஒரு சம்ஸ்கிருத பாடசாலை இவைகளை ஏற்படுத்தியிருக்கிருர். இன்னும் இவர் காலத்தில் வீரசைவ மதத்திற்கு எவ்வளவோ உபகாரமாக வேண்டியதாயிருக்கிறது.

பல்லாரி ஜில்லா ஆதவேனி குரு பக்தர்களின் பிரார்த்தனுனுசாரமாக ஹிமோத் கேதார ஜகத்குருக்களவர்கள் 17-10-34 புதன்கிழமை காலை, மாமூல்படிக்கு கஜாஸ்வாயுதாதிகளின் பூஜைகளை நிறைவேற்றி மாலை, 4-மணிக்கு சகல பிருதாவளிகளுடன் மஹா சுவாமிகளின் சவாரியானது பேட்டை ஸ்ரீவீரபத்திரசுவாமி தேவாலய மார்க்கமாக வன்னிமரத்தினிடம் போய் பூஜாதிகளை நிறைவேற்றி வன்னி விருக்ஷத்தின் மஹிமையை விஸ்தரித்தார்.

ஸ்ரீசைல பீடாதீஸ்வராய நம:

(4) ஸ்ரீ (108) ஜகத் குரு நாகஹாடி
பிக்ஷாவிருத்தி சிவாசார்ய மஹா சுவாமிகள்

## ஸ்ரீசைல சிம்ஹாசனம்

இம் மஹாசுவாமிகளின் வயது சுமார் 67-இவர் மஹாதபசிகள் அநாதி காலத்திலிருந்து ஸ்ரீசைலத்தின் மல்லிகார்ஜ்ஜுனலிங்க தேவாலயம் இப்பீடத்தவரின் சுவாதீனத்திலேயேயிருந்தது. தற்போ

து அது காரணாந்தரத்தினால் சுமார் (50-60) வருடங்கட்கு முன் ஸ்மார்த்த மதீயரான புஷ்பகிரி மடத்தவரின் சுவாதீனத்திற்குச் சேர்ந்திருக்கிறது. தற்போது இதின் வழக்கு கர்நூல் கோர்ட்டில் நடந்துக் கொண்டிருக்கிறது. மஹா சுவாமிகள் தற்காலம் குந்தக்கல்லில் இருக்கிறார். ஸ்ரீ காசி, பீடா தீஸ்வராய நம :

ஸ்ரீ. (108) ஜகத்குரு சிவலிங்க சிவாசார்ய. மஹாசுவாமிகள்

(5) ஸ்ரீ காசி, சமஸ்தானம்

இச்சுவாமிகளவர்கள் சோலாப்பூர், ஜில்லாவில் ஜன்மக்கிரஹணம் செய்த கன்னடியர், தற்போது மஹாசுவாமிகளின் வயது சுமார் (72) தர்க்க சாஸ்த்திரத்தில் அத்விதீய பாண்டித்யம் சம்பாதித்து கொண்டிருக்கிறார். இவர் பீடாரோஹணம்செய்து சுமார் 32-வருடங்களாயிருக்கும் இவர் தாம்அதிகாரத்திற்கு வந்தபிறகுமடத்தை அத்யந்த ஊர்ஜ்ஜிதாவஸ்த்தைக்குக் கொண்டு வந்திருக்கிறார். நம்ம வீரசைவ. மதத்தில்' இன்றைய வரைக்கும் எவ்வளவு ஜனங்கள், இக்காசியில் அப்யாசம் செய்து சம்ஸ்கிருத பண்டிதர்களாயிருக்கிறார்களோ பஹுசக அவர்களெல்லாம் இப்பீடத்தின் ஆஸ்ரமத்திலேயே அப்யாசம் செய்தவரா யிருக்கிறார்கள்.

வீரசைவ காதர்ப்பணத்தின் மொழி பெயர்ப்பு

இச்சிவலிங்க சிவாசார்ய மஹா சுவாமிகளவர்கள், 19-1-32-ல் ஸ்ரீ பஞ்சாக்ஷர சிவாசார்ய மஹா சுவாமிகளுக்கு பட்டாபிஷேகம் செய்வித்து மறுபடி 3-மாதத்திற்குள் சிவைக்கியமானார் எனத் தெரியவருகிறது. ஆசிரியர்.

---

# விதேசங்களில் சிவாலயங்களின் வியாபகம்

நம்ம பரதகண்டத்திற்கு புறம்போயுள்ள தேசங்களிலும் சிவாலயங்கள் ஏராளமாயிருக்கின்றன, இப்பொழுது ஆநாம் தேசத்தில் சிவாலயங்களின் வியாபகம் எவ்வளவு வரையிலிருக்கின்றனவென்பதை ஆராய்வோம், இந்த ஆநாம் தேசமானது தற்போது பிரஞ்சுக்காரர் சுவாதீனத்திலுள்ள இந்து சைனாவிலிருக்கிறது, பூர்வகாலத்திலித் தேசத்திற்கு, "சம்பா" வென்னும் பெயர் வழங்கி வந்தது, அத்தேசத்திலிப்போது அநேகானேக புராதன சிவாலயங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. பிரஞ்சு தேசத்தின் இதிகாச சம்சோதகத்தின் (பரிசோதனையில்) பிரசித்தரான மிஸ்டர் எ. பர்க்கென் என்பவர் அத்தேசத்திலிருந்த சிவாலயங்களிலுள்ள எல்லா சமஸ்கிருத சிலாசாசனங்களையும் பரிசோதித்து ஒரு பெரிய கிரந்தத்தை எழுதியிருக்கிறார், இக்கிரந்தாதாரத்தினாலும் மற்று

மித்ர பிரஞ்சு கிரந்தாதாரங்களினாலும், மிஸ்டர், ஆர். சி. மஜூம் தார், என்பவர், ANCIENT, INDIAN, COLONIES, IN, THE, FAR, EAST, என்சின்ட் இண்டியன் காலனீஸ் இன், தி, பார், ஈஷ்ட், என்னும் கிரந்தத்தை எழுதியிருக்கிறார். இப்புஸ்தகத்தில் அத்தேயத்திலிருந்த 92. சாசனங்கள், சிவனுடைய விஷயமாகவும், 3. சாசனங்கள், விஷ்ணுவினுடைய விஷயங்களும், மற்றும், 5. சாசனங்கள், பிரஹ்மனுடைய விஷயமாகவும், மற்றுமிரண்டு சாசனங்கள், சிவன். மற்றும் விஷ்ணு இவரிருவர்களின் விஷயமாகவும், மற்றும், 7 சாசனங்கள், புத்தனுடைய விஷயமாகவும் இருக்கின்றனவென்று எழுதப்பட்டிருக்கிறது. இம்மஹோதயரானவர் சமஸ்கிருத எழுத்துக்களிலிருந்த இவ்வெல்லா சாசனங்களையும் இருந்தபடியாகவே அச்சிட்டிருக்கிறார். சில புராதன சாசனங்களில் எழுத்துக்களே நஷ்டமாயிருக்கின்றது. இச்சாசனங்களிலுள்ள சமஸ்கிருத கவிகள் வெகு ஹிருதயங்கமமாயிருக்கிறது, சிவனுடைய விஷயமாயிருக்கும் அநேக சாசனங்களின் மேற்பாகத்தில் (முதலில்) ஓம் நம சிவாய, என்னும் மஹா மந்திரம் செதுக்கப்பட்டிருக்கின்றன, பிறகு அத்தேயத்தை யரசாண்ட அரசருடைய வர்ணனை (விருத்தாந்தங்) களையும், அவர்கள் ஸ்தாபித்த சிவாலயங்களின் வர்ணனைகளையும், கத்ய பத்யாத்மகமாக (சுலோக ரூபமாக) செதுக்கப்பட்டிருக்கின்றன. அத்தேசத்தின் பிறகியொரு சாசனங்களையும் படித்துப் பார்த்தால் சிவபக்தரின் மனமானது ஆனந்த சாகரத்தில் ஊடாடுவதைப் போலிருக்கிறது. பூர்வத்திலத்தேசத்தை யரசாண்ட சமஸ்த அரசரும் பரம சிவபக்தர்களாகப் போயிருக்கிறார்கள், அவ்வரசர்களிடத்திலிருந்த சிவபக்தியானது சைவ சிகாமணிகளெனச் சொல்லும வீரசைவர் (லிங்கதாரி) களிலுங்கூட யில்லையெனச் சொன்னால் அதிசயோக்தியாகமாட்டாது.

அத்தேசத்தில், மைசன் என்னும கிராமமிருக்கின்றது அக்கிராமமானது பூர்வகாலத்தில் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தை விட விசேஷமான சிவக்ஷேத்திரமாயிருந்ததென அவ்விடமிருக்கப்பட்ட அநேகானேக சிவ தேவாலயங்களினாலும், சிலாசாசனங்களினாலும தெரியவருகின்றன, அவ்விடமிருக்கப்பட்ட சிவாலயங்களைப்போல அதிக மனோஹரங்களான சிவாலயங்கள், நமது பரதகண்டத்திலேயே இல்லையெனச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட பரம பவித்திரமான சிவக்ஷேத்திரமானது காலமஹிமையினால் அன்னிய மதஸ்தருடைய கையிலகப்பட்டு அநேகானேக ஈனவஸ்தைக்குள்ளாகி யிருப்பதைப் பார்க்கில் யாருக்குத்தான் விசனமுண்டாகாது.

அந்த மைசன் கிராமத்தில் அனேக சாசனங்களிருக்கின்றன, அதில் 4-வது சாசனத்தில் பத்ர வர்மனென்னுமரசன்

பத்ரேஸ்வரன், என்னும் சிவலிங்கத்தை ஸ்தாபித்து அச்சுவாமி யின் சேவைக்காக (பூஜைக்காக) சுலஹ பர்வதம், மஹா பர்வதம், குசக பர்வதம், மஹா நதி, இவைகளின் மத்தியிலுள்ள சமஸ்த பூமிகளையும் தானம் செய்த விஷயமானது செதுக்கப்பட்டிருக் கிறது. இச்சாசனமானது, கிறிஸ்து சகாப்தம் 400-ம் ஆண்டில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விசாலமுள்ள பூமிகளையும் பத்திரவர்ம மஹாராஜனனவன், பத்ரேஸ்வர லிங்கத்திற்காக தானம் செய்திருப்பதானது அம்மஹா ராஜனுக்கு அச்சிவலிங்க த்தினிடத்தில் எவ்வளவு பக்தி யிருந்திருக்கவேண்டுமென்னும் விஷயத்தை வாசகர்களே யோசித்துக்கொள்ளவும், பத்திரவர்ம ராஜனால் கட்டப்பட்ட இத்தேவாலயமானது எரிந்து (சுட்டு)ப் போகவும் ருத்திரவர்மனுடைய புத்திரனை சம்பு பத்திரவர்ம னென்பவன், சம்பு பத்ரேஸ்வரன், என்னும் பெயரால் மற்றொரு சிவலிங்கத்தை ஸ்தாபித்தான், இவ்விஷயமானது 7-வது சாசனத் தில் சொல்லப்பட்டிருக்கது அச்சிவலிங்கத்தின் ஸ்துதியானது கீழே சொல்லியுள்ள மாதிரி அச்சாசனத்தில் எழுதப்பட்டிருக் கின்றது.

சிருஷ்டபா யேனதிரிதய மகிலம் பூர்புவ: ஸ்வ: ஸ்வசக்த்ய
ஏநோதகாதம் புவன தாரிதம் வஹ்னினே வாம்தகாரம்
யஸ்யாசிம்த்யோ ஜகதிமஹிமா யஸ்யநாதிர் நசாம்த
சம்பாதேசே ஜனயதுசுகம் சம்பு த்ரேஸ்வ ரோயம்.

இச்சுலோகத்திலுள்ள அர்த்தத்தை கவனித்துப் பார்க் கில் அந்த அரசனுக்கு சிவலிங்கத்திலெப்படிப்பட்ட கனதரான (மேலான) பக்தியிருந்ததென்னும் விஷயமான து பிரதி யொருவரு க்கும் தெரியவரும், மற்றும், (21) வது சாசனத்தில்,

சுலோஹம்.

ஜயதி ஜித பனேஜோ பிரஹ்ம விஷ்ணு வாதிதேவ
பிரணதபத யுகாப்ஜோ நிஷ்கலோப் யஷ்டமூர்த்தி:
திரிபுவன ஹித ஹேது: சர்வ சங்கல்ப ஹாரீ
பரபுருஷ இஹ ஸ்ரீசான தேவோ யமாத்ய:

மற்றும், 32-வது சாசனத்தில் சுலோஹம்.

பிரஹ்மாதி முனி சுரநத: சஸ்ரீ பத்ரேஸ்வரபிரபுர்ப் பகவான்
ஜயதி ஜகத்குரு ராத்யஸ்ரீ புரவிஜயா யோகிபி: சாத்ய:

இச்சுலோகங்களினால் சிவனுடைய விஷயமாயிருந்த விசேஷத்தைப் பார்க்கில் சிவ பக்தர்களின் மனசாகர மானது. (மனக்கடலானது) அளவுக்கு மீறி பொங்குகின்றதைப் போலிருக் கின்றது. பிரஹ்ம விஷ்ணுவாதிகளால் பூஜிக்கப்பட்ட பாதகமலங்க ளிலுள்ளவனும், திரிலோக குருவும் இவை முதலானவிசேஷங்களை

யுங்கூட வேண்டுமானல் அம்மஹாராஜர்களிடத்தில் சிவனுடைய வகையில் வீரசைவர்களைவிட அதிக பக்தி யிருந்ததெனவும், இதற்கு வீரசைவாசார்யர்களின் உபதேசமே மூலகாரணமாயிருக்கலாமெனவும் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இவ்வகையில் அத்தேசத்தில் கிடைத்த ஒரு சாசனத்தில் மஹத்துவமான விஷயமானது காணப்படுகின்றது.

தற்போது, 1,300-வருடங்களுக்குமுன் அத்தேசத்தை யரசாண்ட பிரகாசதர்மனென்னும் மஹாராஜனனவன் பிரபாசேஸ்வரன்' என்னும் சிவலிங்கத்தை ஸ்தாபித்த விஷயமானது 12-வது சாசனத்திலிருக்கப்பட்ட சில வாக்கியங்களினல் தெரியவருகின்றன, இச்சாசனத்தில்,

சுசலபுவனைகநாதம் ஸ்ரீ பிரபாசேஸ்வரம் பிரதிஷ்டாபிதவான், இம்மாதிரியாக ஒருவாக்கியம் எழுதப்பட்டிருந்துப் பிறகு இதின் கீழ்கண்டபடி பரமேஸ்வரனுடைய விஷயமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

யோபிரஹ்மவிஷ்ணுதிரிதசா திபாதிசுராசுரபிரஹ்மநிருபர்ஷிமான்ய

ததாபிபூத்யை ஜகதாம நிருத்யத் ஸ்மசான பூமாவதி சித்ரமேதத்

இத்தியாதி சுலோகங்களினல் பரமேஸ்வரனுடைய சர்வோத்தமத்வத்தைச் சொல்லப்பட்டிருக்கின்றது, மற்றும் 42-வது சாசனத்தில்.

சுலோஹம்

தேவேந்திர: கிலபூர்வதோ ஸ்தித ததாயாம்யாம் சரோஜோத்பவ
சந்த்ரார்க்கா விஹ பிருஷ்டதச்ச பகவான் நாராயணோ வாமத:
மத்யஸ்தோஜ் வலிதாபரஸ்மி சஹிதஸ்சோங்கார பூர்வைஸ்ததா
ஸ்வாஹாம் தைர்நிஜ மந்த்ரக்ருஸ்து தனதோயோ நௌததாத்
வைஸ்சுர:

என்னும் சுலோஹமானது செதுக்கப்பட்டிருக்கின்றது. இச்சுலோஹத்தின் முதலாவது சரணம் (வணக்க) மானது வியாகரண தோஷத்தால் கூடினதாகக் காணப்படுகின்றது, ஆனலும் இருந்ததைப் போலவே பிரசுரித்திருக்கிறேம், இச்சுலோஹத்தின் அர்த்த மென்னவெனில் ஸ்ரீமத்பரமேஸ்வரன் கைலாத்தில் சபாசீன (சபையுடன் கூடினவ) னயிருந்தபோது தேவேந்திரன் கிழக்குப்பக்கத்தி லிருந்தானெனவும், பிரஹ்மன் வலப்பக்கத்திலிருந்தானெனவும், விஷ்ணு இடப்பாகத்தி லிருந்தானெனவும் சூரிய சந்திரர்கள் பின்புற மிருந்தார்களெனவும் இவர்கள் முதலான எல்லா தேவர்களும் கைகூப்பிக்கொண்டு "ஸ்வதா" ஸ்வாஹா,. என்னும் மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு சிவனை அத்தியந்தபக்தியுடன் ஸ்துதித்துநமஸ்கரித்துக்கொண்டிருந்தார்களென அர்த்தமா

கின்றது. இச்சுலோஹத்தின் அர்த்தத்தை விசாரித்துப் பார்க்கில் அத்தேசத்திய அரசர்களுக்கு சிவனுடையவிஷயத்திலிருந்தபூஜிய புத்தி சீமாதீத (பக்தியானது அதிக) மாயிருந்ததென பிரதியொருவனுக்கும் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. மஹாராஜர்களிடத்திலிப்படிப்பட்ட அநிதர சாதாரணமான சிவபக்தி நிலைக்கொண்டிருந்ததைப் பார்க்கில் இதற்கு வீரசைவ மதாசார்யர்களின் அநுக்கிரகமே மூலகாரணமெனக் காணப்படுகிறது, ஏனென்றால் இப்பூமண்டலத்தில் உலகோத்தாரமான சிவபக்தியை ஸ்தாபித்தவர்கள் வீரசைவாசார்யர்களல்லாமல் வேறொருவரில்லையெனக் கண்டாகோஷமாடிச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. வீரசைவாசார்யர்கள் சமஸ்த தேசங்களிளெல்லாம் சிவபக்தியை நிலைநிறுத்தவதற்காகவே பரமேஸ்வரனால் இப்பூமண்டலத்திற்கு அநுப்பப்பட்டிருக்கும் விஷயமானது, சிவாகமங்களினாலும் இதரகிரந்தங்களினாலும் தெரியவருகின்றது, இச்சிவாசார்யர்கள் ககன (ஆகாய) மார்க்கமாக சமஸ்தபிரபஞ்சங்களெல்லாம சஞ்சரித்து சிவபக்தியை பிரதிஷ்டித்த விஷயமானது அவர்களின் லீலாபோதக சரித்திரங்களினால் தெரியவருகின்றன. இவர்களைப் போலவே இவர்களின் பரமபராகதர்களான (பரம்பரையாளர்களான) ஆசார்யர்களுங்கூட சிவபக்தியை பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

ஆறாம் தேசத்தின், பார்லான், என்னும், கிராமத்திலுள்ள ஒருசிலா சாசனத்தில் ஸ்ரீகல் னென்னும் அரசகுடும்பத்தவனொருவன் அதிகாரியினால் ஸ்தாபிக்கப்பட்ட சிவாலயத்தின விஷயத்தைச் சொல்லியிருக்கிறது. இவ்வரச குடும்பத்தவர் பரமசிவபக்தராயிருந்தாரென்னும் விஷயமானது இச்சாசனத்திலுள்ள 6-வது சுலோஹத்தினால் காணப்படுகின்றது. அச்சுலோஹமாவன

ஸ்ரீருத்ர மத்யேஸ்வர மத்புதாக்கம்
சதர்ம காங்க்ஷீ சிவதத்வ சேவீ
தத் பக்தயே ஸ்ரீஜயசிம்ஹ வர்ம
பிரசாதக: ஸ்தாபிதவான் தரித்ரப்ய

இம்மாதிரியாகச் சொல்லப்பட்ட பிறகு மற்றும், சுலோஹம்

ஸ்ரீவிருத்தேஸ்வரே பூர்வம் பிரபிதா மஹேஹன
ஸ்தாபிதே பரசக்ர பின்னேயர் ஸ்ரீசிவலிங்கே சம்போ
முனிஸ் சிவாசார்ய நாமதேய: புந: ஸ்தாபிதவான் இதி
சைவ கிரியாவித் குர்த பிரசக்தோ
தேவார்ச் சனக்ஞான சமர்த்த புத்தி:
பித்ரூர் குணைர் பாரதரான் சசித்தே
சம்சித்ய புண்யம் சகரோது கீர்த்தியை
சாகேகத் வியவ்ட பிர்யுக்கே பஞ்சாஹே சுச்ய பாண்டரே
ஸ்தாபிதஸ் சிவலிங்கேச: சிவாசார்யேணதீமதா

இம்மாதிரியாக இரண்டு சுலோஹங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மேற்கண்டவாக்கியங்களின் அர்த்தத்தையும் சுலோஹங்களின் அர்த்தத்தையும் விசாரித்துப் பார்த்தால் பூர்வத்தில் இவ்வதிகாரியின் முத்தஜ்ஜ (முப்பாட்ட)னால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஸ்ரீவிருத்தேஸ்வர னென்னும் லிங்க மூர்த்தியானது வைரி (விரோதி)களால் நாசம் செய்யப்பட்டதென்றும் அதே ஸ்தானத்தில்இவ்வதிகாரியானவன் ஜயசிம்ஹவர்மனென்னும் பெயருடைய லிங்கமூர்த்தியை மறுபடியும்,பிரதிஷ்டை செய்தானெனவும், இச் சிவலிங்க மூர்த்தியானது சிவாசார்ய ரென்னும் பெயருடைய ஆசார்யரால் ஸ்தாபிக்கப்பட்டதெனவும் தெரியவருகிறது. சிவாசார்ய ரென்னும் சிவாக்கியமானது இவ்வுலகில் வீரசைவாசார்யர்களுக்கு உபயோகப்படுவதல்லாமல் மற்றொருவருக்குமில்லை யென்னும்விஷயமானதுபிறதியொருவருக்கும் தெரிந்ததாயிருக்கின்றது ஆனதா லத்தேசத்திலிப்படிப்பட்ட அதியுஜ்வலமான சிவபக்தியானது பிரசாரத்திலிருந்ததற்கு வீரசைவாசார்யர்களின் அநுக்கிரகமே மூலகாரணமெனச் சமுசயமில்லாமல் சொல்லவேண்டியதாயிருக்கிறது. மேற்கண்டசுலோஹத்தினலிவ்வதிகாரிக்குசைவகிரியாவித், என்னும் விசேஷத்தைக் கொடுத்திருப்பதாலிவன் சிவாகமோக்தங்களின் சகல கிரியைகளையும் நன்ருகத் தெரிந்து அதைப் போலவே ஆசரி (அனுஷ்டி)த் திருந்தானென வியக்தமாகிறது. இம்மாதிரி அசாதாரண (ஒருவருமடையக்கூடாத)சைவசம்பத்துடன் கூடியிருந்தாலும். தேசமானது இப்போது பக்திசூன்யமாயிருப்பதைப் பார்த்தால் யாருக்குத்தான் விசனமுண்டாகாது. பூர்வ காலத்திலிருந்த சிவபக்தியானது ஸ்ரீபரமேஸ் வரனுடைய அநுக்கிரகத்தினுல் இனி மேலாவதும் சர்வமும் நிறைந்து சைவ வைபவமானது பிரபஞ்சமெல்லாம்வியாபிக்கவேண்டுமென ஜகன் நியாமகனைப் பக்தி பூர்வமாக ஸ்துதிப்போமாகவும்.

6-6-32, 13-6-32, பிரபா பத்திரிகையின் மொழி பெயர்ப்பு.

---

ஸ்ரீ ஜகத் குரு மருள சித்தேஸ்வர: பிரசீதந்து.

## சிவ யோகம்.

---

சிவயோகமென்ருல் சிவனிடத்தில் சித்த விருத்திகளை நிரோதித்து பாஹியாகார விருத்திகளைத் தடுத்து சிவாகாரங்களாகச்செய்வதென்று அர்த்தமாகும். இப்படிச்செய்வது சுலபசாத்தியமல்ல. எப்படி என்ருல் ஓர் பர்வதத்தின் மேல்பாகத்திலிருந்து அதி வேகத்துடன் கீழே விழும், பெரிய பிரவாகத்தைத் தடுத்து அதை மேலேயே திருப்புவது எவ்வளவுசிரமசாத்தியமோ

அதுபோல ஸ்ரக் சந்தன வநிதா (புஷ்ப சந்தன ஸ்த்ரீயா)தி விஷய தேசமென்னும், கீழே தாழ்ந்த பூமியில் விழுந்துக் கொண்டிருக்கும் சித்த விருத்தி பிரவாஹத்தைத் தடுத்து சிவனென்னும், ஊர்த்வ (மேல்) தேசத்திற்குத் திருப்புவது இவ்வளவு கஷ்ட சாத்தியமா யிருக்கிறது. இப்படிக் கஷ்டதரமான சிவயோகம் எவனுக்குச் சாத் தியமாகுமோ அவனே தீரனென்றும், வீரனென்றும், சூரனென் றும், சொல்லவேண்டுமே யல்லாமல் மற்றவர்களைச் சொல்ல என் றைக்கும் சாத்தியப்படமாட்டாது. ஏனென்றா லிவனுக்குப் பா ஹிய சத்துருக்க (புறம்பான் பகைவர்க) ளில்லாமலிருந்தாலும், காமக்குரோதாதி சத்துருக்களிருந்தே யிருக்கின்றனர். சிவயோகத் தைச் சாதித்த வீரன், மாத்திரம் அஜாத சத்துருவெ (சத்துரு வில்லா தவனெ) னப்படுவான். இவன் காமக்குரோதாதி ஷட்ரி புகளின் ஜனக (உபாதானகாரண) மான சித்த மென்னும் பிரபல சத்துருவை ஜயித்திருக்கும் போது காமாதிக லெங்கிருந்துவரும். கபாலம் நாசமானால் கடம், இல்லையன்றோ, சித்தத்தை ஜயித்தவன் முதலிலேயே பாஹியேந்திரியங்களை ஜயித்தே யிருப்பான். சித்தத்தை ஜயிப்பதென்றால் அதன் சுவாபாவிகமான விஷயங் களிடத்து சலனத்தை நிருத்தி சிவனிடத்தில் லயம் செய்விப்ப தென்றர்த்தமாகும், சிவனிடத்தில் லயம் செய்விப்பதே தியான மாகும். இதுவே சிவயோகமாகும். இப்படிப்பட்ட சிவயோக முள்ளவனே பிரத்யகாத்மனை சிவனை நன்றாய்க் காண்பான். சிவனைசாக்ஷாத்கரித்தவனே முக்தன், இவனே தீரன் இவ்விஷயமாக,

பராம் சிகாநிவ்யத் ருணத் சயம் பூஸ்தஸ்மாத் பராஜ
வஸ்யதிநாம் தாத்மன் கச்சித்தீர: ப்ரத்ய காத்மாநம்
ரெக்ஷதா விருத்த சக்ஷு ரமிர்தத்வ மிச்ச்ன்

என்னும் சுருதியும் பிரமாணமாயிருக்கிறது. இச் சிவ யோகமானது சாதனரூப மென்றும், சாத்தியரூப மென்றும் இர ண்டு விதமாயிருக்கும். சாதனரூபமான சிவயோகத்தில் பக்தாதி ஷட்ஸ்தலங்களும் அவைகளில் அடக்கமாயிருக்கும். இயமாதி தாரணாந்தங்களான ஏழு அங்கங்களும் அடக்கங்களாகும். சாத் திய ரூபமான சிவயோகம் பாதஞ்சல தர்சனத்தில் சமாதி யென் றுச்சொல்லிக்கொள்ளும் ஐக்யஸ்தலமாகும், இவ்வைக்கிய ஸ்தலத் தையடைந்தவனே ஜீவபாவத்தை விட்டு சிவனாயிருப்பான். இவன் சர்வோபாதிகளிலிருந்து விடப்பட்டவனை காரணம் சிவனெனப்படுவான், ஆனதினால்.

பாசபத்தோ பவேஜ்ஜீவ: பாசமுக்தோ பவேச்சிவ:

என்று ஆகமம் சொல்லுகிறது. கீடபிரமர (குளவியும் புழுவும்) யோகத்தினால் பிரமமே (குளவியே) யாவதைப் போல மனிதன் சாதன ரூபமான சிவயோகத்தினால் சிவனேயாவான், சா

தன ரூபமான சிவயோகமானது பாஹிய மென்றும், ஆப்யந்தர மெ (உள்ளெ) ன்றும் இரண்டு விதமாயிருக்கும். பாஹிய சிவ யோக மென்றால் பாஹிய சரீரத்தில் இஷ்ட லிங்கதாரண மெனப் படுவது, இது முமுக்ஷுவான (மோக்ஷ விருப்பமுள்ள) பிரதி யொரு மனிதனுக்கும் இருந்தே தீரவேண்டும் ஈதில்லாம லிருந் தால்காமிகமல மென்னும் பாசம் விட்டுப்போவதேயில்லை. இக்கதி ருந்தால் முக்தி லபிக்கமாட்டாது. இவ்விஷயமாக

அமிர்தஸ்ய தேவதாரணோ பூயாசம்
அதப்த தநுர்நத தாமோ அஸ்நுதெ

இத்தியாதி சுருதிகள் உத்கோஷிக்கின்றன. தநுர்த்தாரி க்கு ஆதியில் ஸ்தூலக்குறி சித்திக்காமல் சூட்சுமக்குறி சித்திக்கா வாறுபோல பாஹிய யோகமில்லாமல் ஆப்யந்தர சூட்மயோகம் சித்திக்காது, இவ்விரண்டு வித சிவயோகத்திற்கும் அஷ்டா வர்ணங்களும் பஞ்சாசாரங்களும் அங்கங்களாயிருக்கும். இச்சிவ யோகத்திற்கு லிங்காங்க சாமரஸ்யமென மற்றொரு பெயருண்டு, மோக்ஷாபேக்ஷையுடையவன்முதலில் சாதனசம்பன்னனாகவேண் டும். சாதனமில்லாமல் சாத்திய ரூபமான பலம் கிடைக்கா தென் பது லோகாநுபவமேயாயிருக்கும், தண்டாதி (தடி) சாதனங்களில் லாமல் கடம் லபிக்கா (குடம் உண்டாகா) து விதை விதைத்து அதற்கு ஜலம் விடுதலாதி சாதனங்க ளில்லாதிருந்தால் பிறகு பலன் கிடைக்காவாறுபோல சாதகங்களான அஷ்டாவரணாதிகளை முதலில் சம்பாதிக்க வேண்டும். இச்சம்பாத்தியத்திற்காக ஸ்ரீ குரு மூர்த்தியை யநுசரித்து அவரால்சிவதீக்ஷையடைய வேண்டியது. அப்பொழுது சாதனசஹிதம் சிவயோகம் (லிங்காங்கசாமரஸ்யம்) தனக்குப் பிராப்தமாவதுமல்லாமல் சாத்திய (பலன்) ரூபமான சிவயோகமும் லபிக்கும். சாதன சஹிதமான சிவயோகத்தினாலே யே சிவபக்தி, சிவதியானம், சிவவிரதம், சிவார்ச்சனம், சிவக் ஞானங்கள், அந்தர்க்கதங்களாகும், (இடையில் வரும்) இச்சாதன் சஹித சிவயோகமே தீக்ஷாகாலத்தில் சிஷ்யனுக் குண்டாயிருக் கும். குரு அக்காலத்திலுபதேசித்த மாதிரியாக அச்சாதனங்களை யாஸ்ரயித்துக் கொண்டே போனால் இரண்டாவதான சாத்திய ரூப (அனுகூல அல்லது பூரண) மான மோக்ஷம் லபிக்கும். அக் குருவின் ஆக்கினைக்குமாறாக ஆஸ்ரயித்தால் மோக்ஷம் கிடைக்கா மல் குருவின் ஆக்ஞா பங்க தோஷ (கட்டளைக் குற்ற) த்திற்குப் பாத்திரனாவான், கிரியாசாரக்காரர் லிங்காங்க சாமரஸ்யமிரண்டு வித மெனச் சொல்லிப் பிறகு சாதன சஹிதமான சாமரஸ்யம் குருவினாலேயே தீக்ஷையின் போது செய்யப்படு மென்றும், இரண்டாவது பலன் ரூபமான தென்றும் சொல்லியிருக்கிறார்.

த்விதீய மபி சிஷ்யஸ்ய குருவாக்யஸ்ய பாலநாத்

என்றுச் சொல்லியிருப்பதால் தன்னுடைய தீக்ஷாகுரு விணுக்ஞையை யெச்சீவனும் பாலிக்கவேண்டியது. எம்மனிதன் தனக்கு தீக்ஷாகாலத்திலுதவின அஷ்டாவர்ணங்களை விடுவானே அல்லது அவைகளி லொன்றையாவதும் இரண்டையாவதும் விடுவானே அவனென்றைக்கும் வீரசைவன (லிங்கதாரியா)கமாட்டான். மற்றும் சாதனவஸ்த்தை சஹிதம் சிவயோக சம்பன்னனென்றுங் கூட சொல்லிக்கொள்ளமாட்டான் என்றால் சாதக சிவயோகி யெனப்படுவான். சாதகனுகா விட்டால் சாத்திய (மோக்ஷ) முள்ளவனுக மாட்டான். ஆனதினால் சாதனவஸ்தை சஹித சிவயோகி யென்னப்பட்டு சாத்திய ரூபமான சிவயோக சம்பன்னனுகவேண்டும். தீக்ஷாகாலத்தில் ஸ்ரீ குரு மூர்த்தி ஏ சிஷ்யனே முதல் முதலான ஆஸ்ரமத்தின் தர்மங்களை நீயடைந்த போது என்னையும் நானுபதேசித்த மந்திரத்தையும் விட்டு அநு சரிப்பா யென்று ஆக்ஞா தீக்ஷையிலாவது, உபமா தீக்ஷையிலாவது உத்தரவு கொடுக்கவில்லை. குரு லிங்க ஜங்கமாத்யஷ்டா வர்ண நிஷ்டையுள்ளவனுயிருயென்பதேஅவரின் உத்தரவாயிருக்கிறது. ஆனதினால் வீரசைவ ரெனப்படும் சர்வரும் குரு வாக்கியத்தைப் பரிபாலனம் செய்து புனரா விர்த்தி ரஹிதமான (மறுஜனன மில்லாததான) மோக்ஷ சாம்ராஜ்யத்தை (பலன் ரூபமான சிவ யோகத்தை) யடையவேண்டு மல்லாமல் அவரின் வாக்குக்கு மாருக ஆஸ்ரயித்து நரக ரூபமான மஹா துக்கத்தை யடையக் கூடாதெனச் சொல்லுகிறேன்.

ஸ்ரீ சத் குரு ஸ்வாமினே நம :

7-10-29 பிரபா பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பு

---

ஸ்ரீஜகத் குரு பஞ்சாசார்யா : பிரசீதம்து

## வீரசைவ (லிங்காயுத)மத மீமாம்சை

(o)

தீக்ஷா காலத்தில் ஸ்ரீகுரு முக்தி சாதனமான எந்தஆசாரங்களைப்போதித்திருக்கின்றாரோ அவைகளையே சரீர(தேஹ)முள்ளவரைக்கும் வைதிக கர்மத்தைத் (வேத ஒழுக்கத்தொழிலை) தவராது நடத்தவேண்டியது. ஸ்ரீஜகத்ஆசார்ய ரேணுக பகவத் பாதர், சீல சம்பாதன மென்னும் ஸ்தலத்தில் பிரம்ம ஜிக்ஞாசாவஸ்ய கதையை உத்தரவு கொடுத்திருக்கிறார். வேதாந்த விசாரம் விட்டால் லிங்காங்க ஞானம், திடப்படாமல்போய் காமக்குரோதாதிகள் மறுபடியும் அந்தக் காரண (மன) த்தில் பிரவேசமாகுமெனப் பாவித்து ஜகதாசார்யர் உபநிஷத்தாதி சாஸ்திர சிந்தனையைப் போதித்திருக்கிறார். இன்னும், சிலர் கிரியையே(தொழிலே) மோ

க்ஷத்திற்குச் சாதன மென்பார்கள். மற்றும் சிலர் ஞானத்தி (அறிவி) ஞலேயே முக்தி லபி (சித்தி) க்கு மென்று சொல்லுவார். ஆனால் ஸ்ரீ ஜகத் குரு பஞ்சாசார்யர் சாஸ்திரத்தில் உபய (இரு) அவஸ்தையும், சொல்லியிருக்கிறது. ஸ்ரீ ஜகதாசார்யர் போதித்த தென்னவென்ருல்:- ஞானத்தை யடைந்துவிட்டாலும், மஹேஸ்வரருக்கு கர்மம் (தொழில்) வேண்டும். இன்னும், கர்மமென்ருல் சுவர்க்க முதலான நஸ்வரங்களைக் கொடுக்கத்தக்க யக்ஞாதிகளல்ல நிஷ்காமமும், முக்தி விரதமான லிங்கார்ச்சனுதிகளே கர்மங் (தொழில்)கள். இந்த லிங்கார்ச்சனுதி பதி கருமங்கள் மரண பரியந்தம் கிராஹ்யங்களா (கிரகிக்கத்தக்கதா) யிருக்கும். ஏனென்ருல் ஆசாரமே சர்வருக்கும் அலங்காரப்பிராயமாயிருக்கும். ஆசார ஹீனன் உலகத்தில் நிந்தியனுகுவான். ஆனதினுல் ஞான கருமங்களிரண்டும் குருடன், முடவர்களைப்போல சாபேக்ஷி (தீராத வாஞ்சையுள்ளவை) களா இருக்கும். குருடன் வழியை யறியான். முடவன் கண்ணிருந்தாலும், காலில்லாததினுல் முன்னுக்குப்போக சமர்த்தனுகமாட்டான். உபய (இருவ) ரும் சேர்ந்தால் வழியைச் சுகமாகக்கடக்கலாம். இப்படியாக ஞான கர்மங்களிரண்டும், பரஸ்பர சாபேக்ஷி (அன்னியோன்னிய வாஞ்சையுள்ளவை) களாயிருப்பதினுல் லிங்கதாரி பிராம்ணன் சிவாக்ஞாபரிபாலனர்த்தமாக சிவார்பண புத்தியுடன் கர்மத்தை யாஸ்ரயித்து, வேதாந்த சிந்தனையைச் செய்துக்கொண்டிருக்கவேண்டு மென்பதால் ஞான கருமங்களிரண்டின் அவசியமும், சம்பூர்ணமாயிற்று. ஆனுலிப்போது ஜிக்ஞாஸ்யமான பிரம்மஸ்வரூபத்தை நிரூபிப்பதற்காக சக்தி விசிஷ்டாத் (சிவாத்) வைத சித்தாந்தத்தை நிரூபிக்கிறேன்.

சக்த்யா விசிஷ்ட: சக்தி விசிஷ்ட: சக்தி விசிஷ்டச்ச
சத்தி விஷ்டச்ச சக்தி விசிஷ்டௌ நத்வைதம் அத்வைதம்
தயோரத் வைதம் சக்தி விசிஷ்டாத் வைதம்,

என விக்கிரகமானது சூட்ம சிதசித் ரூப சக்தி விசிஷ்டமானது, பிரம்மம் ஸ்தூலசித சித்ரூப சக்தி விசிஷ்டமானது, ஜீவன் ஏதாத்ருச (இவ்விதமான) சக்தி விசிஷ்டரான சிவ ஜீவரின் ஐக்யத்திற்குச் சக்தி விசிஷ்டா (சிவா) த்வைத மென்பார்கள். பரசிவ பிரம்மம் தன் சக்தியின் பரிணும வசத்தி (வேறுபாட்டி) ஞல் ஆணவாதி மலத்திரய சம்மந்தத்தை யடைந்து சரீரத்திரயா வச்சின்னராகி ஸ்வரூபகோபனையி (உருவ மறைப்பி)ஞல் ஜீவ பாவத்தையடைந்து காரிய ரூபத்தினுல் பரிணமித்த (வேறு பட்ட)து. மறுபடியும் சுவ சக்தி விகாசத்தி (வெளிப்படுதலி) ஞலே மலத்திரயங்களை விடுவித்துக்கொண்டு சிவஸ்ரூபத்தை யடைந்து ஸ்வஸ்வரூபா நந்தரச நிற்பரத்தி (நிறைவி) ஞல் தான் தானேயாகும். இதுவே சக்தி விசிஷ்டா (சிவா) த்வைத ஸ்வரூபமாகும்.

த்வாசு வர்ணு, த்வேப்ரஹ்மணீ பேதி தவ்யே.
இத்யாதி சுருதிகள் ஜீவ பிரஹ்மருக்கு பேதத்தைச் சொல்லும்.
"ஏகமேவாத்விதீயம்" ஏக ஏவருத்ரோ "சிவமத் வைதம்"

இத்தியாதி சுருதிகள் பரப்பிரஹ் மைகத்வத்தைச் சொல்லும். இப்படி பரஸ்பரம் சுருதி வாக்கியங்களுக்கு விரூதமுண்டாகி இரண்டு விதமான சுருதிகளுக்கும், அசாமஞ்சஸ்யம் பிராப்தமா (பொருந்தாமை லபிக்)கு மென்று பூர்வ பக்ஷியர்களின் அபிப்பிராயமாகும். சித்தாந்தியின் உத்தரம் சூட்ம ஸ்தூல சித சித் பிரபஞ்சாகார சக்தி விசிஷ்டரின் அபேதத்தைச் சொல்வதினுலும் விசேஷணவிசேஷயபாவத்தைக்காட்டி துவைதத்தைச்சொல்வதினுலும் ஸ்ரீமத் பஞ்சாசார்ய பகவத் பாதரின் சக்தி விசிஷ்டா (சிவா)த் வைதமதத்தில் பேதா பேதங்களிரண்டும், அங்கீகரிக்கப்படுவதினுலும் பரஸ்பர விரோதமுள்ள சுருதி வாக்கியங்கட்கு சஹஜமான சாமஞ் ஜஸ்ய (பொருத்த) முண்டு.

ஆனுல் பரசிவ பரப்பிரம்ம மென்னும் பரமாத்மனுக்கு ஸ்ரீமத் பஞ்சாசார்ய பகவத் பாதர் முக்கியமாக சத்தி வைசிஷ்யத்தை (கூடிய தன்யை)ச் சொல்லுவார்கள். ஸ்ரீ ரேவணு ராத்திய சிவாசார்ய பாதர் ஸ்ரீமத் அகஸ்தியருக்குப் போதித்ததென்னவென்ருல்

ஆத்ம சக்தி விகாசேன சிவோ விஸ்வாத்மணுஸ்தித:
குடீ பாவாத் யதாபாதி பட: ஸ்வஸ்ய பிரசாரணுத்

ஒரு பட(வஸ்திர)மானதுதன்னிடத்திலுள்ள பிரசரண சக்தியி (விரிதலி) னுல் குடீபாவ (கூடார ரூப)த் தை எப்படி அடைகிறதோ அப்படியே பரசிவ பிரம்மம் தன்னிட அவிநாபாவத் (ஒன்றற்கேயுள்ள) திலிருக்கப்பட்ட சித் சக்தியின் விகாசத்தினுல் (உயிர்க்கொளியாயிருப்பதின் வெளிப்படுதலினுல்)விஸ்வாத்மகமாகப் பரிணமித்தி (கடவுளாக பேதப்பட்டி) ருக்கும். இதனுல் பரப்பிரம்மம் சக்தி விசிஷ்டமாவ (பெண்கலை மேன்மையான) தினுலேயே விஸ்வம், பிரகாசமாயிருக்கிறதென்று சித்த (நிச்சய) மாயிற்று. இப்படியே,

"உமாச ஹாயம்" "ஏக ஏவருத்ரோ"
"ஈசத ஈசானீபி:" "மாயினம்து மஹேஸ்வரம்"

இத்தியாதியான சஹஸ்ர சுருதிகள் ஸ்ரீ ஜெகதாசார்யரின் வாக்கியாநுகரணத்தைச் செய்துக்கொண்டிருக்கும். ஆனதினுல் சிவனை விட்டு சக்தி இல்லை. சக்தியை விட்டு சிவனிருப்பதில்லை. புஷ்பத்திற்கும், கந்தத்திற்கும், வாய்வுக்கும், ஆகாசத்திற்கும், நித்திய சம்மந்தமிருக்கும், மாதிரி பாசிவ பிரம்மத்திற்கும், சக்திக்கும், நித்திய சம்மந்தமிருக்கிறது. அப்பாசிவ

பிரம்மம் சக்தியுடன் யுக்தமா (கூடி) னல் அப் பிரம்மத்திற்குச் சிருஷ்டியாதி கிருத்தியங்களில் சாமர்த்தியமுண்டாகுமென்பதாக

நசிவேன விஞ சக்திர்ன சக்தி ரஹித : சிவ :
புஷ்ப கந்த வதன் யோன்யம் மாருதாம் பரயோரிவ
சிவ : சக்த்யா யுக்தோயதி பவதி சக்த : பிரபவிதும்.

என்றுச் சொல்லும் அபிப்பிராய யுக்தர்களுங்கூட ஸ்ரீ மதாசார்யரின் வாக்கியத்தை யநுசரித் திருக்கிறார்கள். இன்னும் அப்பரசிவ பிரமத்திலுள்ள சக்தியும், பிரம்மமும், எப்படி நித்திய மும், விபுவுமா யிருக்கிறதோ அப்படியே அதின் இச்சா ஞான சக்தியாத் மகமான சக்தியும், கூட நித்தியமாயிருக்கும். அச்சக் தியை மஹா மாயை என்றுச்சொல்லுவர். ஆனுலிதை சில வாசா ரியர்கள் மித்தியா ரூப(பொய்யுருவ)மென்றுச் சொல்லும் மாதிரி பஞ்சாசார்யரின் சித்தாந்தத்தில் சொல்லப் படுவதில்லை. ஏனென் றால் நித்தியமாக இருக்கும் தர்மம் நித்தியமே ஆவதினுல் மித்தி யா பூதமானதென்றுச் சொல்லவருவதில்லை. ஆனதினுலேயே

தர்ம ரூபா பரா சக்தி: தர்மரூப: பரசிவ:
தஸ்யா ஞவ்ருத ரூபத்வாத் பரா சக்தி: பரத்ம ன :
சர்வதா தஸ்வரூபேண பாதிபா பாதி பாசோரிவ பிரபா
தாதாத்மிய மனயோர் நித்யம் தர்ம தர்மி ஸ்வபாவத:
தத: ஸ்வதத்ர ரூபேண சிவ: சச்சித் சுகாத்மக :
சக்திஸ்து பாரதந்ரய்யேண விஸ்வோபா தான மிஷ்யதே.

என்று பரசிவ பிரம்மத்திற்கும்,சக்திக்கும், தர்மா தர்ம பாவத்தைப் போதித்திருக்கிறார். இப்படியே சூரியனிடத்துள்ள பிரபைக்கும், சூரியனுக்கும் எப்படி தாதாத்மிய (ஒருமைப்பட் டிருக்கும்) சம்மந்தமிருக்கிறதோ அப்படியே பிரம்மத்திற்கும், சக்திக்கும், தாதாத்மிய சம்மந்த மிருக்குமென்றும், சச்சித் சுகாத் மகனை "சிவன்" ஸ்வதந்திரமாகி விஸ்வத்திற்கு உபாதானனும், சக்தியும், பாரதந்திரய்யத்தினுல் உபாதான (துணைக்காரண) மா யிருக்கிறதென்று சொல்லியிருப்பர். இப்படியே பர சிவபிரம்ம மென்னும், பகவானை "குயவன்" ஸ்வதாதாத்மியா பன்னமான (மஹாமாயா) சக்தி யென்னும், மிருத் பிண்டத்தை (மண்ணுருண் டையை) எடுத்துக்கொண்டு மாயை என்னும், சக்கிர பிரமணத்வா ரா(சுற்றுதலினுல்)பிரகிருதி என்னும் கண்டத்தினுல்(கோலினுல்) பிரம்மாண்ட மென்னும், பாண்ட (குட) த்தை நிர்மித்திருக்கிறன் என்பதாக அபியுக்தரான "மஹேஸ்வரர்" உத்திரவு கொடுத்திருக் கிறர். இதனுல் சிவன் சக்திய ரிருவரும், நித்தியர். இப்படியே அவராலுற்பன்னமான விஸ்வமும், நித்தியம், என்று சித்தமா யிற்று. ஆனதினுல்,

நாசதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே சத :

அசத்து வஸ்துவினால் சத்வஸ்து வானது பிறப்பதில்லை. சத்வஸ்துவினால் அசத் வஸ்து பிறப்பதில்லை. ஆனதினால்

சத: சதேவ ஜாயதே இதி ராத்தயாம்த:

சத்தியமும், நித்தியமுமான பரசிவ பிரமத்தினிடத்தில் சத்ரூபமான விஸ்வம் ஜனிக்குமென்று சித்தாந்த மானதினால் சிலர் ஜகத்து மித்தை என்னும், அநித்ய மென்றும், பிரம்மத்தின் அத்தியாசத்தைச் சொல்லுவர். அவர் மதம் நமக்கு (வீர சைவருக்கு) அங்கீகாரமாகமாட்டாது. ஏனென்றால் ஒரு கூர்மம் (ஆமை) தன்னிடத்தி லடக்கிக்கொண்ட கை, கால்களை நீட்டி வெளியே கை, கால்களைக் காட்டிக்கொள்ளும். மறுபடியும், உள்ளுக்கு இழுத்துக்கொள்ள வெளியே காணப்படுவதில்லை. இதனாலதற்கு அவயவங்களில்லை என்றுச் சொல்லுவதற்காகுமா? இப்படியே பரசிவபிரம்ம சக்தியின் விகாசத்தி (விரிதலி) னால்விஸ்வம் (உலகம்) காட்டிக்கொள்ளும். சங்கோச (சுருக்க) திசையினால் ஸ்வஸ்வ ரூபத்தில் அடக்கிகக்கொள்ளும்.

யதோர்ண நாபி: ஸ்ருஜதே க்ரசதே.

இத்தியாதி வாக்கியங்களினால் "பகவதீ சுருதி" போதிப்பதென்ன வென்றால்:-ஒரு "சிலந்திப் பூச்சி" தன்னிட முள்ள சூட்மதந்துக்களை ஓட்டுவித்து விஸ்தாரமான தந்து ஜாலத்தி (நூல் வலையி) லெல்லாம் சஞ்சரித்துக்கொண்டுத் தனக்குப் போதுமானவுடனே தன் தந்து (நூல்) களைத் தான் சங்கோசம்(அடக்கம்)செய்துக்கொள்ளும். ஆனதால்

"பஹுஸ்யாம் பிரஜாயேயம், சோம்தராதம் தரம் பிராவிசத்"

இத்தியாதி சுருதி யுக்தி பிரகாரமாக சர்வக்ஞத் வாதி சக்தி வசிஷ்டமான பரசிவ பிரம்மம். ஜீவ பாவத்தை யடைய சர்வ கர்த்ருத்வம், சர்வக்ஞத்வம், பூரணத்வம், நித்யத்வம், பிராபகவத்ரூப சூட்சும சக்திகள். சங்கோச முள்ளவைகளானால் ஜீவன் பந்தித்தவனாவான் என்றால் அவனின் அப்ர திஹதம் (தடையில்லாத) சுவாதந்திரிய ரூபமான இச்சாசக்தி சங்கு சிதமாகி நான் பூரணனல்ல னென்றும், ஆணவ மல காரிய வியவ ஹாரத்தை யுண்டாக்குவது "ஞான சக்தி" சங்கு சிதமாகசர்வக்ஞத்வத்துக்கு பதிலாக கிஞ்சிக்ஞத்வத்தை யடைவதினால் நான் அறிய வில்லை என்னும், மாயாமலத்தின் காரிய வியவஹாரத்தை யுண்டாக்கும். இப்படியே கிரியா சக்தி சங்கு சிதமாகி சர்வ கர்த்ருத்வத்திற்குப் பதிலாக கிஞ்சித் கர்த்ருத்வத்தை யடைவதினால் நான் சுகமுள்ளவன், துக்க முள்ளவன், என்னும் காமிக மலத்தின் வியவ காரத்தையுண்டாக்கும். ஆனால் அப்பரசிவ பிரம்மம் மஹாமாயா ஆவிருதமாக (மாயையினால் மறைபாக) வும், இச்சர்வக்ஞத்வாதி சக்தி

களே கால, கலா நியதி ராக, அவித்யா ரூபமாகப் பரிணமித்துப் புருஷனைப் பந்தித்துப் பசுவாகச் செய்து பஞ்ச கஞ்சுகத்தினல் ஆவரிக்கும் (ஐந்து சட்டையினல் மறைக்கும்.) இந்த ஸ்தூல சிதசித்ரூப சக்தி விசிஷ்டனுன ஜீவன்.

பஹூனும் ஜன்மனு மந்தேக் ஞானவான் மாம் பிரபத்யதெ

என்னும் வசனத்தைப்போல அநேக ஜன்மார்ச்சித (அநேக ஜன்மத்தில் சம்பாதித்த) சிவபூஜாதி சத்கர்ம வசத்தினல் மலவாசனை யில்லாதவனுகி ஸ்ரீகுரு கிருபா வசத்தினல் வீரசைவ (லிங்காயுத) மதத்தில் ஜனன மெடுத்து ஸ்ரீமதாசார்யரிடத்தில் பக்தியுள்ளவனுகிச்சிவலிங்கத்தை யடைய அபேக்ஷையுள்ளவனுகவும் தாத்ருச (அவ்விதமான)கிஞ்சிக்ஞத்வாதி சக்திகள் பக்குவங்களாகி பக்தி ரூபத்துடன் பரிணமிக்கும். அக் காலத்தில் இச்சீவன், அங்கபத (லிங்காங்க) வாச்சியனுகுவான் அல்லது சிவ சமஸ்காரத்தை யடைந்த பிறகு.

அம் பரமாத்மானம் கச்சதீதி அங்கம்.

என்றால் பரப்பிரஹ்ம சொரூபத்தை யடைபவனுக்கு அங்கமென்னும் பெயர் சார்த்தகமாகும். (அர்த்தத்தோடு கூடிய தாகும்.) தநுத்ரய கதாநாதி மலத்ரயம் சௌகுரு:

தீக்ஷாத்ரயேண நிர்த்தத்க்வா லிங்கத்ரய முபாதிசத்

என்றால் ஸ்ரீ மதாசார்யர், குண்ட மண்டப, பஞ்சகலச ஸ்தாபன பூர்வகம். சிவகலா வின்யாச (சிவகலையைப்பதித்தல்) ரூபம் சிவலிங்க தாரணுத் மகமான கிரியா தீக்ஷையினல் பிரகிருதியாதி பிருதிவ்யாந்தமான ஸ்தூல சரீர சம்பந்தமான காமிய மலத்தைக் கழிக்கவும் என்றால், ஸ்ரீ மதாசார்ய பாதரினு லுபதேசிக்கப்பட்ட இஷ்ட லிங்க தாரணத்தினல் (சம்பந்தத்தினல்) பிரகிருதியாதி பிருதிவ்யாந்தங்களான 24-தத்துவங்கள் சுத்தியாக (தனக்கு வசமாக)வும் காமிக மலம் தனக்குகாரணமானகிரியாசக்தி ரூபமாகும். ஸ்ரீ மதாசார்யவர்யரின் மஹாமந்திர உபதேசரூப மந்திர தீக்ஷையினல், மாயை முதல் வித்தியா தத்துவாந்தமான பஞ்சகோச ரூப சூக்ஷமாங்கத்தி லிருக்கப்பட்ட மாயாமலத்தை அகற்றவும்,(என்றால் ஸ்ரீமதாசார்யரா லுபதேசிக்கப்பட்ட பிராண லிங்கயோகத்தினல் மாயாதி வித்யாந்தமான ஆறு தத்துவங்கள் சுத்தியாகித்தனக்கு வசமாகவும்)மாயாமலம் தனக்குக்காரணமான ஞானசக்தி ரூபமாகும். ஹஸ்த்த மஸ்தக சம்யோகரூப வேததீக்ஷையினல் காரண சரீரமான ஆணவமலத்தை சுத்தி செய்ய (என்றால் ஸ்ரீ மதாசார்யரா லுபதேசிக்கப்பட்ட சர்வத்ர பூரணமாயிருக்கும். 'சத்ரூபமான' சித்சக்தியினல் யுக்தமான பாவலிங்கத்தினல் சுத்தமாகத்) தனக்குக் காரணமான இச்சா சக்தி ரூபத்தை யடையும். இதுவே சுத்த சைதன்ய ரூபியான பிரஹ்மஸ்வ ரூப

முக்தி. அல்லது லிங்காங்க சாமரஸ்யம் என்பதாக ஸ்ரீ மதாசார்ய பஞ்சகத்தினால் பிரதி பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் உமியும் உட்தொலிகளிரண்டும் நீங்கிய அரிசி எங்ஙன முளைக்காதோ அங்ஙனமே திரி மலங்கள் நீங்கிய ஜீவன் மறுபடியும், சம்சார ரூப பீஜத்தை யடையான் அல்லது சுத்த சிவபர பிரஹ்ம ஸ்வ ரூபத்தையே யடைவன். ஆனால் ஸ்ரீமதாசார்ய ரனுக்கிரகத்தினால் சிவ லிங்க (சிவஸ்வ ரூப) த்தையடைந்து பிராரப்த முள்ளவரைக்கும், சிவாகமம், சிவசூத்ரம் பிரஹ்ம சூத்ராதி வேதாந்த சிந்தனைகளை யெப்போதும் செய்துக்கொண்டு வீரசைவ மதத்தின் நித்திய நைமித்திக கிரியைகளைச் செய்துக்கொண்டு கிரியாஞான சாமரஸ்யத்துடன் ஸ்ரீ ஜகதாசார்ய ரேணுக சிவாசார்யராலுபதேசிக்கப்பட்ட ஷட்ஸ் தலாசரணையை நடத்திக்கொண்டு இஷ்ட ப்ராண பாவ லிங்கங்களின் உபாசனையை ஸ்ரீமதாசார்யரின் உத்திரவுபடிக்குக் கிரமமறிந்து செய்துக்கொண்டும்.

மானவ: சிவயோகேன சிவோ பவதி நிச்சயம்.

என்னும் சிவ வசனத்திற்கு அனுசரணையாக கீட பிரமர (குளவி, புழுவு) நியாயத்தைப்போல சிவஸ்வரூபத்தை உபாசகன் நிச்சயமாக அடைவான். இதுவே ஸ்ரீமத் பஞ்சாசார்யரினால் பிரதிபாதிக்கப்பட்ட சக்தி விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் சுருக்கமான ஸ்வரூபம். இதற்கு லிங்காங்க சாமரஸ்யமென்று சொல்லுகிறார்கள். லிங்காங்க சாமரஸ்யம், மறுபடியும் பிரத்தியேகமாக விரித்துரைக்கப்படும். "வஸ்துத:" பூர்வோக்த தூல சூக்ஷ்ம சக்திகளினால் பேதயுக்தரான சிவஜீவரின் ஐக்யமே சக்தி விசிஷ்டா (சிவா) த்வைதம் ஆனால் பரசிவ பிரம்மமே மூன்று காலங்களிலும் அஹங்காரத்திற்கு விஷயமானதால் தானே பிரபஞ்ச ரூபமாகப் பரிணமித்து. "யதோர்ண நாபி: ஸ்ருஜதே க்ரசதெ"

என்னும் வாக்கியத்தைப்போல ஷட்திரிம் ஷட் 36-தத்துவ ரூபமாகப் பரிணமித்து அக்கினியில் பொறிகள் உதயமாகி லீனமாகுமாறு தன்னம்ச பூதரான ஜீவர் அனேகர்களை நிர்மித்து மறு

---

குறிப்பு:— உமிக்கடியிலுள்ள உட்தோல்களிரண்டும் மிஷினிலரைத்த அரிசியி லிருப்பதில்லை யாகையாலிதைப் புசிப்பதினால், பெரி பெரி நீர்க்கோவை) யென்னும் வியாதியுண்டாகிறதெனவும் உலக்கையால் குத்தின அரிசியைப் புசிப்பதாலிவ்வியாதியுண்டாவதில்லை யெனவும் அநேக டாக்டர்கள் நிச்சயித்திருக்கிறார்கள்.

நீர்க்கோவையின் லக்ஷணங்களாவன, கால்கள் வீங்கி பிகுவாயிருக்கும். சிறுநீர் குறையும், சரீரமும் முகமும் வீங்கி சுவாசமுட்டலுண்டாகும், கரசரணங்கள் ஸ்தம்பனமடையும், வாந்தியுண்டாகும், க்ஷீணம்காணும், வியாதி பிறந்து. 2-3 வாரத்தில் மரணம் சம்பவிக்கும்,

படியும், தன்னிடத்தில் லயம்செய்து கொள்வான். அது யெப் படியென்றால்:- சிருஷ்டி, திதி லயம் திரோதானம் அநுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்தியங்கள் பரசிவனிடத்தில் ஸ்ரீமதாசார்யரினால் ஸ்வீகரிக்கப்படும். இன்னும் முப்பத்தாறு தத்துவங்களின் ஸ்வரூபம் மறுபடியும், விசாரிக்கப்படும். அவைகளின் ஞானம் முக்திக்குக் காரணமாயிருக்கும். இன்னும் இச் சித்தாந்தத்திற்குச் சிவாத்வைத மென்றும், விசேஷாத்வைத மென்றும், பரியாய நாமங்களுண்டு. சத்தி விசிஷ்டாத்வைத மென்பதில் காட்டின அர்த்தத்தின் உற்பத்தி சிவாத்வைத மெனவும், சித்திக்கும். இன்னும் விசேஷாத்வைத மென்றால்.

விஸ்ச சேஷஸ்ச விசேஷௌ தயோரத்வைதம் விசேஷாத்வைதம்

வி:- என்றால் பரமாத்மன்' சேஷ:- என்றால்' ஜீவன்"

இவரிருவரின் அத்வைதம்:- என்றால் "ஏகீகபாவம்"

விஸ்சக்ஷ ஷிவ்யோம்னி ஜாதே பரமாத்மனி பக்ஷணி.

இதிகோச பலாத், பரமாத்ம வாசகமாகும். "வாத்யுத் பாதய தீதிவி:,, என்னும் உற்பத்தி பலத்தினாலும், ஜகத்காரணமான பிரமம், கிரகிக்கப்படுவது. "யதாக்னேர் விஷ்பு லிங்கா:" இப்படிப்பட்ட சுருதி தாத்பர்யபலாத் சேஷ சப்தத்தினால் ஜீவன் கிரகிக்கப்படுவான். "யதாநத்ய: ஸ்யந்தமாநா:" இப்படிப்பட்ட சுருதி யுக்தியின் படிக்கு, ஏதாத் ருசமான உக்த சக்தி விசிஷ்ட ஜீவாத்ம பரமாத்மரின் சாமரஸ்யம் போதிக்கப்படும். இன்னும், பேதா பேதங்களிரண்டும், சுவர்ன கடக, அஹி, குண்டல, நியாயத்தைப்போல நம் மதத்தில் பாரமார்த்தங்களாயிருக்கும்.

தஸ்மாத்வயம் ஸ்வாபாவிக சர்வ சுருதி சமன்வய பேதாபேத விசேஷாத் வைத வாதின இதி ராத் தாம்த :

என்னும் ஸ்ரீபதி சிவாசார்யருடைய வாக்கியத்தின் பூர்வோக்தமாக நம் அபிப்ராயத்தையே பிரபலம் செய்து கொண்டிருந்தாலும் இச் சித்தாந்தத்தை யறியாத சிலர் சக்தி விசிஷ்டாத்வைதம் ஸ்ரீகரபாஷ்யக்காரருக்கு அபிமான மில்லையென்றுச் சொல்லுவர். ஸ்ரீ பதிபண்டிதரின் அபிப்பிராயத்தை யறியாமல் அப்பாஷ்யத்தை உதாரணமாகச் சொல்லுபவரின் புத்தி விசார சூனியமாயிருக்கு மென்பதை வித்வாம்சரே யூகித்துக்கொள்ளலாம். வாசகரே இப்படிப்பட்ட நிகமாக மாசார பூதமான வீரசைவ(லிங்காயுத) சித்தாந்தத்தை ஸ்ரீமதாசார்யர் ஸ்தாபித்துத் தன்மூலமாக அசேஷ பிரபஞ்சத்திற்கு முக்தியைக்காட்டி அநுசரிக்கச் செய்து தங்கள் சம்பிரதாயத்தை நிலைநாட்டினார்கள். இப்படியிருந்தும் சிலர் பரமபவித்ரமான மதாசார்யரின் சித்தாந்தத்தைத் தெரியாமல் மதாசார்யரென்றால் எதிர்த்து நின்று அன்யாசார்யரின் சித்தாந்தத்திற்கு மோஹிதராகி மறுபடியும் பவ பந்தத்திற்கு யீடாகி பரதர்மாஸ்ரய ஜன்னிய பாவத்தினால் சுழன்று கொண்டுயிருப்பர்.


ஸ்வதர்மே நிதனம் ஸ்ரேய :,, என்னும் வாக்கியத்திற்கனுகுணமாக ஸ்வசித்தாந்தத்திலும்,ஸ்வசித்தாந்த ஸ்தாபனு சார்யரிடத்திலும், பக்தி சிரத்தைகளை வைத்து வீரசைவ (லிங்காயுத) மத மென்னும் மந்திரத்தை (கோவிலை)ப் பத்திரப்படுத்துவது லிங்காயுத மதத்தில் ஜனனமெடுத்த சர்வருக்கு முக்கியமானதாயிருக்கிறது. வீரசைவ மத மீமாம்சையின் சுருக்கம் முற்றிற்று.

---

## தீக்ஷையின் பலாபலன்கள்

தீக்ஷை செய்துக்கொண்டவர் சமயாசாரம் தப்பினுல் பிராயச்சித்தஞ் செய்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிட்டாலும் தப்பி நடந்து வந்தாலும் பிசாசபதங் கிடைக்கும். சைவ தீக்ஷை செய்துக்கொண்டு சமயாசாரம் தப்பாமல் நடப்பவன் சரீர முடிவில் சிவபதத்தை யடைகிருன். சைவ சந்தியை யொருபோதும் விடக்கூடாது. விட்டால் நரகம் வரும், தீக்ஷை பெற்றவன் மரணமடைந்த பின் சரீரத்திற்கு விதிக்கப்பட்ட சம்ஸ்காரமாகிய அந்த்யேஷ்டியினுலே, சிவஸ்ரூபத்தையடைந்து வியாபகத் தன்மையினுலே சர்வக்ஞத்வாதி குணங்களுள்ளவனுய் பரமசிவனுக்குச் சரியான ரூபமுள்ளவனுய் அவனது பஞ்ச கிருத்தியம் செய்யச் சக்தியிருந்தும் தான் ஈஸ்வரனல்லாதவனுய் ஸ்வபாவீகமான ஆநந்தமே நிறைந்தவனுய் சமஸ்த முக்தான்மாக்களாலும் சூழப்பட்டவனுய் சிவனுக்குச் சமானமான சந்தோஷமுள்ளவனுயிருக்கிருன்.

நன்ருகத் தீக்ஷை செய்துக்கொண்டு சமயாசாரந் தப்பாமல் நடப்பவன் சிவபதமடைவான் தீக்ஷிதனுனபோதிலும் சமயலோபம் வந்து பிராயசித்தம் செய்யாவிடில் 100-வருஷகாலம் பிசாச பதமடைந்து பிசாசபோக மநுபவித்த பிறகு சிவபதமடைவான், தீக்ஷையிற் குறைவு வந்தவனுக்கு ஒருபோதும் சிவபதமில்லையெனகிருர். கர்மாநுஷ்டானத்தில் பல சந்தேஹமுள்ளவராயுமிருப்பவர் ஒருபோதும் சிவபதமடையமாட்டார்கள். இன்னும் சிவஞ் ஞான ரூபமான சமயாதிகளில் வழுவுதல் புத்தி பூர்வக மென்றும், அபுத்தி பூர்வகமென்றும், இருவகையுண்டு இதில் 1-வது புத்தி பூர்வகமாவது தெரிந்தே சோம்பல் முதலானவற்ருல் தப்பிப் போதல் அந்த்யேஷ்டியினுல் சுத்தியுண்டாகாது, பிராயச்சித்தம் செய்யவேண்டும். மேலும் புத்திப்பூர்வகமாகத் தப்பிப்போனவருக்கு, 100, வருஷம் பிசாச பதங்கிடைக்கும். 2-வது, அபுத்தி பூர்வகமாகவாவது ராஜபயம் சோரபயம் முதலானவற்ருல் தெரியாமல் தப்பிப்போதல் சமயாசாரலோபம், இதற்கு அந்த்யேஷ்டியால் சுத்தியுண்டாகும். (இஃது சித்தாந்த சாராவளி.)



வெகுகாலமாகப் பேர்போன.

# மாந்த சஞ்சீவி எண்ணெ.

குழந்தைகட்கு காமதேனு போன்றது
பாலியர்கட்கு—கற்பகதரு போன்றது
பெரியவர்கட்கு தேவாமிருதம் போன்றது

## (1) தீரும் வியாதிகள்.

சகல மாந்தங்கள், ஏங்கல், இறைப்பு, தெக்கத்திக்கணை, அசதி ஜன்னி, முகவாத ஜன்னி, முதலான ஜன்னிகள் 13-ம் பளவலை, முட்டடப்பான், சுரம், சீதளம், அக்கினிமந்தம், அரோசகம், கபக்கட்டு, நெஞ்சுவலி, தொண்டைவலி, வயிற்றுவலி, வயிற்பொருமல், வயிற்றில்பலவகை பூச்சிகள், கரப்பான்கள், கிரந்திகள் செவாப்பு, படை, சொரி, சிரங்கு, படர்தாமரை, ஈசுரிக்கை, புண்கள், கடிவாளப்புண், கெற்பவூரல், மேகவூரல், மேகப்படை, கட்டிகள், சுரக்கட்டி, கக்கிருமல், தொண்டைக்கட்டு, சகல காமாலை, மலக்கட்டு, அண்டவாய்வு, கல்லடைப்பு, மகோதரம், இளப்பிளைவாத முதலான சகல வாதவலிகளும், சர்வதோஷங்களும், தீரும்.

## (2) அளவு

நான்கு நாள் குழந்தைக்கு, 4 துளியும் ஒருமாதக் குழந்தைக்கு, 10 துளியும் 3 மாதக் குழந்தைக்கு, 15 துளி அல்லது ஒரு காசளவும் 3 வயது முதல் 6 வயது வரையில், 50 துளி அல்லது காலணா அளவும், 12 வயது வரையில் 70 துளியும், பெரிய வர்களுக்கு 100 துளி அல்லது அரையணா அளவும், அவரவர்கள் சரீரத்திற்குத் தக்கபடி கூட்டியும் குறைத்தும் கொடுக்கவும்.

## (3) அநுபானம்

குழந்தை கட்கும் பாலர் கட்கும் தாய்ப் பாலிலாவது, துணியில் வடிகட்டின வெள்ளாட்டுப் பாலிலாவது, பசுவின் பாலிலாவது கொடுக்கவும். பெரியவர் கட்கு வெள்ளாட்டுப் பால், பசுவின் பால், தேங்காய்ப் பால், சுக்கு கஷாயம் இவைகள் ஒன்றில் சீனிசர்க்கரையும் இவ்வெண்ணெயும் சேர்த்துக் கொடுக்க நன்று.

## (4) பத்தியம்

வியாதி யுள்ளவர்களுக்கு எண்ணை குடுத்த நாள் முழுதும் அரிசிநொய் அல்லது ரவை முதலிய கஞ்ஜியில் உப்பு சேர்த்து சாப்பிடவும். வெள்ளாட்டுப்பால், பசுவின் பால், சுக்குத்நூள் இவைகளும் சேர்த்துக்கொள்ளலாம். ரொட்டி, உப்புகலந்த சாதம் சாப்பிடலாம். புளி, புகையிலே, வாய்வு பதார்த்தங்கள், இனிப்பு வகைகள் சீதள பதார்த்தங்கள் கூடாது.

வியாதி யில்லாதிருந்து எண்ணை குடுத்தால் எவ்வித பத்தியமும் இருக்கவேண்டியதில்லை. புளிகலந்த மிளகுரசம் சாதம் சாப்பிடவும், நன்றாய் பேதியாகும்.

## (5) பேதிநிற்க

பேதி அதிகமானால் வசம்பு சுட்ட கரியாவது மாங்கொட்டைப் பருப்பாவது பாலிலாவது குளிர்ந்த ஜலத்திலாவது தேனிலாவது கலந்து உள்ளுக்குக் குடுத்து வயிற்றின்மீதும் தடவ பேதி நிற்கும் மோர்சாதம் சாப்பிட்டாலும் பேதி நிற்கும்.

வியாதி அதிகமாயிருந்தால் கம்பளித்துணி யென்னும் பிளானல் துணியை கொதிவென்னீரில் நனைத்துப் பிழிந்து முதுகு வயிறு மார்பு கழுத்துவரையில் ஒற்றடமிட்டு ஈரம்துடைத்து இவ் வெண்ணையை மேலுக்கு தடவவும்.

எண்ணை குடுத்தபிறகு வாந்தியாகி பேதி யாகாதிருந்தால் நெஞ்சிலிருந்த பித்தம் கபம் மாத்திரம் நீங்கிற்றென அறிந்து சற்று நேரம் கழித்தாவது மறுநாளாவது பூரா அளவு எண்ணைகுடுக்க பேதியாகி சுகப்படும். மறுநாளும் வியாதி கொஞ்சமிருந்தால் இவ்வெண்ணையில் கால்பங்கு அளவு உள்ளுக்குக் குடுத்து மேலுக்கும் தடவவும்.

## (6) வியாதி யில்லாத குழந்தைகட்கு

வழக்கமா இதை ஒருவாரம் அல்லது 10 - 15 நாளைக் கொரு தடவையாவது வயிற்றில் மந்தம், புளிப்பு, பொருமல், மலக்கட்டு, வயிற்போக்கு, முதலானவைகளுண்டாகி வயிர் சீர்கெட்டிருக்கும் போதாவது குழந்தைகளைக் கையிலெடுத்தால் பாரமாயிருக்கும்போதாவது உடனே இவ்வெண்ணை குடுத்துவந்தால் எவ்வகை வியாதியுமணுகாது.

**விலை சீசா 1-க்கு ரு. 0—12—0**

# வாத நிவாரண தைலம்.

(1)—அளவு, அனுபானம்.

பெரியவர்கட்கு வேளை யொன்றுக்கு எட்டிலொருபங்கு வீதம் தினப்பிறதி காலை ஒருவேளை வீதம் 3 நாள், அல்லது 6 நாள், 6 வேளை சாப்பிடவும். 3, 4, தடவை பேதியாகும். அவரவர்கள் சரீரத்திற்குத் தக்கபடி அளவைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கவும் இதைதனியாகவாவது வடிகட்டின வெள்ளாட்டுப்பால், பசுவின் பால், தேங்காய்ப்பால், சுக்குகஷாயம், சர்க்கரை, இவைகளிலாவது சேர்த்து சாப்பிடவும்.

(2)—பத்தியம்.

புளி, புகையிலை, வாய்வுபதார்த்தங்கள், ஒருவாரம்வரையில் கூடாது. வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், நெய், சர்க்கரை, துவரம் பருப்பு பயித்தம்பருப்பு, உப்பு சேர்க்கவும். தினப்பிறதி சாப்பிடுபவர்களுக்கு பத்தியமில்லை.

(3)—தீரும்வியாதிகள்.

சரீரக்குத்தல், குடைச்சல், நடுக்கல், நடுக்குவாதம், தனுர்வாதம், சூலை, சூதகவலி, பக்கசூலை, பாம்புவிஷமுதலான சகலவிஷக் கடிகளும், வயிற்றுநோய், வயிற்றுவலி, மாரடைப்பு, மார்புநோய், மார்புவலி, வாதகுன்மம், வாதநோய்கள், விஷஜன்னி, வெதர்வாய்வு வெதரில்சூலை, வெதரில்கட்டிகள், முதலான 8- வகை அண்டவாதமும் சகலவாய்வுகளும் வலிகளும் நாள்பட்ட வியாதிகளும் தீரும்

அண்டவியாதிகட்கு இம்மருந்து உள்ளுக்குச் சாப்பிடுவதுடன் கழற்சிப்பருப்பு 1- இடையும், வெள்ளைப்பூண்டு, சுக்கு, நவாச்சாரமிவைகள் வகைக்கு $\frac{1}{2}$ இடையும் கோழிமுட்டை வெண்கரு விட்டரைத்து அண்டத்தின்மீது 3, நாளல்லது 6, நாள் பூசவும்.

ஒரு பீஜம் பருமனுவதும் வற்றுவதும் தொட்டால் வலியில்லாமலுமிருந்தாலிது ஹிரணியவென்னும் ஆபரேஷன் வியாதியாகையாலிது சவுக்கியமாகமாட்டாது.

சூதகவலி,சூதகவயிற்றுவலி, முதலான கெற்பமுண்டாகாபலுள்ள ஸ்திரீகள் மாதவிடாயானநாள் முதல் தினப்பிறதி காலையில் 3, நாள் அல்லது 6, நாள் சாப்பிடவும். சூதகசம்மந்தமான வியாதிகளனைத்தும் மற்றும் கெற்பபின்னகோளாறுகளும் தீர்ந்து கெற்பத்தை நாசப்படுத்தும் புழுக்களும் செத்து உடனே கெற்பமுண்டாகும்

பலஹீனமுள்ள ஸ்திரீகள் மாதவிடாயானநாள்முதல் 3- நாள் சாப்பிட்டுப் பிறகு மறுமாதம் மாதவிடாயானதும் மறுபடி, 3- நாள் சாப்பிடவும். அல்லது தினப்பிறதி காலையிலாவது மாலையிலாவது படுக்கைக்குப் போகும்போதாவது காலரை அல்லது அரையரை அளவு தினமொருதடவை கால், அரை, ஒருமாதம் சாப்பிட்டு வர மீதமுள்ளவியாதிகளும் மலபந்தமும் சகலவியாதிகளும் தீரும். பெரியவர்கட்கு 8 வேளைக்கும், சிறுவர்கட்கு 16 வேளைக்கு, முள்ள

சீசா.—1 க்கு விலை. ரூ 2—0—0

# இரண சம்ஹார தைலம்.

சொரி. சிரங்கு, புண்கள், புரை ரணங்கள் ஆராத அழிவிரணங்கள், குழந்தைகளுக்கு காலில்காணும் கரப்பான்புண், கடிவாளப் புண், ஈசுரிக்கை, முதலானவைகளை சாணத்தாலாவது சோப்பினாலாவது தினப்பிரதி தேய்த்துக் கழுவி சுத்தவட்டி இத்தைலம் தடவிக் கொண்டுவரவும், ரணமதிகமிருந்தால் குங்குமம் வைக்கவும் மூன்றுதினத்தில் பூரண சுகமுண்டாகும் ராஜபிளவை, முதுகுபிளவை, முதலிய ஆராரணங்களுக்கு இத்தைலம் தடவி ஊதாங்குழலால் ஊதிய பிறகு இத்தைலத்தில் நனைத்த துணியை புண்ணின் மேல் மூடிவர எத்தனை கண் (முளை) வைத்திருந்தாலும் சஸ்திரசிகிச்சையின்றி குணமாகும். இதுஉண்மை, தற்புகழ்ச்சியல்ல. இரணங்களுக்கு இத்தைலத்திற்கு நிகரான தைலம் வேறுகிடையாது.

விலை சீசா 1க்கு ரூ. 0—6—0

## வயிற்றுக் கடுப்பு பவுடர்,—பல்பொடி.

அளவு — அனுபானம்

குழந்தைக்கு 1 முதல் 2 குன்றிபிடையும். சிறுவர்க்கு 4 குன்றியிடையும், பெரியவர்க்கு 8 குன்றிபிடையும். பாலிலாவது தேனிலாவது மோரிலாவது சர்க்கரையிலாவது தினமிருவேளை மூவேளை வியாதிக்குத் தக்கபடி 2 முதல் 6 நாள்வரையில் சாப்பிடவும்.

தீரும்வியாதிகள்

அதிசாரம், அஜீர்ணபேதி, சீதபேதி, ரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுவலி, கிறாணி, வாய்ப்புண். இவைகள் தீரும். கடுத்தவியாதிகளுக்கு அரைமாதம் சாப்பிடவும்.

பத்தியம்

புளியம்பழபுளிப்புநீக்கி எலுமிச்சம்பழபுளிப்பு சேர்க்கவும்.

---

பல் தேலக்கினபிறகு யிதில் ஒருசிட்டிகை எடுத்து பல் துலக்கிவர தந்தசூலை, பல்கூச்சம், பல்லசைவு பல்லரணை ஈறுகரைதல், ஈறுவீக்கம். ரத்தம்வருதல். நாக்ககூரம், வாய்ப்புண், வாய்நாற்றம், இவைகள் தீரும். பல்லசைவு நீங்கி கெட்டிப்படும்.

சீசா 1 க்கு விலை, ரூ 0—5—0

இடைக்குமிடங்கள்—வைத்தியம் செங்கைப்ப பண்டாரம் குமாரர் குருசாமி பண்டாரம், குகை, சேலம்.

பண்டிட். B. S. சாஸ்திரிகள்,

போட்டோ சாமான் வியாபாரம், நெ. 10 பஜார் தெருவு சேலம்

---

ராமகிருஷ்ண பிரஸ், வி. மார்க்கெட், சேலம்.

# நூதன சஜ்ஜை.

புதுமாதிரி சிறந்த, அதி சௌந்தர்யமான சஜ்ஜை (லிங்கக் காய்) இதைச் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆண் பெண்களனைவரும் எவ்வித வித்தியாசமுமின்றி சகலரும் அணிந்து கொள்ளத் தகுதியானது. குனிந்து, வளைந்து நிமிர்ந்து ஓடிவேலை செய்தாலும், மார்புக்கு அடிபடாமலும் அதிக கனமும், பருமனுமில்லாமலும், வெகு திறமையான வேலைப் பாடுடன் செய்யப்பட்டது. இதில் உபயோகமில்லாத விடங்களும் அழுக்கடையுமிடங்களும் பாசம் பிடிக்குமிடங்களும், கிஞ்சிற்றுமிருப்பதில்லை. நூற்கயிறு சீக்கிரம் துண்டிக்காத (அறுந்து போகாத) மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் கீழ்மேல் பத்தவைப்புகளில்லாமலும், இருபக்கங்களிலும் அஷ்டதள (எட்டுப்பட்டை) கெட்டி குண்டுகள் அமைக்கப்பட்டிருப்பதால், இது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு நீடித்திருக்கும். அளவிலும் சிறிய உருவமாகையால் இதின் மீது சொக்காயணிந்தாலும் மார்புக்குமேலுயர்ந்து காணப்படுவதில்லை,

சுத்த வெள்ளி சஜ்ஜை 1-க்கு விலை ரூ. 5—0—0 முதல் ரூ. 7—0—0 வரையிலும், தங்கத்தில் தேவையானால் 10 சவரன்களும் இதற்கு கூலி ரூ. 10—0—0-ம் சேதாரம் அரைவராடையும் ஆகிறது. இவைகள் தேவையுள்ளவர்கள் முன் பணமனுப்ப வேண்டும். பதில் விரும்புவோர்கள் ரிப்ளை கார்ட் எழுதவும்.

## வைத்தியாம்சம்!

56-பக்கமுள்ள புஸ்தகம், இதில் தாய்மார்களின் விஷங்யகளும், சிசுக்(குழந்தை)களுக்கு வரும் நோய்களும் நோய் வரும் காலங்களும், மற்றும் பலவித தோஷங்கள், மாந்தம், கணம் இவற்றினுட் பிரிவு 8 வகைகளின் விபாங்களும் கிரந்தி இருவகையும், பாலக்கிரகதோஷங்கள் 16-பிரிவும். வைசூரியில் 14, விதமும் வாங்கிபேதியில் 3 விதமும், பிளேக்வியாதியி விருவிதமும் முடக்குமாரி, இன்புளுயன்சா சுரம் முதலான வியாதிகளின் குணங்குறிகளும் அவ்வவ்வகைக்குள்ள வாய்தா நாட்களும், பத்தியாபத்தியங்களும், அவரவர்கள் செய்துக்கொள்ளும் அவுஷதங்களும் ஹோமசங்களும், பூசைகளும், மந்திரங்களும் பரிகார (சிகிச்சை) களும் சில முக்கியமான மருந்துகளின் உபயோகங்களும் ஒருங்கு சேர்த்து அனைவரும் சுகமுறக்கருதி உலோகோபகாரமாக வெளிப்படுத்தியது. இப்புஸ்தகம், தேவையுள்ளவர்கள் இரண்டணா தபால் முத்திரையுடன் விலாசம் தெரிவிக்கவும்.

வ:

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.

மலர் 4. ரிஜிஸ்டர் நெ. M. 3157.

மாத வெளியீடு

தனிப் பிரதி விலை அணு 2.



சிவமயம்.

சுத்தஸ்படிக சம்காசம் சுத்த வித்யாப்ரதாயகம்
சுத்த பூர்ணம் சிதாநந்தம் சதாசிவ மஹம் பஜே

# சிவ பக்தன்.

## பவ—வருஷம் கார்த்திகை—மாதம்.

### பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | துவைதமதம் ... | 145 |
| 2 | அத்வைத மத நிர்ணயம் ... | 147 |
| 3 | விசிஷ்டாத் வைத மதம் ... | 149 |
| 4 | ஊர்த்துவ சிருஷ்டிஜர் ... | 150 |
| 5 | வீரசைவ சப்தத்திற் கர்த்தம் ... | „ |
| 6 | லிங்க போகோபபோகங்கள் ... | 152 |
| 7 | சிவாத் வைத நிர்ணயம் ... | 253 |
| 8 | வீரசைவரில் மூன்று விபாகங்கள் ... | 155 |
| 9 | தேஹ நாச காலம் ... | 157 |
| 10 | மோக்ஷ சாதனம் ... | 159 |
| 11 | ஹிந்து தர்ம வியாபகம் ... | 163 |
| 12 | வீரசைவ பஞ்ச பீடங்கள் ... | 166 |
| 13 | பஞ்ச பீடாதீசர்கள் ... | 174 |
| 14 | விதேசங்களில் சிவாலய வியாபகம் ... | 178 |
| 15 | சிவயோகம் ... | 183 |
| 16 | வீரசைவ மதமீமாம்சை ... | 186 |
| 17 | தீக்ஷையின் பலா பலன்கள் ... | 194 |


சேலம் செவ்வாய்ப்பேட்டை, கோல்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது